# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2052 ஆவணி / ஆகஸ்ட் 2021 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


*தேசத்தின் குரல்*

## நீட்: வரலாறு வைத்துள்ள தேர்வு!



அனிதா தொடங்கி இந்த ஆண்டு தனுஷ், கனிமொழி, சௌந்தர்யா வரை 15 இளம் உயிர்களை நீட் அரக்கன் காவு வாங்கியுள்ளான். தமிழ்நாடே கூடி எதிர்த்தாலும் நீட்டைத் திணித்தே தீருவோம் என்று பிடிவாதமாகச் செயல்படும் நரேந்திர

## உள்ளே...


1. தேசத்தின் குரல் -1
2. பேராசிரியர் மருதமுத்து முகநூல் பதிவுகள் -5
3. வேளாண் வரவு-செலவுத் திட்டத்தை (2021) முன்வைத்து...-20
4. *பாரதியார் குமுறல்-* -27
5. தேராத் தேர்தலும் காணாக் கொள்கையும் -30
6. பொருளாதார சீர்திருத்தமா, சீரழிப்பா? -40
7. வெள்ளை அறிக்கை கூறுவது என்ன? -51
8. திருத்த நிதி நிலையறிக்கை அறிக்கை 2021-22 -71
9. வேளாண் நிதிநிலை அறிக்கை 2021-22 -83
10. தமிழ்த் தேசம் வெளியீட்டுக்குழு – 97



பதிவு எண் :R.Dis. No. 1964/2014

மோதியின் பாசக அரசுதான் தொடர்ந்து வரும் இந்த உயிரிழப்புக்கும், பல்லாயிரம் மாணவர்களின் வாழ்விழப்புக்கும் பொறுப்பாகும்.

தற்கொலை கோழைத்தனம் அல்லவா? மருத்துவம் மட்டும்தான் கல்வியா? ஒரே ஒரு தேர்வில் தோற்றுப் போனால் குடிமுழுகிப் போகுமா? சின்னஞ்சிறிசுகளின் மனத்தில் மருத்துவக் கல்வியின் மீது இப்படி ஒரு மயக்கம், இப்படி ஒரு வெறியார்வம் வளரப் பெற்றோரும் மற்றோரும் எந்த அளவுக்குப் பொறுப்பு? இந்தக் கேள்விகள் எல்லாம் கேட்கத்தான் வேண்டும் என்றாலும், தமிழ்நாட்டு மக்கள் மீது அவர்கள் கட்டோடு எதிர்க்கும் நீட்டைத் திணிக்க நியாயம் உண்டா? என்பதுதான் ஒரு தேசமாக நாம் முகங்கொடுக்க வேண்டிய பெருவினா.

சென்ற செப்டம்பர் 13ஆம் நாள் நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்குப் பெறுவதற்கு தமிழக அரசு தமிழ்நாடு சட்டப் பேரவையில் முன்மொழிந்த சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டுள்ளது. 234 உறுப்பினர்களில் பாசக உறுப்பினர்கள் நால்வர் மட்டும் ஆதரிக்கவில்லை. இவ்வளவு பெரும்பான்மையோடு இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேறிய பிறகும் நீட் நீடிக்கிறது என்றால் இது சட்டப் பேரவைதானா? இந்தியா குடியாட்சியம்தானா? இப்படி இரு சட்டமுன்வடிவுகள் 2017 சனவரி கடைசியில் அஇஅதிமுக ஆட்சிக் காலத்திலும் நிறைவேற்றப்பட்டு தில்லி வல்லரசின் குப்பைத் தொட்டிக்குப் போய் விட்டன.

நீட்டை ஒழித்து விட்டுத்தான் மறு வேலை என்று உறுதியளித்துத்தான் திமுக ஆட்சிக்கு வந்தது. இந்த மக்கள் கட்டளையை மோதி அரசு மதிப்பதாக இருந்தால் இப்போது இயற்றப்பட்டுள்ள சட்டமுன்வடிவை ஏற்றுச் சட்டமாக்கி நீட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்களிக்க வேண்டும். இது நடக்கும் என்று ஒப்புக்குக்கூட யாரும் நம்பவில்லை.

தமிழ்நாடு ஆளுநர் நீட் விலக்குச் சட்ட முன்வடிவைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி, அது ராஜ் பவனிலிருந்து ராஷ்ட்ரபதி பவனுக்கு ஊர்ந்து சென்று, பிறகு ஒன்றிய அமைச்சரவைதான் இறுதி முடிவெடுக்க வேண்டுமாம். அந்த முடிவைக்கூட நமக்குச் சொல்வார்களா? எப்போது

சொல்வார்கள்?

இதுதான் இந்திய விடுமை! இதுதான் தமிழ் மாநில இறைமை! இதுதான் இந்திய அரசமைப்புக் கட்டுமானத்தின் அடிக்கற்களில் ஒன்று எனப்படும் (கேசவானந்த பாரதி வழக்குத் தீர்ப்பு, 1973) கூட்டாட்சி முறைமை! வெட்கக்கேடு!

என்ன செய்யப் போகிறார் தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர்? மற்ற மாநில முதலமைச்சர்களுக்குக் கடிதம் எழுதுவேன் என்கிறார். இந்த மடல்விடு மாவீரம் தமிழ்நாட்டு முதலமைச்சர்களின் பரம்பரைச் சொத்து என்பதை நாம் அறிவோம். தில்லிக் கொடுங்கோலர்களும் அறிவார்கள். தமிழ்நாட்டு மக்களைத் திரட்டிப் போராடுவேன் என்று சொல்லக்கூட ஏன் மனம் வரவில்லை?

சட்டமுன்வடிவை ஆளுநருக்கு அனுப்பி விட்டு, அது தில்லிக்குப் போய் நல்ல முடிவு வரும் என்று காத்திருந்தால் இலவு காத்த கிளியின் நிலைதான்! அடுத்த ஆண்டு நீட் வந்து விடும்! அப்புறம் நீட்டும், பல்லாயிரம் கனவுகள் கருகுவதும், இளம்பிள்ளைகள் மனமுடைந்து மாள்வதும், இயல்பாகிப் போகும்!

நீட் தற்கொலைகளை ஆட்சியாளர் செய்த கொலைகள் என்று தேர்தலின் போது திமுக பரப்புரை செய்தது. அதுவும் தமிழ்நாட்டு ஆட்சியாளர்களைச் சொன்னதே தவிர இந்திய ஆட்சியாளர்களை அல்ல! ஆட்சிக்கு வந்தால் உடனே நீட்டை ஒழித்து விடுவதாக வாக்குறுதியும் வழங்கியது. எப்படி என்று எவ்விதச் சட்ட விளக்கமும் தரவில்லை. அது அவ்வளவு எளிதன்று என்பதை அப்போதே சுட்டிக்காட்டினோம். ஆனால் இடதுசாரிகள் உள்ளிட்ட தோழமைக் கட்சிகள் திமுகவின் மலிவான விளம்பர உத்தியில் குளிர்காய்ந்தனவே தவிர உண்மையை உடைத்துச் சொல்லவில்லை.

எதிர்க்கட்சியான அஇஅதிமுக கொலை கொள்ளை ஊழல் வழக்குகளில் சிக்கி அழிந்து


கொண்டிருக்கிறது. அடிமைகள் அழியட்டும். நீட்டுக்கு காங்கிரஸ், திமுக மீது பழி போடுவதில்தான் அது குறியாக இருந்தது, இப்போதும் இருக்கிறது. திமுகவும் எதிர்ப்பழி சுமத்தவே துடித்தது, இப்போதும் துடிக்கிறது! இந்த இரு கட்சித் தலைமைகளுக்குமே நீட்டைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை, அல்லது தெரிந்து கொள்ளும் அக்கறை இல்லை. நீட் வந்தது எப்படி? உச்ச நீதிமன்றத்தால் மறுதலிக்கப்பட்ட பிறகும் அது நீடிப்பது எப்படி? அது தகுதித் தேர்வா? தகுதியழிப்புத் தேர்வா? நுழைவுத் தேர்வா? நுழைவு மறுப்புத் தேர்வா?

தமிழகத்தைப் பொறுத்த வரை நீதியை மறுக்கும் நீட் ஒரு பார்ப்பனிய சூழ்ச்சி என்பதை திமுக அல்லது அஇஅதிமுக புரிந்து கொள்ளவில்லை. இந்த சூழ்ச்சியின் சுருக்குக் கயிறு ஆர்எஸ்எஸ் கையில் உள்ளது என்பதை விளங்கிக் கொள்ளவும் தமிழ்நாட்டு மக்களுக்கு விளக்கிச் சொல்லவும் வேண்டும். நீட் திணிப்பில் 'சங்கல்ப் டிரஸ்டு' என்ற அமைப்பின் வகிபாகம் பற்றிப் பேச வேண்டும். சங்கல்ப் டிரஸ்ட்டில் மறைந்துள்ள நச்சுக் கைகளே அனிதா முதல் சௌந்தர்யா வரை நம் பிள்ளைகளின் கழுத்தை நெரித்தவை என்பது திமுகவுக்கும் அஇஅதிமுகவுக்கும் தெரியுமா? நீட்டை எதிர்க்கிற மற்றவர்களுக்குத் தெரியுமா? நாம் அந்த உண்மைகளைத் தோலுரித்துக் காட்டுவோம்.

ஈக்கலையாமல் தேனெடுக்க முடியாது. அறுதியான உறுதியுடன் அறப்போர் தொடுக்காமல் நீட்டை விரட்ட முடியாது.

சட்டப் பேரவையில் சட்டமுன்வடிவை நிறைவேற்றி இத்தனை நாட்கள் ஆன பிறகும் கிண்டியோ தில்லியோ எவ்வித மறுமொழியும் தரவில்லை. இன்னும் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும்? நீட்டை விரட்டுவதில் திரு மு.க. ஸ்டாலினுக்கு அக்கறை இருக்குமானால் உடனடியாக அனைத்துக் கட்சிகளையும் இயக்கங்களையும் அமைப்புகளையும் ஆற்றல்களையும் அணிதிரட்டிப் போராடத் திட்டமிட வேண்டும். நீட் வெறும் கல்விச் சிக்கலன்று! தமிழினத்தின் தன்மானச் சிக்கல்! நீட்டை விரட்டுவது திமுக ஆட்சிக்கு வரலாறு வைத்திருக்கும் 'நீட்' தேர்வாகவே இருக்கக் கூடும்! ஆட்சிக்கு மட்டுமா? நம் அனைவர்க்கும்தான்!

## பேராசிரியர் மருதமுத்து அவர்களின் முகநூல் பதிவுகள்:




### 4 செப்டம்பர்

அலகாபாத் உயர்நீதி மன்ற நீதிபதி எச்சரிக்கிறார்–

“ எப்போதெல்லாம் நாம் நம் பண்பாட்டை மறந்தோமோ, அப்போதெல்லாம் அந்நியர்கள் நம் மீது தாக்குதல் தொடுத்து அடிமைப்படுத்தியுள்ளார்கள்.”

இவர் “நாம்” என்று குறிப்பிடுவது யாரை? இந்துக்களை.

இந்துக்களாகிய நம் மீது தாக்குதல் தொடுத்த அந்நியர்கள் யார்?

முதலில் இஸ்லாமிய அந்நியர்கள். பிறகு கிறிஸ்தவ அந்நியர்கள்.

அவர்கள் வெற்றி பெற்று இங்கு ஆட்சி செய்யக் காரணம் என்ன?

நம்முடைய இந்துப் பண்பாட்டை நாம் பாதுகாத்துப் போற்றத் தவறியது.

இதை உணர்ந்து பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக ஆயுதமேந்திப் போர் தொடுத்த மாபெரும் சரித்திர நாயகன் யார்? மங்கள் பாண்டே என்ற பிராமண குல திலகம். அசல் உத்தரப் பிரதேச சனாதனி.

நல்லது நண்பர்களே,

இப்போது இந்த நீதிபதியையே மக்கள் சார்பில் நமது விசாரணைக்கு உட்படுத்துவோம்

வெளிநாடுகளிலிருந்து வந்த அந்நிய ஆதிக்கவாதிகள் சிலரே. ஆனால் அவர்கள் வரவோடு சேர்ந்து இங்கே கொண்டுவரப்பட்ட இஸ்லாம், மற்றும் கிறிஸ்தவத்தில் எண்ணற்ற கீழ்ச் சாதி இந்துக்கள் இணையக் காரணம் என்ன?

அந்த மதங்களின் அடிப்படைக் கொள்கைகளில் வர்ணதர்மம் இல்லை. சாதி இழிவுக் கோட்பாடு இல்லை. (காலப் போக்கில் நடைமுறையில் அவற்றுக்கும் சாதி நோய் தொற்றிக் கொண்டது உண்மைதான். ஆனால் அந்த மதங்களின் வேதங்களில் அதற்கு இடமே இல்லை.) அந்த மதங்களில் எவரும் முறைப்படி சேரலாம்.

அதற்கென்று மத அங்கீகாரம் பெற்ற சடங்கு, மற்றும் செயல்முறைகள் உள்ளன.

நீதிபதி அவர்களே,

அப்படிப்பட்ட மதமாற்றத் தத்துவமோ, நடைமுறைகளோ இன்று வரை இந்து மதத்தில் இல்லை என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டாமா?

ஏன் அவ்வாறான மதமாற்று முறைகள் இந்து மதத்தில் இல்லை?

ஆரிய சமாஜமும், ஆர்.எஸ்.எஸ். குருஜி கோல்வால்கர் நிறுவிய விஸ்வ ஹிந்து பரிஷதும் கடந்த சில காலமாக அப்படி ஒரு முறையை உருவாக்கி அதற்கு மத மாற்றம் என்று பெயரிடாமல், விலகிச் சென்ற இந்துக்களின் வீடு திரும்புதல் (Ghar Wapasi) சடங்கு என்று நடத்தி வருகிறார்கள்.

இதன் பொருள்–

அகண்ட பாரதத்தில் உள்ள அனைவருமே ஆதிமுதல் இந்துக்கள்தான். இடைப்பட்ட காலத்தில் பாவம், அந்நியர்கள் காரணாமாக முஸ்லிம்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் மாறி அசுத்தமானார்கள். இப்போது சுத்தி சடங்கு செய்து அவர்களைத் தூய சனாதன இந்துக்களாக மீட்டெடுக்கிறோம். இனி பசுவை பூசித்து, பசு மூத்திரம், சாணி கலந்த பஞ்சகவ்யம் அருந்தி

பரிசுத்தர்களாக வாழலாம். அடடா, அற்புதமாக உள்ளதே! சரி, அப்போ சாதி விஷயம்? இந்தக் கேள்விக்கு விடையேது?

மௌனம்தான் பேசுகிறது.

ஏனென்றால் இந்து மூல சாத்திரங்கள், புராணங்கள் அனைத்தும் போதிப்பது பார்ப்பனிய சாதி அமைப்பையே. திருக்குர்-ஆன், பைபிள், புத்த போதனை, சீக்கியரின் ஆதி கிரந்தம் ஆகிய எதிலும் பிறப்பின் அடிப்படையில் சிறப்பு என்ற கோட்பாடு இல்லவே இல்லை.வைதிக இந்து சமயத்தில் இதுவே சாரம் எனவேதான் இவர்களின் இந்தக் கள்ள மௌனம்.

இதைத்தான் தந்தை அம்பேத்கர் அன்றே ஆதார பூர்வமாக விளக்கி வழி காட்டினார். இவ்வளவு மோசமான ஒரு வைதிக சமயத்தை விடாப்பிடியாக இந்திய மக்கள் மீது திணித்து அவர்களைச் சீரழித்து வைத்திருப்பதால் தான் இந்தியா மீண்டும், மீண்டும் அந்நியர் தாக்குதல்களுக்கு இரையாகிச் சின்னா பின்னமானது. இப்போது நீதிபதி அவர்களின் தீர்வும் இதே உருப்படாத மனப்பாங்கு மேலும் மேலும் வலிமை பெற்று வருவதையே காட்டுகிறது.

கனம் நீதிபதி அவர்களின் கருத்துகள் மோடி முகாமுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் என்பது உறுதி. ஆனால் பொறுப்புள்ள இந்தியக் குடிமக்களுக்கு மிகப் பெரிய அச்சத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதும் உறுதி.

முன்பு மோடி சொன்னார்–

(என்டிடிவி.காம், 25 March 2020)

“Mahabharat War Won In 18 Days, Coronavirus War Will Take 21: PM”

அதாவது–

கொரோனா சுனாமி வீசத் தொடங்கிய போது (சென்ற ஆண்டு மார்ச் மாதம்) பிரதமர் முழங்கினார்–

"மகாபாரதப் போரில் 18 நாட்களில் வெற்றி கிடைத்தது; இப்போது கொரோனாவுக்கு எதிரான போரில் நாம் வெற்றி பெற 21 நாட்கள் ஆகும், அவ்வளவுதான்!”

நண்பர்களே,

இதைக் குறித்து விளக்கவும் வேண்டுமா? இப்போது இதே மோடி,

"பாகிஸ்தான்– ஆப்கானிஸ்தான்-சீனா-ரஷ்யா எல்லோரையும் ஒண்டிக்கொண்டி மோதிப் பார்க்கப் போகிறேன். இதன் பொருட்டு காஷ்மீரை ஒடுக்கி வைப்பேன். இந்தியாவின் இஸ்லாமியர் அனைவரையும் அடிமைகளாக மாற்றுவேன். சனாதன பாரதப் பண்பாடு நமக்கு எவரும் வெல்ல முடியாத வலிமையை அளிக்கும்,"

என்றெல்லாம் பகற்கனவு காண்கிறார். ஏராளமான படித்த அறிவாளர்களையும் அழிவுப் பாதையில் இட்டுச் செல்கிறார்.

அலகாபாத் நீதிமன்ற நீதிபதி யாதவ் இவ்வாறு மமதை கொண்ட மேதாவிகளுக்கேல்லாம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளார்.

இறுதியாக நாம் நினைவில் கொள்ள வேண்டியது---

இந்தியாவின் சாதிய அமைப்பும் அதைக் கற்பிக்கும் வைதிக சாத்திரங்களும், பண்பாடும்தான் இதுவரை நாட்டு மக்கள் அனைவர்க்கும் பேரழிவுகளை மீண்டும், மீண்டும் ஏற்படுத்தி வந்துள்ளது.

முன்பு ரஷ்ய ஞானி டால்ஸ்டாய் ஒருமுறை காந்தியாருக்கு அளித்த அறிவுரைப்படி, இந்தியர்களின் இழிநிலைக்குக் காரணமாக அடுத்தவனை, அந்நியனைச் சுட்டிக் காட்டுவது முற்றிலும் தவறு. மாறாக, அதற்கு முழுப் பொறுப்பையும் இந்திய மேல்தட்டினரே ஏற்க வேண்டும். இந்த அறிவுரையை அலட்சியம் செய்துவிட்டு இந்துத்துவா காட்டும் வழியில் பயணித்தால் அடுத்து வரும் அவலங்களுக்கெல்லாம் டெல்லி அரசே முழுப்பொறுப்பு. அத்துடன், ஒப்புக்கு ரெண்டு வார்த்தை கண்டனம் தெரிவித்து விட்டுக் காலம் கழிக்கும் படிப்பாளிகளும் கூட முழுப் பொறுப்பு.

அறிவும், அன்பும், அறமும் துணை. மானுட சகோதரத்துவம் ஓங்குக!

அன்புடன், மருதமுத்து

---

**(2)**

**10 செப்டம்பர்**

பொழுது விடிந்தால் செப்டம்பர் 11

இருபது ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டுத் தரை

மட்டமாகிய நாள். மூவாயிரம் அமெரிக்கர்கள் உயிரிழந்த நாள். அமெரிக்க அரசு வெகுண்டெழுந்து, " உலகில் இஸ்லாமிய பயங்கரவாதிகள் எங்கிருந்தாலும் அவர்களைக் கொல்லாமல் விட மாட்டோம். அவர்களுக்கு இடமளிக்கும் அரசுகளையும் அழிக்காமல் விடமாட்டோம். அங்கு வாழும் சாமானிய மக்கள் அழிந்தாலும் கவலையில்லை," என்று தன்னிச்சையாக ஒரு பயங்கரவாத ஒழிப்புப் போரைத் தொடங்கக் காரணமான நாள்.

இன்று அமெரிக்கா ஆப்கானிஸ்தானை விட்டுத் தனது படைகளை விலக்கிக் கொண்டு விட்டது. அப்படியானால் இப்போது பொழுது விடிந்து விட்டதா? நிச்சயமாக இல்லை.

தேவைப்பட்டால் ஆப்கானில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும்.
மீண்டும் அந்த வட்டாரமே பயங்கர வாதத்தின் ஊற்றுக்கண்ணாக மாற அமெரிக்காவே ஏற்பாடு செய்யவும் தயாராகவே உள்ளது. இப்படி நடந்தால் அதை எதிர்கொள்ள வேண்டிய நாடுகள் முதன்மையாக இந்தியாவும், பாகிஸ்தானும் ஆகும். இந்த இரு நாடுகளும் பகைமையுணர்வை நீக்கி, ரஷ்யா, சீனா, ஈரான் முதலிய நாடுகளோடு கலந்துரையாடல் நிகழ்த்தி ஒரு சுமுகமான தீர்வைக் காண இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தாக வேண்டிய கட்டாயம் இன்று ஏற்பட்டுள்ளது.

ஆனால் இந்தியாவின் மோடியரசு இதற்கு நேர் எதிரான திசையில் பயணித்து வருகிறது. தாலிபான்களை மட்டுமல்லாமல், இந்தியாவின் சம உரிமைக் குடிமக்களான இஸ்லாமியர்களையும் குறி வைத்துத் தாக்கும் அரசியலைத்தான் மோடி முகாம் முன்னெடுத்து வருகிறது. இதன் காரணமாக, ஆப்கானிஸ்தானில் அமைதி நிலவ முயற்சி எடுப்பதற்கு பதில் இந்தியாவில் இருக்கும் அற்ப சொற்ப மத நல்லிணக்கத்தையும் பொசுக்கி விடும் நிலைதான் ஏற்படும். இதனால் இந்தியாவில் இருக்கும் சில இஸ்லாமியத் தீவிரவாதிகளின் எண்ணிக்கையும், மத வெறியும் மிக அதிகமாகிப் பெரும் அழிவுகளுக்கு இட்டுச் செல்லும் என்பது உறுதி.

இன்று தமிழகத்தின் ஆளுநராக ஆர்.என். ரவி நியமிக்கப்பட்டிருப்பது மோடியரசின் முன்னேற்பாடு நடவடிக்கைகளில் ஒன்று.
இந்த ரவி மத்திய உளவுத் துறையின் சிறப்பு இயக்குநராக (Special Director, Intelligence Bureau) பணியாற்றியவர், தேசியப் பாதுகாப்பு ஆலோசகராகவும்

இருந்துள்ளார். இறுதியாக நாகாலாந்து கவர்னர் பதவி வகித்துள்ளார்.

இதில் உள்நோக்கங்கள் பல உண்டு.

அடிப்படை ஒன்றுதான்--

தமிழகம் உட்பட இந்தியா முழுதும் இஸ்லாமிய வெறுப்பை முன்னிறுத்துவதை மோடி முகாம் கைவிடப் போவதில்லை. மாறாக அது அமெரிக்க வல்லாதிக்கம் காட்டும் வழியில் ஒடுக்குமுறை ஆயுதத்தையே நம்பியிருக்கிறது. நாம் உடனே விழிப்புற்று உண்மைகளை நாடி அறிந்து மக்கள் மத்தியில் பரப்புதல் மேற்கொள்ளாவிட்டால் விரைவில் பயங்கர விபரீதங்கள் நிகழ்வதைக் கண்முன்னால் பார்க்க நேரிடும்.

சீமான் போன்றவர்களின் காரணமாக வெறி மனப்பான்மை பெருமளவு தமிழகத்தில் பரவியுள்ளது. எந்த வெறியும் நல்லதல்ல. தமிழின வெறி மட்டும் இதற்கு விதிவிலக்கல்ல.

தமிழகத்தில் இஸ்லாமியர்க்கு எதிரான வெறியைத் தூண்டி வளர்க்க திராவிடக் கருத்தியலும், திமுக அரசும் பெரிய தடையாக இருந்து வரும் நிலையில் இந்திய தேசப் பாதுகாப்பு என்ற போர்வையில் ஆளுநர் ஆர்.என். ரவிக்கு என்னென்ன பணிகள் தரப்பட்டுள்ளன என்று போகப் போகத் தெரியும்.

எதுவாக இருந்தாலும், இனி இஸ்லாமியரோடு மற்ற அனைவரும் ஒன்றுபட்டுப் போராடா விட்டால் ஒட்டுமொத்தமாக நாடு அடிமைநிலைக்குத் தள்ளப்பட்டு விடும்.

செப்டம்பர் 11 -- ஆப்கானின் அப்பாவி மக்கள் அமெரிக்காவால் படுகொலை செய்யப்படக் காரணமான நாள் மட்டுமல்ல. அதுவே சுப்பிரமணிய பாரதி மறைவு நாளும் ஆகும்.

"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே!"

இஸ்லாமிய சகோதரர்களோடு உயிரால், உணர்வால் ஒன்றுபடுவோம்! பகைவர் சதிகளை முறியடிப்போம்!

தமிழர் ஒற்றுமை என்று பசப்பிக் கொண்டு மோடியின் அக்கிரம ஆட்சிக்கு எதிராக மக்களை அணிதிரட்ட

மறுப்போரின் முகமூடியைக் கிழித்தெறிவோம்!

**(3)**

## 11 செப்டம்பர்

இஸ்லாமிய பயங்கரவாதம் என்ற பூச்சாண்டியைக் காட்டி இந்தியாவின் இஸ்லாமிய மக்கள் அனைவரையும் தேச விரோதிகளாகவும், வெறுக்கத் தக்கவர்களாகவும் சித்திரித்து, அதன் அடிப்படையில் இந்தியா முழுதும் தேசபக்தி வாக்கு வங்கி உருவாக்கித் தங்கள் ஆட்சியை நீட்டிப்பது -- இதுவே மோடி முகாமின் மூல உத்தி. இதற்குப் பெயர்தான் வெறுப்பு அரசியல்.
இதைத்தான் அமெரிக்காவிலும் செய்து வெற்றி கண்டுள்ளார்கள். (ஆப்கானில் தோல்வி என்றாலும் மீண்டும் தாக்குதல்கள் நடத்த அமெரிக்கா தயார் நிலையிலேயே உள்ளது )

இதற்கெல்லாம் முன்பு இனவெறி, மதவெறியைக் கலந்து வெறுப்பு அரசியல் நடத்திய ஹிட்லர் ஜெர்மனியில் சர்வ அதிகாரத்தையும் வென்றெடுத்தான்.
“ஆரிய இனமே உலகை ஆளும் தகுதி கொண்ட ஒரே தூய இனம். யூதர்களும், கம்யூனிஸ்ட்களும் மனிதகுல விரோதிகள்,” என்பது அவனது அடிப்படைக் கொள்கை. அவனால் முகாம்களில் வதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்ட யூதர்களின் எண்ணிக்கை சுமார் அறுபது லட்சம்.
வேதனை தரும் உண்மை என்னவென்றால், இன்று அந்த யூதர்கள் ஆளும் இஸ்ரேல் நாட்டில் (மோடிக்கு நெருக்கமானது) அதே இனவெறி அரசியல்தான் ஆதிக்கம் செலுத்துகிறது. பாலஸ்தீன முஸ்லிம்கள் ஒடுக்கப்பட்டுக் கிடக்கிறார்கள்.

இதே பாதையில் பயணிக்கும் பாஜகவினர் இப்போது கேரள மாநிலத்திலும், அடுத்து தமிழகத்திலும் சில நகர்வுகளைச் செய்து வருகிறார்கள். அதன் விளைவாகக் கேரளத்தின் கிறிஸ்தவ மக்கள் மத்தியில் முஸ்லிம்கள் மீது கடும் வெறுப்பும், அச்சமும் ஏற்படுத்தும் முயற்சிகள் அண்மைக் காலமாகவே நடந்து வந்துள்ளன.

“நாடகக் காதல்”– இது நாமெல்லாம் அறிந்த ஒரு குற்றச்சாட்டு.
ஏதோ, அங்கொன்றும் இங்கொன்றும் நடைபெறும் சில சட்ட விரோதக் குற்றங்களை பூதாகரமாக்கி ஒரு குறிப்பிட்ட சாதியினரும், அதன் தலைவர்களுமே இதற்கு முழுப் பொறுப்பு என்று பரப்புரை செய்து அரசியல் ஆதாயம் பெறும் போக்கையும், அதன் விபரீத விளைவுகளையும் நாம் பார்த்துள்ளோம். அதைப் போலவே, லவ் ஜிகாத் என்ற சொற்களை

இன்று உச்சரிக்காத இந்துத்துவாவாதி இல்லை எனலாம்.

“முஸ்லிம் இளைஞர்களை நம்பாதீர்கள்! அவர்கள் மதமாற்றம் செய்வதற்காக நாடகக் காதல் நடத்தி வருகிறார்கள். நம் வீட்டுப் பெண்களுக்குப் பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது!”

இந்தியா முழுதும் பரப்பப்பட்டு வந்துள்ள இந்த வைரஸ் இப்போது கேரளத்திலும் வெளிப்பட்டுள்ளது. இந்த ஆபத்தான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளவர் கேரள கத்தோலிக்க பிஷப் பதவி வகிக்கும் ஜோசப் கல்லறங்காட் என்பவர். இவர் இந்திய கத்தோலிக்க உலகில் முக்கியப் புள்ளியாவார். இவர் சென்ற வியாழன்று (9 செப்) கூறினார்–

“கேரளாவின் இந்து மற்றும் கிறிஸ்தவ இளைஞர்களும், பெண்களும் இரண்டு வகையான ஆபத்துகளில் சிக்கிக் கொண்டுள்ளனர். மதம் மாற்றுவதற்காகப் பயன்படுத்தப்படும் போலிக் காதல்.

அதாவது லவ் ஜிகாத். இதன் மூலம் பொறிவைத்துப் பிடிக்கப்படும் கிறிஸ்தவ மற்றும் இந்துப் பெண்கள் திருமணத்துக்குப் பின் ஆப்கான் போன்ற இஸ்லாமிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு மதப் போரில் ஈடுபடுத்தப் படுகிறார்கள். இன்னொரு வகை உள்ளது. இது போதைப் பொருள்-ஜிகாத் (நார்க்கோ ஜிகாத்).

இத்திட்டப்படி கேரளத்தின் முஸ்லிம் அல்லாத மற்ற மதத்தைச் சேர்ந்த இளைஞர்கள், மற்றும் பெண்களை போதைப் பொருளுக்கு அடிமையாக்கி அந்தச் சமூகத்தினரை நாசமாக்குதல். அவர்களைப் படிக்க விடாமல் செய்தல், வேலை இழக்கச் செய்தல்.”

Scroll.இன் செய்தி---

“The bishop claimed that many people have lost their jobs and left studies after becoming drug addicts due to “narcotic jihad”. He also alleged that “jihadis” were using “other weapons” as they cannot destroy non-Muslim communities by using arms in a democratic country like India.”

அதாவது---"இந்தியா ஜனநாயக நாடாக இருப்பதால் ஆயுதத் தாக்குதல் நடத்தி அழிவு வேலை நடத்த முடியாத இந்த ஜிகாதி முஸ்லிம்கள் இவ்வாறான வேறுவகை ஆயுதங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். இவர்களால் அழிக்கப் படுவோர் கிறிஸ்தவர்களும் இந்துக்களுமே."

இவ்வாறெல்லாம் பரப்புரை செய்து வரும் இந்த பிஷப் சிறிது காலம் முன்பு இந்துத்துவாவினர்

அயோத்தியில் பாபர் மசூதியை இடித்து விட்டுக் கட்டிவரும் ராமன் கோயிலுக்காக ஆர்.எஸ்.எஸ். அமைப்பினரிடம் நன்கொடையும் வழங்கி ஆதரவளித்துள்ளார்.

இதனாலெல்லாம் மோடி முகாம் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளது.

ஏனென்றால் தமிழகத்தில் திமுக வலிமையாக இருக்கும் வரை பாஜக பெரிய வளர்ச்சி காண முடியாத நிலை உள்ளது போல், கேரளாவிலும் கிறிஸ்தவ-இஸ்லாமியர் ஒன்றுபட்டு இருக்கும் வரை அங்கே பாஜக வளர்ச்சி பெற முடியாது.

கேரளாவின் மக்கள்தொகையில் முஸ்லிம்கள் எண்ணிக்கை சுமார் 27 சதவிகிதம். கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை சுமார் 19 சதவிகிதம்.

அதாவது கேரள மக்கள்தொகையில் கிட்டத்தட்ட பாதிப் பேர் இந்துக்கள் அல்ல. இதை உடைப்பதுதான் மோடிமுகாமின் திட்டம்.

இதற்கு பிஷப் கல்லறங்காட் போன்றவர்கள் ஒத்துழைப்பு தந்து வருகிறார்கள். இதற்கேற்ற சன்மானங்கள் இந்தத் துரோகத்துக்கு வழங்கப்படும் என்று ஆசை காட்டப்பட்டுள்ளது.

கேரளத்தில் இவ்வாறு முஸ்லிம் வெறுப்பையும், அச்சத்தையும் பரப்புவதில் ஒரு கிறிஸ்தவ அமைப்பே ஈடுபட்டதற்கு ஒரு முகநூல் வீடியோ ஆதாரமும் உள்ளது. அதன் தலைப்பில், “கிறிஸ்தவர்களே,

கேரளத்தின் இடதுசாரிகளும், காங்கிரசும் மாறி மாறி நம் வாக்குகளைப் பெற்று ஆண்டு வந்துள்ளார்கள். ஆனால் இவர்களை நம்பி நாம் ஏமாந்ததுதான் மிச்சம். ஆதாயம் அடைந்தது இந்த முஸ்லிம் லவ் ஜிகாதிகள்தான். இனியாவது சிந்தித்துப் பார்க்க வேண்டும் நாம்,” என்ற எச்சரிக்கை உள்ளது.

இந்த வீடியோவில் இஸ்லாமியர் உடை தரிக்காத ஓர் முஸ்லிம் இளைஞனும், இந்துப் பெண்ணும் காதலிக்கிறார்கள்.

பெற்றோர் எதிர்ப்பை மீறி அந்தப் பெண் காதலனுடன் வீட்டை விட்டு வெளியேறுகிறாள். அடுத்து அவள் கணவன் திடீர் என்று குல்லாய் தரித்து அசல் இஸ்லாமிய உடையில் வந்து நிற்கிறான்.

மனைவியின் நெற்றிக் குங்குமத்தை அகற்றுகிறான். பிறகு சில முஸ்லிம் பயங்கரவாதிகளிடம் அவளை விற்று விடுகிறான்.

மேற்கண்ட தகவலும், வீடியோவும் the print. (2 April 2021) தளத்தில் உள்ளன.

நண்பர்களே,

நம்மைச் சுற்றி இவ்வாறு பல்வேறு அபாயகரமான நகர்வுகள் நிகழ்த்தப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

இவற்றில் ஒன்றுதான் தமிழகத்தின் ஆளுநராக ஆர்.என்.ரவி நியமிக்கப்பட்டிருப்பதும். இவர் கேரள மாநிலத்தில் பணியாற்றியவர் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அம்மாநில ஐ.பி.எஸ். அதிகாரியாகத்தான் இவர் முதன்முதலில் பணியாற்றி வந்துள்ளார்.

பிறகு இந்திய உளவுத்துறையின் உச்சத்துக்கே சென்றார்.

இனி தமிழகம் இவர் பார்வையில்.

கேரளா அரசியலும் இவருக்கு அத்துப்படி.

முடிவாகப் பார்த்தால்,

பாஜகவின் இத்தகைய நகர்வுகள் எல்லாவற்றுக்குமே மையப்புள்ளி இஸ்லாமியர் மீதான வெறுப்பை வளர்த்து அதன் மூலம் யாரும் இந்துத்துவா முகாமை எதிர்க்க முடியாத சூழலை இந்தியா முழுதும் உருவாக்குதல். இது வடக்கே பெருமளவு செய்து முடிக்கப் பட்டுவிட்டது. கேரளத்துக்குள் நன்கு ஊடுருவி விட்டது.

தமிழகத்தில் அடுத்து கால் வைக்கவிருக்கிறது.

இந்த வெறியை எதிர்கொள்ள நாம் உறுதி காட்ட வேண்டும்.

ஆனால் வெறிக்கு பதில் வெறி என்ற போக்கு மட்டும் அறவே கூடாது -- முகநூலில் கருத்திடும்போது கூட!

அறிவும், அன்பும், அறமும் துணை!

மானுட சகோதரத்துவம் ஓங்குக!

---

**(4)**

**12 செப்டம்பர்**

இன்றைய கேரள அரசியல் மிகவும் சிக்கலாக மாறியுள்ளது.

அத்துடன் அது காலம் காலமாக ரத்தக் கறை தோய்ந்தது.

அங்கே அரசியல்கொலைகள் ஏராளம் நடந்துள்ளன.

அண்மைக் காலமாக ஆர்.எஸ்.எஸ்./பாஜக தங்கள் மதவெறி அரசியலைத் தீவிரமாக முன்னெடுத்து வரும் நிலையில் சில இஸ்லாமிய அமைப்புகளும் அதே திசையில் பயணித்து

வருகின்றன.

கேரள மார்க்சிஸ்ட் கட்சியினரும் வன்முறையை நாடுவதற்கு என்றுமே தயங்கியதில்லை. காங்கிரசும் விதி விலக்கல்ல. இதன் விளைவாக அங்கே பழிக்குப் பழி வாங்கும் அரசியல் படுகொலைகளுக்குப் பஞ்சமேயில்லை.

இந்தச் சூழலில் இந்தியாவை ஆளும் மோடிமுகாம் தனது தரப்பினர் அனைவரையும் முதலில் எல்லை மீறாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஆனால் அதுதான் வன்முறையைத் தூண்டுவதில் தலைமையிடம் வகிக்கிறது.

ஒரு எடுத்துக்காட்டு தருகிறேன்–

குந்தன் சந்த்ராவத் என்ற நபர் மத்தியப் பிரதேச ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பிரச்சாரப் பிரிவுத் தலைவராக இருந்தார். அவர் ஒரு கூட்டத்தில் பேசும்போது (உடன் பாஜக எம்பி ஒருவரும் இருந்தார்) இவ்வாறு அறிவித்தார்–

“ யாராவது ஒருவர் கேரள கம்யூனிஸ்ட் முதல்வர் பினராயி விஜயன் தலையைத் துண்டித்துப் போட்டால் அவருக்கு என் சொத்து முழுவதையும் தருவேன். என் சொத்து மதிப்பு ஒரு கோடி ரூபாய்.”

The Indian express.இன் (2 March 2017)—

““If anyone beheads the Kerala CM, who is the murderer of RSS activists, and brings his head I will bequeath my property worth more than Rs 1 crore to him,’’ he said.

மேலும் அவர் கூறியது–

“கேரளாவில் முன்னூறு ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகர்கள் கொல்லப் பட்டிருக்கிறார்கள்! கம்யூனிஸ்ட்களுக்கு எச்சரிக்கை! பதிலுக்கு மூன்று லட்சம் தலைகளை வெட்டி மாலையாக்கி பாரதமாதாவுக்கு அணிவிப்போம்! அவர்கள் (முஸ்லிம்கள்) 56 இந்து கரசேவகர்களைக் கோத்ரா ரயில் நிலையத்தில் கொன்றார்கள். பதிலுக்கு நாம் 2000 முஸ்லிம்களை குஜராத்தில் (மோடி ஆட்சியில்) கொன்று இடுகாட்டில் புதைத்தோம்!” (“நாங்கள் தான் ராஜீவ் காந்தியைக் கொன்று புதைத்தோம்,”– சீமானை நினைவூட்டுகிறேன்.)

“ ‘Three hundred pracharaks have been killed. Communists be warned, we will offer a garland of three lakh heads to Bharat Mata,’ Ujjain Sah Prachar Pramukh Kundan Chandrawat told a gathering at Shahid Park in Ujjain town” ....... They killed 56, we

sent 2000 to the graveyard,'' he said referring to the death of karsevaks at Godhra railway station and the communal riots that followed in Gujarat."

இவ்வாறு பகிரங்கமாகக் கொலைவெறியைத் தூண்டிய இந்தப் பிரபல தலைவரை செல்லமாகக் கண்டித்து ஆர்.எஸ்.எஸ். அமைப்பை விட்டு நீக்கினார்கள். பிறகு ஒரு வழக்கும் போடப்பட்டது. அது கிடப்பிலும் போடப்பட்டது. இதற்கு என்ன பொருள்?

"லேசாகக் கோடிட்டுக் காட்டுங்கள், போதும். வன்செயல் மற்றும் கொலைகளை எல்லாம் ஊழியர்கள் பார்த்துக் கொள்வர்."

இதே பாணியில்தானே பாபர் மசூதி இடிக்கப்பட்டது?

பாஜக தலைவர்கள் இலைமறை காய் மறையாகத் தூண்டிவிட்டனர். தொண்டர்கள் மூலம் அக்கிரமங்கள் தடையின்றி அரங்கேறின.

இதைத்தானே மோடி முன்பு குஜராத்தில் செய்தார்?

விளைவாக அவருடைய சக அமைச்சராக இருந்த மாயா கோட்னானி என்ற பெண்மணியும் வேறு சிலரும் தண்டிக்கப்பட்டார்களே?

மாயாவுக்கு இருபதெட்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லவா கிடைத்தது?

பிறகு அதே குஜராத் நீதிமன்றம் மோடி பிரதமர் ஆனபின் மாயாவை விடுதலையும் செய்ததே? மோடி மீது குற்றம் சுமத்தப்பட்டு விசாரணை நடந்ததா? தண்டனை கிடைத்ததா? இல்லை. மாறாக இவர் பிரதமராக நீடிக்கிறார். ஆபத்தான பாதையில் நாட்டை இட்டுச் செல்கிறார்.

விளைவு?

இனி கேரளா உள்ளிட்ட பல பகுதிகளில் இஸ்லாமியத் தீவிரவாதம் வேகமாகப் பரவும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. ஒரேயடியாக வெறுப்பைக் கக்கி ஓர் இனத்தை ஒடுக்க முனைந்தால், நேர் எதிரான விளைவுகளே ஏற்படும். இதுதான் அமெரிக்காவின் ஆதிக்கக் கொள்கை காட்டும் உண்மை.

இதையே பின்பற்றி வரும் மோடி அரசும் தனது மதவாதக் கொள்கையைக் கைவிட மறுத்தால் நிஜமாகவே நார்க்கோ பயங்கரவாதம் உள்ளிட்ட இஸ்லாமியத் தீவிரவாதம் இந்தியாவில் பன்மடங்கு பெருகும் என்பது உறுதி. கேரள அரசியலின் போக்கு இந்த ஆபத்தான திசையில் தான் நகர்ந்து வருகிறது.

தமிழகமும் இதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

தப்ப ஒரே வழி மோடியரசின் ஆபத்தான அரசியலுக்கு எதிராக ஒன்றுபட்டுப் போராடுவதேயாகும். இப்போராட்டத்தில் கருத்துப் பரப்புதல்தான் முதல் இடம் வகிக்கிறது

---

**(5)**

## 14 செப்டம்பர்

“யார் இந்த ராமன்?

அவரா சேது பாலம் கட்டினார்?

அவர் என்ன என்ஜினியரா?”

இவ்வாறு காரமாகக் கேட்டார் கலைஞர் அன்று.

இன்று–

“ஆம், பகவான் ராமன் என்ஜினியர்தான்,” என்று துணிச்சலாக பதில் வந்துள்ளது.

பாஜக ஆளும் மத்தியப் பிரதேசத்தின் கல்லூரிகளில் இந்தக் கல்வியாண்டு முதல் நடைமுறைக்கு வரும் புதிய பாடத்திட்டத்தின் படி மாணவர்கள் கற்க வேண்டிய பாடங்களில் ஒன்று எதைப் பற்றியது தெரியுமா? ராமாயண ராமன் ஓர் அற்புதமான என்ஜினியரும் ஆவார் என்பதைப் பற்றித்தான் இனி படிக்க வேண்டும். மோடியின் புதிய கல்வித்திட்டம் இந்த அக்கிரமங்களுக்கெல்லாம் ஊக்கம் தருகிறது.

Hindustantimes.காம் 12 Sep 21 தரும் தகவல்--

“According to the new curriculum, to come into effect from this academic session, ‘Applied philosophy of Shri Ramcharitmanas’ has been introduced as an optional subject in art stream. In the foundation course of English, preface to Mahabharata by C Rajagopalchari will be taught to first-year students. Besides English and Hindi, yoga and meditation have also been introduced as the third foundation course, which includes ‘Om Dhyan’ and reciting of mantras as part of syllabus, officials from the state education department said.

மேலும், ஆங்கிலப் பாடத்தில் மகாபாரதப் பகுதிகளைப் படிக்க வேண்டும். அடுத்து, யோகா, தியானம் பற்றிய பாடங்களும் உண்டு. “ஓம் தியானம்,” என்பதையும், இன்னும் பல மந்திரங்களையும் கூடப் படிக்கவேண்டும்.

“Chapters of the ‘Applied philosophy of Shri Ramcharitmanas’ subject will include topics such as ‘spirituality and religion in root

sources of Indian culture'; 'four ages in Vedas, Upanishads and Purans'..."

அதாவது வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள் பற்றிய பாடங்களும் உண்டு. இந்தியப் பண்பாட்டின் மூலவேர்களாக இருப்பது ஆன்மிகமும், மதமும்தான் என்று கற்பிக்கும் பாடங்களும் இடம் பெறும்.

------------------------------------------------------

நீண்ட காலமாகவே இப்படி மாணவர் மனங்களில் இந்துத்துவா நம்பிக்கைகளை வளர்த்து வந்துள்ளது பாஜக. குஜராத்தில் வெகு காலம் முன்பே இது தொடங்கிவிட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக இப்போது கேரளாவின் கண்ணூர் பல்கலைக் கழகம் செய்திருக்கும் அக்கிரமத்தைப் பாருங்கள்–

இந்தியன்எக்ஸ்பிரஸ்.காம் (10 Sep 21)---

Row over Savarkar, Golwalkar works in varsity's PG syllabus

பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. (ஆட்சி நிர்வாகம், மற்றும் அரசியல்) பயிலும் மாணவர்கள் இனி இந்துத்துவா கொள்கையை வகுத்தளித்த வி.டி.சாவர்க்கர், மற்றும் ஆர்.எஸ்.எஸ். குரு கோல்வால்கர் ஆகியோரின் படைப்புகளைப் பயில வேண்டுமாம்.

"The row is over the syllabus of MA Governance and Politics, in which extracts from Savarkar's "Hindutva: who is a Hindu", and from Golwalkar's "Bunch of Thoughts" and "We or Our Nationhood Defined", were included"

"ஹிந்துத்வா--- ஹிந்து என்றால் யார்?" இந்தத் தலைப்பில் சாவர்க்கர் எழுதிய கருத்துகள்.

"நாம், அல்லது நமது தேசம் பற்றிய வரையறை," என்ற தலைப்பில் கோல்வால்கர் எழுதிய கருத்துகள். (நண்பர்களே, மறந்து விடாதீர்கள், காந்தியாரைக் கொலைசெய்த வழக்கில் சாவர்க்கரும் ஒரு முக்கிய குற்றவாளி. கொலையாளி கோட்சே அவரால் வார்த்தெடுக்கப்பட்டவன்.)

இந்த அக்கிரமம் நடந்திருப்பது கண்ணூர் மாவட்டத்தில் உள்ள கண்ணூர் பல்கலையில். இந்தக் கண்ணூர் மாவட்டம் கேரளா கம்யூனிஸ்ட்களின் இரும்புக் கோட்டை. முதல்வர் பினராயி விஜயன் இந்த மாவட்டத் தொகுதி ஒன்றிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஆனால் அங்கே ஆர்.எஸ்.எஸ்./பாஜகவினரின் தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. பல கொலைகளும் நடந்தேறியுள்ளன. அப்படியானால் அங்கே அமைந்துள்ள இந்தப் பல்கலைக் கழகம் இந்துத்துவா ஆசான்களின் கருத்துகளை முதுகலை மாணவர்களின் மூளைக்குள் நுழைப்பதன் மூலம் என்ன செய்ய நினைக்கிறது?

அதன் நோக்கம் டெல்லி எஜமானர்களின் மறைமுக உத்தரவை அமல் செய்வதேயாகும். இதன் மூலம் காங்கிரஸ், கம்யூனிஸ்ட்களின் எதிர்ப்பு கடுமையாவதைப் பற்றி டெல்லி கவலைப்படவில்லை.

கேரளாவின் வட பகுதியில் வாழும் ஏராளமான இஸ்லாமியர் ஆத்திரப்படுவதைப் பற்றியும் அது கவலைப்படவில்லை.

இந்தியா முழுதையும் இரண்டு எதிர் எதிர் பகை முகாம்களாக மாற்றுவது மோடி முகாமின் இலக்கு. எனவே இதே மக்கள்விரோதத் திசையில் தொடர்ந்து இவர்கள் பயணிப்பார்கள் என்பது நிச்சயம்.

எதிர்ப்பவர்கள் அனைவரையும் இந்து விரோதிகள், தாலிபான் ஆதரவாளர்கள் என்று தூற்றுவார்கள்.

இப்போது உத்தரப் பிரதேச முதல்வர் செய்துகொண்டிருப்பது இதைத்தான். அங்கே தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அவர் கூறுகிறார்--

(Indiatoday.இன் 13 Sep 21)

“Congress is mother of terrorism, insults Lord Rama and encourages mafia: Yogi Adityanath”

அதாவது–

“அனைத்து பயங்கரவாதத்துக்கும் தாய் காங்கிரஸ் கட்சிதான். இது ராமனை இழிவு செய்யும் கட்சி. வன்முறைக் கும்பல்களை ஆதரிக்கும் கட்சி.”

அடுத்து இதே செய்திக் கட்டுரையில் அவர் கூறுகிறார் –

காங்கிரசும், சமாஜ்வாதி போன்ற பிற கட்சிகளும் தாலிபான்களை ஆதரிப்பவை. இவை முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெறவேண்டி அநியாயச் சலுகைகள் தருபவை.

---

நண்பர்களே,

விரைவில் இதே நிலை தமிழகத்திலும் ஏற்படவிருக்கிறது.

எச்சரிக்கை!

அறிவும், அன்பும், அறமும் துணை

மானுட சகோதரத்துவம் ஓங்குக!

அன்புடன், மருதமுத்து

# வேளாண் வரவு-செலவுத் திட்டத்தை (2021) முன்வைத்து…

# தமிழ்நாட்டு வேளாண்மை தழைக்கச் செய்ய வேண்டுவன

**கோ. திருநாவுக்கரசு,**

*தாளாண்மை உழவர் இயக்கம்*






தமிழ்நாட்டு வரலாற்றில் வேளாண் துறைக்காகத் தனி வரவு-செலவுத் திட்டம் வரையறை செய்து வெளியிடுவது இதுவே முதன்முறை. வேளாண் துறை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தை டெல்லியில் வேளாண் சட்டங்களுக்கு எதிராகப் போராடும் உழவர்களுக்கு அர்ப்பணித்து உரை தொடங்கியது சிறப்பு.

அமைச்சரின் அறிவிப்பில் உள்ள சிறந்த கூறுகளைக் காண்போம்.

**1.(அங்கக) இயற்கை வேளாண்மைக்கான தனித் துறை உருவாக்கப்படும்.**

இரசாயன வேளாண்மையில் பயன்படுத்தப்படும் உரம், பூச்சிக் கொல்லிகள், களைக்கொல்லிகள் நமது நிலம், நீர், காற்று ஆகியவற்றை மாசுபடுத்தி மக்களின் உடல்நலனைக் கடுமையாகப் பாதித்து வருகின்றன. இயற்கை விவசாயம் மண்ணின் வளத்தையும் மக்கள்நலனையும் உறுதி செய்யும். வேளாண் இடுபொருட்செலவுகளைக் குறைக்கும். நிலத்தடிப் படிம எரிபொருட்களை எடுக்க வேண்டிய தேவை இருக்காது. எனவே புவி வெப்பமாதலை இத்திட்டம் குறைக்கும். இந்தத் திட்டத்தைத் தமிழ்நாட்டு அளவில் விரிவுபடுத்துவது பன்முக நலன்களைத்தரும்.

2. கிராமங்களின் தன்னிறைவுக்கான புதுத்திட்டங்கள்

என்ன திட்டங்கள் என்று குறிப்பிடவில்லை. நாம் பரிந்துரைக்க விரும்புவது: விளைபொருட்களுக்கு இலாபகரமான விலை, தொழிலாளர்களுக்கு உரிய ஊதியம். சுணக்கமற்ற கொள்முதல்.

**“கலைஞர் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்”**

என்ற திட்டத்தைச் செயல்படுத்த அரசு திட்டமிடுகின்றது. இந்தத் திட்டத்தின் படி முதல் கட்ட நடவடிக்கயாக 2,500 கிராமப் பஞ்சாயத்துகள் எடுக்கப்பட்டு ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் சராசரியாக ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்படும். வேளாண் வளர்ச்சியையும் தன்னிறைவையும் எட்ட இந்தத் தொகைபோதாது.

ஒற்றைப் பயிர் சாகுபடி, விதை உள்ளிட்ட அந்நிய வேளாண் இடுபொருட்களால் தமிழ்நாட்டு வேளாண் தொழில் சீரழிந்து கிடக்கிறது. வேளாண் தொழிலின் இன்றியமையாத் துணைத் தொழில்களான கால்நடை வளர்ப்பு, பறவைகள் வளர்ப்பு, மீன் வளர்ப்பு, மரங்கள் வளர்ப்பு என யாவும் சீரழிந்து கிடக்கின்றன. வேளாண் பொருளாதாரம் அதீதச் சுரண்டலால் முடக்கப்பட்டுக் கிடக்கிறது. உழவர்கள், உழவுத் தொழிலாளர்கள் பெரும் நெருக்கடியில் உள்ளார்கள். பெரிய அளவில் புலம்பெயர்தல் நடக்கின்றது. கலைஞர் பெயரால் அறிவிக்கப்படும்

இத்திட்டம் உண்மையாகவே நடைமுறைப்படுத்தப்பட்டால் ஒரு சமுதாய மாற்றத்தை உருவாக்கும்வலுக்கொண்டது.

.

**4. தரிசு நிலங்களை விளநிலங்களாக மாற்றும் திட்டம்.**

5. **இருபோக சாகுபடி நிலங்களாகத் தற்போது ள்ள லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பை , 20 லட்சம் ஹெக்டேராக உயர்த்துவது.** நிலம் நம்மிடம் உள்ளது. நீராதாரத்தை மேம்படுத்தினால் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதும், இருபோகம் முப்போகம் பயிரிடுவதும் சாத்தியமே.. ஆனால் திட்டம் நிலைத்து நீடிக்க வேண்டுமானால் தற்போதைய நீர் ஆதார உத்திகள் சாத்தியமில்லை.

காவிரி நீர் பெருக வாய்ப்பே இல்லை. ஏனைய ஆற்றுநீரிலும் அண்டை மாநிலங்கள் குறுக்கீடு செய்கின்றன. நிலத்தடிநீரை மேலும் உறிஞ்சுவது தற்கொலைக்கொப்பானது. நாம் மழைப்பொழிவைச் சார்ந்து நிற்க வேண்டும். மழைப் பொழிவைக் கூடுதலாக்கும் வழிவகைகள் பற்றி ஆய்வு செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில் சுமார் 1,000 மிமீ மழை பொழிகிறது. 1,30,058 சதுர கிலோ மீட்டர் பரப்புக் கொண்ட தமிழ்நாட்டில் பெய்யும் மழை அளவு 4,586 டிஎம்சி. 90 விழுக்காடுதான் மழைப் பொழிவு என்றால் கூட நாம் பெறும் மழைநீர் 4,127 டிஎம்சி. (காவிரித் தீர்ப்பு 177 டிஎம்சிதான்.)

சமவெளியில் இந்த நீரை எப்படிச் சேமிப்பது? நமது மன்னர் காலத் தொழில்நுட்பமே நமக்கு உகந்தது. ஏரிகள், குளங்கள், குட்டைகளில் நீரைச் சேமிக்க வேண்டும். ஏரி, குளங்களைப் புதிதாகவும் உருவாக்க வேண்டும். ஏரி குளங்கள் மழை நீர் அறுவடை செய்வதோடு, பலநோக்குத் திட்டங்களின் மையப் புள்ளியாகவும் அமைக்கப்பட வேண்டும்.

சராசரியாகக் குளத்து நீர் ஒரு மாதத்தில் ½ அடி அளவிற்கு ஆவியாகும் என்பது கணிப்பு.

எனவே 6 அடிக்கு மேல் குளம் ஆழமாக இருந்தால் அடுத்த மழைக் காலம் வரை குளத்தில் நீர் இருக்கும். 12 அடி ஆழம் என்றால் ஒரு ஏக்கர் குளத்தில் சுமார் 6 அடி வரை பயன்படும். அதாவது 1829 மிமீ. ஒரு போகம் நெல் சாகுபடி செய்ய 1200 மிமீ நீர் தேவை. கரும்புக்கு 2,100 மிமீ. பருத்திக்கு 600 மிமீ. சோளம் 500 மிமீ. நிலக்கடலை 450 மிமீ. சிறு தானியங்கள் 400 மிமீக்கு குறைவு. மேற்கண்ட ஒரு ஏக்கர் குளத்தைக் கொண்டு 4½ ஏக்கர் நிலத்தில் சிறு தானியம் பயிரிடலாம். குளத்தில் மீன்வளர்ப்பு மிகவும் இலாபகரமானது. வறட்சிமிக்க இடத்தில் கூட கால்நடைகள் வளர்க்கலாம். பல வகை மரங்கள் வளர்க்கலாம்.குளம் வெட்ட ஆகும் செலவைச் சில வருடங்களில் ஈட்டி விட முடியும். சுற்றுச்சூழலுக்கு விலைமதிப்பில்லாக் கருவூலமாகக் குளங்கள் இருக்கும். ஏரி குளங்களின் தொகுப்பு சுற்றுச்சூழலை மேம்படுத்தி உயிர்ப் பன்மையத்தை ஊக்குவிக்கும்.

6. **வேளாண் பயன்பாட்டிற்கு இலவய மின்சாரம் தர மின் வாரியத்திற்கு ரூ 4,508.23 கோடி அரசு ஒதுக்கீடு செய்யும்.**

நிலத்தடி நீரை வேளாண் பயன்பாட்டிற்குப் பயன்படுத்துவது விவேகமற்ற செயல். மழைநீரை நிலத்தடி நீராக மாற்றினால் சிறப்பு. பசுமை செழிக்கும். மழைப் பொழிவு அதிகமாகும். வேளாண் துறையால் மின் உற்பத்தி செய்ய முடியும். கால்நடைக் கழிவு, மனிதக் கழிவு, பண்ணைக் கழிவுகள், நகரக் கழிவுகள், சாக்கடைக் கழிவுநீர் ஆகியவை கொண்டு மீத்தேன் தயாரிக்க முடியும். நாட்டில் சாக்கடைகள் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுகின்றன.

சென்னைப் பெருநகர் தண்ணீர் மற்றும் கழிவுநீர் வாரியம் பெருங்குடி, கொடுங்கையூர், கோயம்பேடு, நெசப்பாக்கம் ஆகிய இடங்களில் கழிவுநீரைச் சுத்திகரித்து, கிடைக்கும் அடிக்கசடில் இருந்து மீத்தேன் எடுக்கப்படுகிறது. சுத்திகரிப்பு நிலையத்தின் சொந்தப் பயன்பாட்டிற்கு வெளியில் இருந்து மின்சாரம் தரப்படுவதில்லை. காற்றாலை மின்சாரமும், கதிரவ ஒளி மின்சாரமும்

நிலத்தைப் பெருமளவில் ஆக்கிரமிக்கின்றன. இன்றளவில் நமது நாட்டின் சொந்தத் தயாரிப்புகள் அல்ல இவை. இவை உருவாக்கும் கழிவுகள் எதிர்காலச் சிக்கல்களாக உருவாகும். ஆனால் மனித சமூகங்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் கழிவுகள் உருவாகவே செய்யும். ஆரோக்கியமான சூழலுக்குக் கழிவுகளை அகற்றியாக வேண்டும். கழிவுகளை அகற்றும் அதே நேரத்தில் அவறில் இருந்து நமக்கு அவசியமான எரிவாயுவையும் ,மின்சாரத்தையும் எடுப்பதோடு குப்பைகளைப் பயிருக்கு உரமும் ஆக்கலாம். மக்கும் கழிவுகளில் இருந்து மீத்தேன், மின்சாரம் எடுப்பதோடு, இந்த ஆலைகள் வெளித் தள்ளும் செரிக்கப்பட்ட கழிவுகளைப் பயிர்களுக்கு உரமாக்கலாம். இவ்வகை ஆலைகளுக்கு மூலதனம் குறைவு. சிறு சிறு அமைப்புகளாகப் பரவலான இடத்தில் அமைக்கப்படுவதால் போக்குவரத்துச் செலவுகள் குறைவு. மின்சார இழப்பும் மிகவும் குறையும். விவசாயத்தை மையமாக கொண்டு இயங்கும் கழிவுகள் மூலம் பெறும் மின்சக்தியே சாலச் சிறப்பானது. ஊர்தோறும் நகரந்தோறும் மீத்தேனும் ,மின்சாரமும் உற்பத்தியானால் அது ஒரு புரட்சியாக அமையும். டீசலுக்கு பதிலாக மீத்தேன் பயன்படுமென்பதால் புதைபடிவ எரிபொருளான டீசல் தேவைப்படாது. அனல்மின் நிலையங்கள் மூடப்பட்டாலும் மீத்தேன் மின்நிலையங்கள் நாடெங்கும் இயங்கும்.

**7. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திற்கு ரூ.573.24 கோடி ஒதுக்கப்படுகிறது.**

பசுமைப் புரட்சி என்ற வேளாண்மையை ஒழித்த திட்டத்திற்கு வேலை செய்து பழகிய தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்திற்கு எவ்வளவு பெரிய தொகை தரப்பட்டுள்ளது! எதிர்மறைப் பங்களிப்பிற்கு ஊக்கம் அளிப்பது மக்களை திசைதிருப்பும். ராக்ஃபெல்லர்/ஃபோர்டு அறக்கட்டளைகளும், கார்னல் பல்கலைக்கழகமும் தரும் ஆலோசனைகளின் படி செயல்படும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் இது வரையிலும் அன்னியச் சக்திகளின் விரிவாக்கத்திற்கு உதவும் வேலையைத்தான் செய்துவருகிறது. இந்த மண்ணின் மரபுகளை மதித்துப் பாரம்பரிய வேளாண்மையை அறிவியல்வழியில் செழுமைப்படுத்த அவர்கள் அணியம் என்றால் மட்டுமே இந்தச் செலவை

நியாயப்படுத்த முடியும்.

8. **கிராமப்புற இளைஞர் வேளாண் திறன் வளர்ச்சிப் பணி (Rural Youth Agricultural Skill Development Mission):**

உயரிய நோக்குகளை இளைஞர்களிடம் முன்வைப்பதானால் முதலில் வேளாண் தொழில், துணைத்தொழில்கள் இலாபகரமாக இயங்குவதை உறுதி செய்ய வேண்டும். வேளாண்மைக்கான இடுபொருட்கள் அனைத்தும் கம்பெனிகள், பன்னாட்டுக் கம்பெனிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இதனால் வேளாண்மையின் பெருஞ்செல்வம் வெளியேறுகின்றது. மான்சாண்டோ போன்ற பகாசுரக் கம்பெனிகள் மரபீனி மாற்று விதைகள் மூலம் நாட்டின் வேளாண் உற்பத்தியை அடிமைப்படுத்த முயல்கின்றன. ஒன்றிய அரசும் இதற்கு உடந்தையாகவே உள்ளது. விளைபொருட்களின் விலையையும் ஒன்றிய அரசு அரசியல் பொருளாதார அடிமைப்படுத்துமுகமாகக் கட்டுப்படியாகாத நிலையிலேயே வைத்துள்ளது. வேளாண் தொழில் வளர ஒன்றிய அரசின் குறுக்கீடுகள், சட்டங்கள் மறுதலிக்கப்பட வேண்டும். இவை நடந்தால் அன்றி வேளாண் துறை இளைஞர்களின் மனத்தை ஈர்க்க முடியாது.

.

9. **பனைப் பாதுகாப்பு, பனை விதை நடுதல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் தமிழ்நாட்டு அரசை பாராட்டுவோம்.**

பனையை ஆந்திர மாநிலத்தில் கற்பகத்தரு என்று அழைக்கின்றனர். மகாத்மா காந்தி அவர்களும் அவ்வாறே அழைத்தார். பனைக்குத் தேவையான இடம், நீர்த் தேவை மிகக் குறைவு. ஆனால் ஒரு பனை தரும் வெல்லம் ஒரு குடும்பத்திற்குப் போதுமானது. தமிழ்நாட்டில் இருக்கும் பனைகள் மக்களுக்குத் தேவையான சர்க்கரைத் தேவையை நிறைவு செய்யும். பனை வெல்லம் பலவித சத்துகள் கொண்டது. நீரிழிவு நோய், சோகை நோய் வர மாட்டா. நிறையப் தண்ணீர்த் தேவை கொண்ட கரும்புப் பயிர் பயிரிடுவதைக் குறைக்கலாம்.

தமிழ்நாட்டில் சுமார் 9,46,393 ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகின்றது. இதற்கு தேவைப்படும் நீர் சுமார் 284 டிஎம்சி. இவ்வளவு நீரை செலவிட்டு உருவாக்கப்படும் சர்க்கரை ஏற்றுமதி ஆவதே அதிகம். இன்று 10.09.2021 செய்திப்படி 70 இலட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி ஆகிறது. இதற்குச் செலவிடப்பட்ட நீர் 78 டிஎம்சி என்பதை மிக முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும்.பனையை சரியாகக் கையாண்டால் தமிழ்நாட்டுப் பொருளாதார வளர்ச்சியில் ஒரு மாற்றம்வரும்

10. 13,300 உழவர் குடும்பங்கள் பயனடையும் விதத்தில் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பு குறிப்பான செயல்திட்டம் வேண்டும்.

11. **தலைமைச் செயலர் தலைமையில் வேளாண் குழு அமைத்தல்; வேளாண் திட்டங்களைப் பரிசீலித்தல் மற்றும் தீர்வுகள் காணுதல்.**

12. **காய்கறிப் பயிர் சாகுபடிக்கு விதைகள் விநியோகம் செய்யும் திட்டம்:**

இது பெரிய அளவில் நஞ்சில்லா உணவு உற்பத்திக்கு உதவும். ஆனால் பரவி வரும் மரபீனி மாற்று விதைகளைத் தவிர்த்துப் பாரம்பரிய விதைகளைப் பரப்ப வேண்டும். நமது நாட்டு உணவே நமக்கு மருந்து.

13. **உழவர்களுக்கு விளைபொருட்களை உலர்த்தும் 28 இடங்கள்.** கதிரடிக்கக் களம், உலர்த்தும் கருவிகள், சேமிப்பு வசதி ஊர்தோறும் அமைப்பது பயனுள்ளதாக இருக்கும்.

14. **நம்மாழ்வார் இயற்கை வேளாண் ஆராய்ச்சி மையம்.**

நம்மாழ்வாரின் திட்டங்கள், கருத்துகள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கருத்துகளுக்கு நேர் எதிரானவை. எனவே இயற்கை வேளாண் ஆராய்ச்சி மையத்தை திரு சுல்தான் ஐயா போன்ற வேளாண் அறிஞர்களின் பார்வையில் தனித்து இயங்கும் அமைப்பாக நிறுவுவதே சரியானதாக இருக்கும். தொகுத்துக் கூறுவதென்றால் தமிழ்நாட்டரசின் வேளாண் வரவு செலவுத் திட்டத்தின் பார்வை தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கானது. புதிய பாதைகள் ஆர்வமூட்டுகின்றன. இடைவிடா முயற்சியுடன் செயல்படுத்தப்பட்டால் தமிழ்நாடு இந்திய ஒன்றியத்திற்கு ஒரு மாதிரியாக அமையும்.

*பாரதியார் குமுறல்*

## தெலுங்கனுக்கு உள்ள உணர்ச்சி தமிழனுக்கு இல்லையே..

[**சுதேசிமித்திரனில் 9.6.1917இல் 'தெலுங்க மஹா சபை' எனும் தலைப்பில் 'சக்தி தாஸன்' எனும் புனைப்பெயரில் பாரதியார் எழுதிய கட்டுரை.**]



சென்ற வெள்ளிக்கிழமை (1917) சூன் 1 யன்று நெல்லூரில் கூடிய ஆந்திர மஹாசபையில் சபாநாயகர் ஸ்ரீ வெங்கடப்பய்ய பந்துலு செய்த உபந்யாஸம் கவனிக்கத் தக்கது. ராஜநீதி சாஸ்த்திரத்தில் தெலுங்கர் நெடுங்காலத்துப் பெருமையுடையார்.

பாடலிபுத்ர நகரத்தில் நடந்த ஆந்திர ராஜ்யமும் பிற்காலத்தில் தமிழ் நாட்டைக் கட்டியாண்ட விஜயநகரத்து ராஜ்யமும் கீர்த்தி மிகுந்தனவன்றோ? தெலுங்கர் தமிழரை ஆண்ட அடையாளங்கள் நமது பாஷையிலும் அகாராதிகளிலும் அழிக்க முடியாதபடி பதிந்து கிடக்கின்றன. நமது ஸங்கீதமும் நாட்டியமும் தெலுங்கிலேயே இன்றுவரை முழுகிக் கிடக்கின்றன.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

பாடகர்கள் பாடும் கீர்த்தனங்கள், தாசிகள் ஆட்டத்தில் பாடும் வர்ணங்கள் ஜாவளிகள் முதலியவற்றில் நல்ல உருப்படியெல்லாம் தெலுங்கு. நமது கிராமங்களிலுள்ள தெலுங்க ரெட்டிகளும், நாயுடுமாரும், ஆந்த்ர பிராமணப் புரோகிதர்களும், தெலுங்கு தாசிகளும் ராயர் சம்ஸ்தான காலத்தில் இங்கே உறுதி பெற்றவர்கள். நமது விவாக காலங்களில், பாடும் பத்யம், லாலி முதலானதெல்லாம் தெலுங்கு முறை.

நமது பாஷையில் "கவனம்", (ஆழ்ந்து நோக்குதல்) "ஜொகுஸு", "எச்சரிக்கை", "துரை", "வாடிக்கை", "கொஞ்சம்" முதலிய பதிற்றுக்கணக்கான தெலுங்குச் சொற்கள் சேர்ந்திருக்கின்றன.... இக்காலத்திலும் கூடத் தெலுங்கு தேசத்தார் தமிழரைக் காட்டிலும் ராஜாங்க வ்யவஹாரங்களில் தீவ்ர புத்தி செலுத்துகிறார்கள். ஆனால் நமக்குள் ஜாதி பேதமிருக்கிறது என்றால் ஜாதிபேதம் இந்தியாவில் மாத்திரமில்லை. உலகத்தில் எல்லா தேசங்களிலும் இருக்கிறது. இந்தியாவில் கொஞ்சம் தீவ்ரமாகவும், விநோதமாகவும், மாற்றுவது கஷ்டமாகவும் இருக்கிறது. இப்போது பூமி முழுவதிலும் நடந்து வரும் மஹாப்ரளயத்தில் இந்த ஜாதிபேதம் தவிடு பொடியாய்ப் போய்ப் புதிய மாதிரி உண்டாகும்.

இதுவெல்லாம் ஏன் சொல்ல வந்தேனென்றால், தமிழ்நாட்டு ஜனங்கள் வீண் சண்டைகளிலே பொழுது போக்குகிறார்கள். தெலுங்கர் ஜனபிவிருத்திக்கு வழியாகிய நல்ல உபாயங்களிலே புத்தி செலுத்தி வருகிறார்கள். சுதேசிய விஷயத்தில் இப்போது தெலுங்கருக்குள் இருக்கும் பக்தி சிரத்தையிலே நாலிலொரு பங்கு கூடத் தமிழ் ஜனங்களிடம் இல்லை.

சென்ற வெள்ளிக் கிழமையன்று கூட மேற்படி நெல்லூர் ஆந்த்ர மஹாசபைப் பந்தலில் வந்தே மாதரம் என்ற கோஷம் அபரிதமாக இருந்ததென்று தந்தி சொல்லுகிறது. கொஞ்ச காலத்துக்கு முன்பு கூட நெல்லூரில் கூடிய மாஹாண சபையில் 'வந்தே மாதரம்' பாட்டுக் கூடப் பாடவில்லையென்று கேள்விப்பட்டேன். தெலுங்கு ஜில்லாக்களில் ஒரு சபை கூட அப்படி நடந்திராது.

இது நிற்க, மேற்படி சபையில் ஸ்ரீ வேங்கடப்பய்யா சபாநாயகராகப் பேசிய வார்த்தையின்

ஸாரம் பின் வருமாறு:

1. தெலுங்கு தேசத்தைத் தனி மாகாணமாகப் பிரிக்க வேண்டும்.

2. இந்தியாவுக்குத் தன்னாட்சி கொடுக்க வேண்டும்.

3. இயன்ற வரை, இந்தியா முழுவதையும் பாஷைகளுக்குத் தக்கபடி வெவ்வேறு மாகாணமாக்க வேண்டும். அதாவது மதராஸ், பம்பாய், ஐக்ய மாகாணம், மத்ய மாகாணம், பஞ்சாப், பங்காளம் என்ற பிரிவுகளை மாற்றித் தமிழ்நாடு, தெலுங்கு நாடு, மாராட்டிய நாடு. கன்னட நாடு, ஹிந்துஸ்தானம், வங்கநாடு என்று பாஷைக்கிரமப்படி வகுக்கவேண்டும்.

4. ஸ்வபாஷைகளில் கல்விப் பயிற்சி செய்விக்க வேண்டும். ராஜ்ய காரியங்களும் இயன்ற வரை ஸ்வபாஷையில் நடக்க வேண்டும்.

மேற்படி நாலம்சங்களில் முதலாவது, மூன்றாவது, நாலாவது இம்மூன்றும் ஒரு பகுதி; இரண்டாவது மற்றொரு பகுதி. இரண்டாவது தாய்ப் பகுதி; மற்றவை கிளைப் பகுதிகளாகும். என்னுடைய அபிப்ராயத்தில் மேற்கண்ட கொள்கையெல்லாம் நியாயமென்றே தோன்றுகிறது...


மேலும், தெலுங்கருக்குத் தெலுங்கு பாஷையில் பிறந்திருக்கும் உண்மையான அபிமானம் தமிழருக்குத் தமிழினிடமில்லை. தமிழிலிருந்து பூமண்டலத்திலுள்ள பாஷைகளெல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்தாலே ஒருவன் தமிழபிமானியாக மாட்டான்.

பள்ளிக்கூடத்து சாஸ்திரங்களெல்லாம் தமிழ்ப் பாஷையில் கற்றுக் கொடுக்கும்படி முயற்சி செய்கிறவன் தமிழபிமானி. தமிழில் புதிய கலைகள், புதிய காவியங்கள், புதிய உயிர், தோன்றும்படி செய்வோன் தமிழபிமானி... தேவாரத்திலும், திருவாசகத்திலும், திருவாய் மொழியிலும், திருக்குறளிலும், கம்பராமாயணத்திலும் அன்பு கொள்ளாதவனுக்குத் தமிழபிமானம் உண்மையிலே பிறக்க நியாயமில்லை...

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

# தேராத் தேர்தலும் காணாக் கொள்கையும்

*தியாகு*




***"தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்***
***தீரா இடும்பை தரும்"*** -- திருக்குறள் 510.

தேர்தல் என்ற சொல்லுக்கு ஆராய்தல் என்று பொருள். தெளிதல் என்றால் முடிவு செய்தல். தம்மை அடுத்த ஐந்தாண்டு காலத்துக்கு ஆள வேண்டியவர்களை வாக்காளர்களே தேர்ந்து தெளியும் வாய்ப்பை வழங்குவது குடியாட்சியத்தின் (சனநாயகத்தின்) மாண்புகளில் ஒன்று. இந்திய அரசமைப்புச் சட்டமும் தேர்தல் முறையும் வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமையை உறுதி செய்கின்றன.

அரசமைப்பின் சிற்பி அண்ணல் அம்பேத்கர் இந்த அரசியல் குடியாட்சியத்தைப் போற்றிய போதே இதிலடங்கியுள்ள அடிப்படை முரணிலையையும் தெளிவாக வெளிப்படுத்தினார்: ஒருவருக்கு ஒரு வாக்கு, ஒரு வாக்குக்கு ஒரு மதிப்பு என்ற அரசியல் நிகர்மையை நாம் நிறுவியிருப்பினும், சமூகப் பொருளியல் ஏற்றத்தாழ்வு என்னும் அடித்தளத்தின் மீதுதான் இந்த மேற்கட்டுமானத்தை நிறுவியுள்ளோம். அந்த அடித்தளத்தை விரைவில் மாற்றியமைக்கத் தவறுவோமானால் சமூகப் பொருளியல் ஏற்றத்தாழ்வு அரசியல் நிகர்மையைத் தகர்த்து விடும். இது அண்ணலின் எச்சரிக்கை. அரசியல் குடியாட்சியத்துக்கு அடிப்படையாக சமூகக் குடியாட்சியம் தேவை என்று அவர் வலியுறுத்தினார். ஆனால் தாம் வரைந்த அரசமைப்பு சமூகக் குடியாட்சியத்தை நிறுவத் தவறி விட்டது என்பதை அவர் விரைவில் உணர்ந்து கொண்டார். இறையில்லம் ஒன்று கட்டினோம், அதில் பேய் புகுந்து கொண்டால் கொளுத்தி விட வேண்டியதுதான் என்றார்.

முதலியத் தனியுடைமை அமைப்பு குடியாட்சியத்தைப் பொய்மையாக்குவது பற்றி இலெனின் எழுதியுள்ளார். எவ்வளவு சிறந்த குடியாட்சியக் குடியரசும் சாறத்தில் முதலாளர் வகுப்பின் வல்லாட்சியமாகவே இருப்பதை எடுத்துக்காட்டினார். உடைமை உறவுகள் குடியாட்சியத்தின் சாற்றை உறிஞ்சி அதனை வெறும் சக்கை ஆக்கி விடுகின்றன, வெறும் வடிவ அளவிலான குடியாட்சியம் என்பது சனநாயகத்தைப் பணநாயகம் ஆக்கி விடுகிறது.

சமூகப் பொருளியல் ஏற்றத்தாழ்வு அரசியல் குடியாட்சியத்தைப் பொருளற்றதாக்கி விடுவது




பற்றிய அம்பேத்கர் சிந்தனையும், உடைமை உறவுகளால் குடியாட்சியம் கூடாகிப் போவது பற்றிய இலெனின் கருத்தும் வெறும் கோட்பாடுகள் மட்டுமல்ல என்பதை இந்தியக் குடியரசின் எழுபதாண்டுப் பட்டறிவு நமக்கு உணர்த்தியுள்ளது. இந்தியா ஏழை நாடுதான் என்றாலும் இந்திய நாடாளுமன்றம் ஏழை எளியவர்களின் மன்றமன்று என்பது வெள்ளிடைமலை. தேர்தலில் போட்டியிடுவதற்கே கோடிகள் தேவை. ஒரு சட்டப் பேரவைத் தொகுதிக்கு ஒரு வேட்பாளர் 30 இலட்சம் செலவிடத் தேர்தல் ஆணையமே இசைவளிக்கிறது. சட்டப் பேரவைக்குக் குறைந்தது இலட்சாதிபதிகள், நாடாளுமன்றத்துக்குக் குறைந்தது கோடீசுவரர்கள்… இதுதான் எழுதப்படாத விதி.

ஒப்புக்குப் போட்டியிடாமல் உண்மையிலேயே: ”வெற்றி வேட்பாளர்” என்று சொல்லிக் கொள்ளுமளவுக்குப் போட்டியிட வேண்டுமானால் பெருந்தொகைகள் தேவைப்படும். இருக்கிற ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த சமூகத்தை இன்னுங்கூட மேடுபள்ளமாக்குவதே இந்தத் தேர்தல்களும் இவற்றால் விளையும் ஆட்சிகளும் செய்யும் வேலையாக இருக்கும். அம்பேத்கர் சுட்டிய முரணிலை தணியவில்லை, மென்மேலும் முற்றி மோசமடைந்தே நிற்கிறது.

நிகர்மையும் நீதியும் குறிக்கோள்களாகக் கொண்டவர்கள் இப்படிப்பட்ட தேர்தல் அரசியலில் ஈடுபட்டு என்ன சாதித்து விட முடியும்? என்ற கேள்விதான் ஓங்கி எழுகிறது. பச்சைப் பெருவெள்ளத்தில் எதிர்நீச்சலிடக் குதித்தவர்கள் மூழ்கிப் போகின்றார்கள். அல்லது அடித்துச் செல்லப்பட்டு விடுகின்றார்கள். இடதுசாரிகள், குடியாட்சியர்கள், குமுகியர்கள் (சோசலிஸ்டுகள்), பொதுமையர், சமூகநீதியாளர்கள் என்று பலதரப்பட்ட முற்போக்காளர்களும் இந்தத் தேராத்



தேர்தலில் அடைந்துள்ள பட்டறிவே இதற்குப் போதிய சான்று!

பொதுமையரை எடுத்துக் கொள்வோம். இந்தக் குடியாட்சியத்தில் வாக்குப் பெட்டி வழியாகப் பாட்டாளிகளின் அரசமைக்கும் முயற்சி என்னவாயிற்று? 540க்கு மேற்பட்டோரைக் கொண்ட நாடாளுமன்ற மக்களவையில் கால் பங்கு இடங்களில் கூட அவர்களால் போட்டியிட முடியவில்லையே, ஏன்? ஓரிரு மாநிலங்களில் மட்டுமே அவர்களால் பெருந்தொகையான இடங்களில் போட்டியிடவே முடிகிறது. ஆளும் வகுப்புக் கட்சிகளால் மட்டுமே அனைத்திந்திய அளவில் போட்டியிடவும் மாறிமாறி ஆட்சியைக் கைப்பற்றவும் முடிகிறது. மற்றக் கட்சிகள் அவற்றோடு ஒட்டிக் கொண்டால் மட்டும்தான் தங்கள் இருப்பைப் பதிவு செய்யவே முடியும் என்ற நிலை!

இந்தியா ஒற்றைத் தேசமன்று, பல தேசங்களைக் கொண்ட நாடு! புவியியல் நோக்கில் ஒரு துணைக்கண்டம்! அரசியல் நோக்கில் ஓர் அரசக் கட்டமைப்பு! மாநிலங்கள் என்று மங்கலமாய் வழங்கிடும் இந்தத் தேசங்களின் நலனைக் குறித்திடும் அரசியல் ஆற்றல்கள் தனித்தோ கூட்டாகவோ தேர்தல் வழியாக அதிகாரப் படிகளில் ஏறிச்செல்வது பற்றி எண்ணிப் பார்த்திடவும் கூடுமா? ஆளும் வகுப்புக் கட்சிகளின் தயவில் மட்டும், இடைக்கட்டங்களில் மட்டும் நாற்காலி விளிம்பில் அமர்ந்து பார்க்கலாம். அதற்கு மேல் ஆசைப்பட்டு விடக் கூடாது. தேவ கௌடாவும்

ஐகே குஜ்ராலும் சந்திரசேகரும் நடத்திய நொண்டியாட்டம் வரலாற்று நினைவுகளில் பதியுமளவுக்காவது நீடித்துண்டா?

பணநாயகத்தின் இயங்குமுறையே உழைக்கும் மக்களையும் ஒடுக்குண்ட saமுகாயங்களையும் சிறுபான்மை மக்களையும் தேசிய இனங்களையும் அதிகார நிழலில் ஒதுங்க விடாமற்செய்து விடுகிறது என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். ஆகவே விடியல் தேடி மாற்றம் நாடும் ஆற்றல்களை வழிமறிக்கவே வாக்குப் பெட்டிகள் பயன்படுகின்றன. ஆளும் அரசமைப்பை அப்படியே ஏற்று, அடிப்படை மாற்றங்களை எதிர்த்து நிற்கும் கட்சிகளுக்குள் மட்டும் அதிகாரப் போட்டியைக் குறுக்கிக் கட்டுப்படுத்தவே இந்தத் தேர்தல் முறை உதவுகிறது.

இந்தியச் சமூகத்தின் அடிப்படை முரண்பாடுகளில் ஒன்று சாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையிலானது. இந்த முரண்பாட்டின் வெளிப்பாடுதான் தீண்டாமை. பெரும்பான்மைக்கு அதிகாரம் தருதல் என்ற தேர்தல் முறையின் அடிப்படை சிறுபான்மையினரான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக அமைந்து விடும் என்ற நியாயமான அச்சம் அம்பேத்கருக்கு இருந்தது. தனித் தொகுதி (ரிசர்வ் தொகுதி) ஏற்பாடு இதற்குப் போதாது என்ற புரிதலோடுதான் இரட்டை வாக்குரிமையும் தனித் தொகுதியும் என்ற கோரிக்கையை அவர் எழுப்பினார். தலித் அமைப்புகளே இப்போதெல்லாம் இந்தக் கோரிக்கையை எழுப்புவதில்லை. எழுப்புவதால் ஆகப் போவது ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள் போலும்.

தலித் விடுதலை, சமூக மாற்றம், மக்கள்-குடியாட்சியம் ஆகிய உயர்ந்த குறிக்கோள்களை அடைவதற்கு இப்போது இந்த நாட்டிலுள்ள தேர்தல் முறை உதவாது என்பதால் முற்போக்கு ஆற்றல்கள் வாக்கரசியலை மூலவுத்தி வகையில் பயன்படுத்திக் கொள்ள முடியாது என்கிறோம். இந்தத் தேர்தல் முறையில் அடிப்படையான சீர்திருத்தங்கள் வேண்டும் என்பதற்காகப் போராடலாம். இதற்கிடையில் வாக்கரசியலைப் புறக்கணிப்பது தவிர வேறு வழியில்லை. இது மூலவுத்தி வகைப்பட்ட புறக்கணிப்பு (strategic boycott).

ஆனால் தேர்தல் அரசியலைப் பகுதிக் கோரிக்கைகளுக்காகவும், சில உடனடி நோக்கங்களுக்காகவும், பார்க்கப் போனால் நாடாளுமன்ற அரசியலின் வரம்பை உணர்த்துவதற்காகவும் கூட பயன்படுத்திக் கொள்ள முடியும். இவ்வாறான நிலைமைகளில் தேர்தல்களிலும் தேர்தல் வழி நாடாளுமன்றம், சட்ட மன்றங்களிலும் பங்கேற்பது தேவையான ஒன்று. இவ்வாறான பங்கேற்பை குறுவுத்தி வகைப்பட்ட பங்கேற்பு (tactical participation) என்கிறோம். முதலியத் தேர்தலிலும் நாடாளுமன்றத்திலும் பங்கேற்க வேண்டிய தேவையை மறுத்த பல

நாடுகளையும் சேர்ந்த இடதுசாரிகளைக் குற்றாய்வு செய்து இலெனின் எழுதிய நூல்: *"இடதுசாரிப் பொதுமை" - ஓர் இளம்பருவ நோய்!*

உருசியப் புரட்சியின் வரலாற்றில் இலெனின் தலைமையிலான போல்சுவிக்குகள் டூமா எனப்படும் ஜாராட்சிக் கால நாடாளுமன்றத்தைப் புறக்கணித்ததும் உண்டு, அதில் பங்கேற்றதும் உண்டு. சீனப் புரட்சியின் வரலாற்றில் தேர்தலில் பங்கேற்பது, நாடாளுமன்றம் செல்வது பற்றிய கேள்வியே எழவில்லை. ஏனென்றால் அப்படி எதுவும் அங்கே இல்லை.

அண்மைக் காலத்தில் முடியாட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதில் வெற்றி கண்ட நேபாளப் புரட்சியின் வரலாற்றில் மாவோவியர்கள் முதலில் நாடாளுமன்றம் சென்றார்கள், பிறகு மக்கள்-போர் என்ற ஆயுதப் போராட்ட வழியைப் பத்தாண்டு காலம் கையாண்டார்கள். பிறகு ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஏனைய குடியாட்சிய ஆற்றல்களுடன் இணைந்து பெருந்திரள் எழுச்சியில் பங்கேற்றார்கள். எழுச்சியின் உச்சமாக அரசமைப்புப் பேரவைக்கான தேர்தலை நடத்தச் செய்து அதில் போட்டியிட்டு வென்றார்கள். இன்றளவும் பல சிக்கல்கள் நீடித்தாலும் நேபாள இந்துத்துவ முடியாட்சி ஒழிந்தது ஒழிந்ததுதான்.

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அமெரிக்க வல்லரசியத்தின் புதுக்காலனிய ஆளுமையை எதிர்த்துப் போராடுவதில் தேசியக் குடியாட்சிய ஆற்றல்கள் தேர்தல்களைப் பயன்படுத்திக் கொள்வதில் வெற்றியும் தோல்வியும் கலந்த செழுமையான பட்டறிவு பெற்றுள்ளன. இந்தச் சிக்கல் தொடர்பான அலசலில் இந்நாடுகளின் பட்டறிவிலிருந்து கற்க வேண்டியன நிறைய உள்ளன. தென் ஆப்பிரிக்கத் தேசிய விடுதலை இயக்கம், பாலத்தீனத் தாயக மீட்பு இயக்கம் ஆகியவற்றின் பட்டறிவும் கூட நம் பாதையில் ஒளியூட்டும்.

இவ்வகையில் பலதரப்பட்ட பன்னாட்டுப் பட்டறிவு நிறையவே உண்டு. அறுதிப் புறக்கணிப்போ அறுதிப் பங்கேற்போ ஏற்புடைத்தன்று, போராட்டத்தின் நலன் கருதி இரண்டில் ஒன்றை நிலைமைக்கேற்பத் தேர்வு செய்யலாம். இதற்கும் மேலே போராட்டக் களங்களை இரு பெரும் வகைகளாகப் பிரித்துக் கொள்வது நம் ஆய்வுக்கு உதவும் என நம்புகிறேன். இலெனினுடைய ஆய்வு முழுவதும் உருசியா, பிரிட்டன், ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய தேசங்கள் தொடர்பாக அமைந்தது. தேச அரசுகளாக உருவான நாடுகளில் தேசிய விடுதலை பற்றிய கேள்வி எழாத சமூகச் சூழலில் அவர் இச்சிக்கலை ஆராய்ந்தார். தேசிய விடுதலைப் போராட்டக் கட்டத்தில் இருக்கும் நாடுகளில் தேர்தல் பங்கேற்பு அல்லது புறக்கணிப்பு பற்றிய விவாதங்கள் இலெனின் ஆய்வுகளில் இடம்பெறவே இல்லை. ஏனென்றால் அப்படிப்பட்ட நாடுகளில் தேர்தல் குடியாட்சியம், நாடாளுமன்றம் எதுவும் அவர் அறிந்த வரை இல்லை. சீனத்தில் குடியாட்சியப்

புரட்சியில் வலுவான தேசிய விடுதலைக் கூறு இருந்தது. வியத்நாமிலும் இதே நிலைதான். ஆனால் அங்கெல்லாம் இந்தச் சிக்கல் அவரறிய எழவே இல்லை.

ஆனால் பிரித்தானிய இந்தியா வன்குடியேற்ற நாடாக இருந்த போதே வாக்குரிமையும் தேர்தலும் நாடாளுமன்றமும் வந்து விட்டன. சிலோன் என்றறியப்பட்ட இலங்கையில் 1930களிலேயே வயதுவந்த அனைவருக்குமான வாக்குரிமை வந்து விட்டது. இந்த வாக்குரிமையே சிங்களப் பேரினவாத மேலாளுமைக்குத் துணையாகிப் போயிற்று. பெரும்பான்மை வைத்தது சட்டம் என்பது ஒரே தேசிய இனத்துக்குள் குடியாட்சியத்தை நிலைநிறுத்தும் கொள்கை என்ற நிலையிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் கொண்ட ஒரு நாட்டில் பெரும்பான்மைத் தேசிய இனத்தால் சிறுபான்மைத் தேசிய இனம் ஒடுக்கப்படுவதற்கு எளிதில் வழிசெய்து விடுகிறது. எனவேதான் குடியாட்சியம் மெய்ப்பட வேண்டுமானால் வயதுவந்த அனைவர்க்கும் வாக்குரிமை மட்டும் போதாது. ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் தன்தீர்வுரிமையும் (சுயநிர்ணய உரிமை) வேண்டும்.

ஒரு நாடு சமூக மாற்றத்துக்கான போராட்டக் கட்டத்தில் இருக்கும் போது முற்போக்கு ஆற்றல்கள் தேர்தலில் போட்டியிட்டு மெல்ல மெல்லப் பெரும்பான்மை பெற்று அதிகாரத்தைக் கைப்பற்ற ஒரு கோட்பாட்டு வாய்ப்பு (theoretical possibility) உள்ளது. தேசிய விடுதலைக்கான போராட்டக் கட்டத்தில் இருக்கும் போது இப்படிப்பட்ட வாய்ப்பு அரிதிலும் அரிதே. அதிலும் குறிப்பாக ஒடுக்குண்ட தேசம் மொத்தத்தில் சிறுபான்மையாக இருக்குமானால் இந்தக் கோட்பாட்டு வாய்ப்பே இல்லாமற்போய் விடுகிறது. எனவேதான் சமூக மாற்றத்துக்கான போராட்டக் கட்டத்தில் பங்கேற்பும் தேசிய விடுதலைப் போராட்டக் கட்டத்தில் புறக்கணிப்பும் பொது வழியாக உள்ளன. இந்த இருபெரும் வகைகளையும் அருவியல் கோட்பாடுகளின் (abstract theories) அடிப்படையில் வேறுபடுத்திக் காண்பதோடு சிக்கல் முடிந்து விடுவதில்லை. வரலாற்று வழியில் உருவியல் நிலைமைகளைக் (concrete conditions) கணக்கில் கொண்டுதான், அதாவது களமும் காலமும் கருதித்தான் தேர்தல் தொடர்பான அணுகுமுறையைத் தீர்மானிக்க வேண்டும். இந்தியாவை இயல்பான ஒரு தேசமாகக் கற்பிக்க ஆளும் வகுப்புகள் ஓயாது முயல்கின்றன. ஆனால் இந்தியா என்ற அரசியல் கட்டமைப்பு பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் பீரங்கி முனையில் கட்டப்பட்டது என்பதே வரலாற்று உண்மை. கிழக்கிந்தியக் கும்பினியாரோ விக்டோரியா மகாராணியாரோ இந்தியாவின் வளங்களைக் கொள்ளையிடவும் இந்தத் துணைக்கண்டத்து மக்களினங்களை அடக்கியாளவும் வரலாற்று உரிமை வழங்கியது யார்? இந்தக் கேள்வி நம் காலத்திய இந்திய ஆட்சியாளர்களுக்கும் பொருந்தக் கூடியதே.

காசுமீரம் இந்தியாவுக்குச் சொந்தம் என்ற வாதத்துக்குச் சான்றாக மன்னர் அரிசிங் ஒப்பமிட்ட இணைப்பு ஒப்பந்தம் காட்டப்படுகிறது. தமிழ்நாடு இந்தியாவுக்குச் சொந்தம் என்பதற்கு ஒப்பந்தம் உண்டா? உண்டென்றால் அதில் ஒப்பமிட்டவர் யார்? அன்றும் இன்றும் இந்தியா விரும்பிச் சேர்ந்த தேசங்களின் ஒன்றியம் இல்லை. இந்தச் செயற்கைக் கட்டமைப்பை நியாயப்படுத்தவும், வல்லரசியத்தின் சமூக அடித்தளத்தை விரிவாக்கிக் கொள்ளவும், தமக்கெதிரான போராட்டங்களை மடைமாற்றவும் பிரித்தானிய ஆட்சியாளர்கள் இந்தியாவில் தேர்தல் முறையை வரம்புக்குட்பட்ட அளவில் புகுத்தினார்கள்.

உண்மையில் 1935ஆம் ஆண்டு ஆங்கிலேயர் கொண்டுவந்த இந்திய அரசாங்கச் சட்டம் மாகாணங்களுக்கு வழங்கியதை விடக் குறைவான அதிகாரங்களையே இந்திய அரசமைப்புச் சட்டம்-1950 மாநிலங்களுக்கு வழங்கியுள்ளது. இந்திய ஒன்றியத்தில் மாநிலங்களின் நிலை அ இவ்வகையில் மிண்டோ-மார்லி சீர்திருத்தச் சட்டம் (1909), மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம் (1919), இந்திய அரசாங்கச் சட்டம் (1935) ஆகியவை கொண்டுவரப்பட்டன. 1920ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த மாண்டேகு-செம்ஸ்போர்டு சட்டம் மாகாணங்களில் இரட்டையாட்சியை உருவாக்கியது. முகன்மையற்ற சில அதிகாரங்களைத் தேர்தல் வழித் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களுக்கு வழங்கியது. அதை வைத்துக் கொண்டு நீதிக்கட்சி சென்னை மாகாணத்தில் சில சீர்திருத்தங்கள் செய்தது. 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் மாகாண சுயாட்சி வழங்குவதாகக் கூறிக்கொண்டது. மத்தியில் இரட்டை ஆட்சியை உருவாக்கியது. ஒப்பளவில், 1935ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் மாகாணங்களுக்கு அதிக உரிமைகளை, அதிகாரங்களை வழங்கியது. ஆனாலுங்கூட, ஒரு நாட்டை அடக்கி மேலாளுமை செலுத்துவதற்கான ஒரு சட்டமாகத்தான் ஆங்கிலேய அரசு அதை உருவாக்கியிருந்தது. அது மாகாண சுயாட்சி அளிப்பதாகக் கூறியிருந்தாலும்கூட, அந்த மாகாணங்களை "மாண்புமிகு நகராட்சிகள்" (Honourable Municipalities) என்று காந்தியார் வண்ணித்தார். இந்த 1935ஆம் ஆண்டுச் சட்டம்தான் சிற்சில மாற்றங்களுடன் 1950ஆம்ஆண்டு இந்தியக் குடியரசின் அரசமைப்புச் சட்டமாயிற்று என்பது வல்லுநர்தம் கருத்து.

வலமான ஒன்று. மாநில அரசுகள் மிகக் குறைந்த அதிகாரங்களுடன் தட்டுத் தடுமாறியே காலந்தள்ள வேண்டிய நிலை! இரந்து உயிர்வாழும் இழிநிலைக்கு மாநிலங்கள் தள்ளப்பட்டுள்ளன.

மாநிலச் சட்ட மன்றங்களுக்குச் சட்டமியற்றும் இறைமை கிடையாது. சட்ட முன்வடிவுகளை

மட்டுமே அவற்றால் இயற்ற முடியும்

சட்டப் பேரவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி விட்டு, நடுவணரசைத்தான் மாநில அரசுகள் தொங்கிக் கொண்டிருக்க வேண்டுமே தவிர, தாமாகச் சட்டமியற்ற அதிகாரமில்லை. 1974ஆம் ஆண்டு தமிழகச் சட்டப்பேரவை இயற்றிய மாநில சுயாட்சித் தீர்மானத்தை இந்திய நடுவண் அரசு குப்பைக் கூடையில் வீசி 46 ஆண்டுகள் ஆகி விட்டன.

மாநில அரசுக்கென்று இருக்கும் கொஞ்சநஞ்ச அதிகாரங்களும் இந்திய ஆட்சியாளர்களால் மென்மேலும் பறிக்கப்பட்டு வருகின்றன.

தமிழகம் பொருளியலாகச் சூறையாடப்படுகிறது. பண்பாட்டில் பார்ப்பனியம் ஆட்சி செய்கிறது. தமிழ் மொழி ஆட்சிமொழியாக, வீட்டு மொழியாக, நீதி மொழியாக, வழிபாட்டு மொழியாக விளங்க வாய்ப்பின்றிக் கிடக்கிறது. இந்திய வல்லரசுக்குத் தமிழ்த்தேசம் அடிமைப்பட்டுள்ளது. இந்த அடிமைநிலை ஒழிய வேண்டும் என்ற நோக்கத்துக்குத் தேர்தல் அரசியல் எந்த அளவுக்குப் பயன்படும் என்ற வினா எழுகிறது.

நிகழ் அரசமைப்பு மாற்றியமைக்கப்பட்டு, தேசிய இனக் குடியரசுகளின் கூட்டமைப்பாக இந்தியாவை மாற்ற வேண்டும் என்பதே தமிழ்நாட்டு மக்களின் நலன் வேண்டுவோர் வலியுறுத்தும் கொள்கையாக இருக்க முடியும். பிரிந்து போகும் உரிமையோடு கூடிய தன்தீர்வுரிமை என்பது ஐநா பட்டயம் உள்ளிட்ட பன்னாட்டு சட்டங்களில் ஏற்கப்பெற்றுள்ளது. இந்த உரிமையை ஏற்காத எந்த அரசமைப்பும் முழுமையான குடியாட்சியம் என்ற தகுதியைப் பெற முடியாது. ஆனால் தேசிய இனங்களின் இருப்பையே ஏற்காத இந்திய அரசமைப்புக்கு இணங்கி நடந்தால் மட்டுமே தேர்தலில் போட்டியிட முடியும் என்ற நிலையில், தமிழ்த் தேசத் தன்தீர்வுரிமை, தமிழ்த்தேச இறைமை, தமிழ்த் தேச விடுதலை என்ற கொள்கைகளை எடுத்துரைத்து மக்களிடம் விழிப்புணர்வு உண்டாக்கவாவது இந்தியத் தேர்தல்களில் வாய்ப்புண்டா?

மொழித் தேசிய இனத் தாயகங்களின் உறுதியான போராட்டங்களால் மொழிவழி மாநிலங்கள் அமைப்பை வேறுவழியின்றி இந்திய அரசு ஏற்றுக் கொண்டது. ஆனால் தேசிய இனங்களின் வாழ்புலத்தை மொழிவழித் தேசிய இனங்களின் தாயகமாக அது மதிக்கவில்லை. அவற்றை வெறும் ஆட்சிப் பிரிவுகள் போலவே பார்க்கிறது. மொழிவழி மாநில அமைப்பை அறவே கலைத்துப் போடுவது இப்போதுள்ள ஆட்சியாளர்களின் வெளிப்படையான நோக்கம்.

இந்திய அரசமைப்பில் மூன்றாம் உறுப்பு மாநிலங்களை உடைக்கவோ பிரிக்கவோ கலைக்கவோ பெயர் மாற்றம் செய்யவோ நாடாளுமன்றத்துக்கு அதிகாரமளிக்கிறது. அதுவும் எளிய பெரும்பான்மை கொண்டே இதைச் செய்ய முடியும். இந்திய அரசமைப்பின்படி மாநிலங்களை அழிக்க முடியும்; ஆனால் இந்திய ஒன்றியத்தை அழிக்க முடியவே முடியாது. ஆகவே சர்க்கஸ் கூடாரத்தில் இரும்புக் கூண்டுக்குள் 'மோட்டார்-பைக்' ஓட்டுவது போன்றதுதான் இந்தியத் தேர்தல்முறை. ஓசைக்கும் விறுவிறுப்புக்கும் பஞ்சமிருக்காது. ஆனால் பயனொன்றும் விளையாது.

விடியல் வேண்டி நிற்கும் நாம் என்ன செய்யலாம்? இந்திய அரசமைப்புச் சட்டத்தை மாற்றும் நோக்கில் நாடாளுமன்றத்துக்குச் செல்லலாம். லோக் சபா என்னும் மக்களவையில் 543 உறுப்பினர்கள். அதில் தமிழ்நாட்டிற்கு 39 பேர் - புதுவைக்கு ஒருவர்! ஆக மொத்தம் 40 பேர். 543இல் 40 என்பது அற்பச் சிறுபான்மை! நாடாளுமன்ற வழிமுறையில் நம்மால் ஒரு மாற்றமும் கொண்டுவர முடியாது. நம் உரிமைகளைப் பலி கொள்ளும் பீடம் அது!

பீரங்கிக் குண்டுகளாலும், மரங்களில் தொங்கிய தூக்குக் கயிறுகளாலும், தீவுச் சிறைகளாலும், தோலுரித்த கசைகளாலும், கையிழுப்புச் செக்குகளாலும், கால்விலங்குச் சங்கிலிகளாலும், கல்லுடைப்புத் தண்டனைகளாலும்… தமிழர்களும் பல்வேறு இன மக்களும் அடக்கி அடிமை கொள்ளப்பட்டு கொள்ளைக்கார வெள்ளையரால் கட்டப்பட்டதுதான் இந்தியா! இந்தியாவின் உண்மையான தந்தைமார் இராபர்ட் கிளைவ் வகையறாக்களே! இன்று தில்லியிலிருந்து நம்மை அடக்கி ஆண்டு கொண்டிருப்பவர்கள் கிளைவ் வழிவந்தவர்களே! நமக்கு அயலவர்களே! அறிஞர் அண்ணா சொன்னது போல் அவர்கள் நம்மவர்களும் அல்ல! நல்லவர்களும் அல்ல! பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி எதனோடு ஒப்பிட்டாலும் கூடுதலான மக்கள்தொகை கொண்ட நாம் இந்தியாவுக்குள் சேர்க்கப்பட்டதால் செயற்கையாகச் சிறுபான்மை ஆக்கப்பட்டு விட்டோம். இதுதான் இந்திய நாடாளுமன்றத்தில் எதிரடிக்கிறது. நாடாளுமன்றக் குடியாட்சியம் என்பது தமிழர்களுக்கு வாக்குப்பெட்டிகளால் கட்டப்பட்ட அடிமைச் சிறையே! நாமாகவே கழுத்தில் மாட்டிக் கொள்ளும் தூக்குக் கயிறே!

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டுப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்து மாநில உரிமைகளை மீட்க முடியுமா? நடுவண் அரசு பறித்துக் கொண்ட மாநில உரிமைகளை மீட்க மாநிலச் சட்டப் பேரவைக்கு அதிகாரம் கிடையாது! தீர்மானங்கள் நிறைவேற்றி மகிழலாம். ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது. தமிழ்நாடு அரசையும் சட்டப்

பேரவையையும் உரிமை மீட்புப் போராட்டக் கருவியாக மாற்றலாமே? அந்த ஆட்சியையும் பேரவையையும் இந்திய அரசு கலைத்து விடும்!

ஆக, எப்படிப் பார்த்தாலும், மக்கள்நலன் நாடும் அரசியல் இயக்கங்கள் மெய்யாகவே மாற்றத்துக்கான கொள்கைகளை முன்னிறுத்தித் தேர்தலை எதிர்கொள்வது என்ற வாய்ப்பே விட்டுவைக்கப்படவில்லை. இந்திய வல்லரசியச் சட்டகம் மாநிலத் தேர்தல் கட்சிகளைத் தன் ஆளுகைக்கு உட்பட்ட கங்காணிக் கட்சிகளாக வதக்கிப் பழக்கி வைத்துக் கொள்கிறது.

இதனால் கொள்கை முழக்கங்களோடு புறப்பட்ட தேர்தல் கட்சிகள் தனியார் பெருங்குழுமங்களாகச் சீரழிந்து விட்டன. மக்களின் வரிப் பணத்தைக் கொள்ளையடித்து, பெரும்பெரும் முதலாளிகளாக - கட்சித் தலைவர்கள் வலம் வருகிறார்கள். இலவசங்கள் வழங்குவது, வாக்குகளுக்குப் பணம் கொடுப்பது போன்றவற்றின் மூலம் மக்களை ஊழல் குட்டையில் ஊறவைப்பதே தங்கள் கொள்ளைக்கும் தலைமைக்கும் பாதுகாப்பு என்பது இத்தலைவர்களின் உள்ளக் கிடக்கை!

முற்போக்குக் கூட்டணி! சனநாயகக் கூட்டணி! சமயச் சார்பற்ற கூட்டணி! மக்கள் நலக் கூட்டணி! இப்படி எத்தனையோ நாமகரணங்கள்! நெருக்கிக் கேட்டால் கூட்டணிக்குக் கொள்கை தேவையில்லை என்று சொல்லி விடுவார்கள். அப்படியானால் கொள்கையற்ற கூட்டணி என்றே பெயர் சூட்டிக் கொள்ள வேண்டியதுதானே! இந்திய அரசமைப்பும் அதன் உறுப்பாகிய தேர்தல் முறையும் கொள்கைவழி அரசியலுக்கு இடந்தர மாட்டா. அவை பதவி வேட்டை அரசியலின் நாற்றங்கால்கள்! ஊழலின் ஊற்றுக் கண்கள்! கொள்ளையடிப்பது தவிர வேறு கொள்கை முளைவிடவே இடந்தராத நச்சு வயல்கள்!

நாடாளுமன்றத் தேர்தல் என்றாலும் சட்ட மன்றத் தேர்தல் என்றாலும் ஒரே ஒரு கொள்கைக்குத்தான் இடமுண்டு! அது ஆளும் வகுப்பின் நலன் பேணும் கொள்கை! பொருளியல், அரசியல், பண்பாட்டுக் கொள்கை! இந்தக் கொள்கையை ஒரு கட்சி வெளிப்படையாக வலியுறுத்தும்! பிறிதொரு கட்சி வேறு சொற்களில் எடுத்துரைக்கும். இந்தக் கொள்கையை எதிர்த்துப் பேசவும் கூட செய்யலாம். ஆனால் இந்தக் கொள்கைக்கு ஒரு மாற்றுக் கொள்கையை முன்னிறுத்தி வெற்றிபெறச் செய்ய முடியாது.


மாற்றம் வேண்டுவோர், விடியல் விழைவோர் தமக்குத் தேவையானதைத் தேர்ந்து தெளியத் தேர்தல் களம் உதவாது! அவர்கள் நாட வேண்டிய களங்கள் வேறு!

# பொருளாதார சீர்திருத்தமா, சீரழிப்பா?

சமந்தா



இந்தியாவில் கோவிட் தொற்றுகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ள நிலையில் கோவிட் மூன்றாம் அலை ஏற்படுவதற்கான அச்சுறுத்தல் தொடர்கிறது. இந்தியாவில் இது வரை 10 விழுக்காட்டினருக்கு மட்டுமே இரு முறை கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் கோவிட் தொற்று நோயால் ஏற்பட்ட இறப்புகளின் எண்ணிக்கை அதிகாரப்பூர்வ எண்ணிக்கையை விட 10 மடங்கு அதிகமாக இருக்கக்கூடும் என உலகளாவிய வளர்ச்சிக்கான மையம் என்ற அமெரிக்க ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. பெகாசஸ் மூலம் கைபேசிகளை ஒட்டுக் கேட்க பல லட்சம் டாலர் நிதி ஒதுக்கிய பாஜக அரசு அதை சுகாதாரத் துறையில் ஒதுக்கியிருந்தால் கோவிட் இறப்புகளின் எண்ணிக்கை இந்தளவுக்கு உயர்ந்திருக்காது.கோவிட்-தடுப்புமருந்து பெறுபவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாமல், சுகாதார பாதுகாப்பு கட்டமைப்புகளை மேம்படுத்தாமல் கோவிட் மூன்றாம் அலையை எதிர்கொள்ள இந்தியா தயாராக உள்ளதாகக் கூறுகிறார் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.



பொது சுகாதார அமைப்பிற்கு, குறிப்பாக ஆரம்ப சுகாதார பராமரிப்பிற்கும், அத்தியாவசிய சுகாதார உள்கட்டமைப்பிற்கும் தொடர்ச்சியாக குறைந்த நிதியையே இந்திய அரசு ஒதுக்கீடு செய்யும் போக்கு, பேரழிவு தரும் இரண்டாவது அலைக்குப் பிறகும் அரசால் சரி செய்யப்படாமல் உள்ளது, என்று ஆக்ஸ்ஃபாம் இந்தியாவின் தலைமை நிர்வாக அதிகாரி அமிதாப் பெஹார் கூறியுள்ளார். அரசு மதிப்பீடுகளின்படி, இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 6 கோடி பேர் சுகாதார செலவினங்களால் வறுமைக்கு தள்ளப்படுகின்றனர்.தொற்றுநோய் ஏற்பட்டு ஒரு வருடம் ஆகியும், இரண்டு கோவிட்-19 அலைகளை எதிர்கொண்ட பின்னும், இந்திய அரசு மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 2.5 விழுக்காட்டை சுகாதாரத்துறைக்கு ஒதுக்க தவறியது" என்று ஆக்ஸ்பாம் இந்தியாவின், சமத்துவமின்மை, சுகாதாரம், கல்வித்துறை தலைவர் அஞ்சேலா தனேஜா தெரிவித்துள்ளார். தொற்றுநோய் தாக்கம் தொடர்ந்த போதும் 2021-22 நிதி நிலை அறிக்கையில் சுகாதாரம் , குடும்ப நல அமைச்சகத்திற்கு (MoHFW) சென்ற நிதி ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டை விட 9.8 விழுக்காடு குறைவாக ரூ .76,901 கோடியே ஒதுக்கப்பட்டது.

கோவிட் -19 பொதுமுடக்கம் இந்திய பெண்களின் உணவூட்டத்தை எதிர்மறையாக பாதித்துள்ளதாக விவசாயம், உணவூட்டம் பற்றி ஆய்வு செய்யும் அமெரிக்காவின் டாடா-கார்னெல் அமைப்பு அறிவித்துள்ளது. இவ்வமைப்பு மேற்கொண்ட ஆய்வில் உத்திரபிரதேசத்தின் மகாராஜ்கஞ்ச், பீகாரின் முங்கர், ஒடிசாவின் கந்தமால், காலாஹண்டி ஆகிய நான்கு பொருளாதாரத்தில் பின்தங்கிய மாவட்டங்களில் மே 2019 உடன் ஒப்பிடும்போது மே 2020 ல் வீட்டு உணவு செலவுகளும், குறிப்பாக இறைச்சி, முட்டை, காய்கறிகள்,பழங்கள்

வாங்குவதற்கான செலவினங்கள் குறைந்துள்ளதாகவும் பெண்கள் உட்கொள்ளும் உணவின் பல்வகைத்தன்மையும் குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தொற்றுநோயால் பல லட்சக் கணக்கான மக்கள் வேலையின்மை, வருவாய் குறைவு, சுகாதார செலவு, பணவீக்கம், ஆகியவற்றால் வறுமைக்கும், கடன் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.வீட்டில் உள்ள தங்க நகைகளை அடகு வைப்பவர்கள்/ விற்பவர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்தியப் பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் ஆய்வுமையத்தின் தரவுகளின் படி கோவிட் -2 அலையின் போது கொண்டுவரப்பட்ட பொதுமுடக்கத்தால் ஏப்ரல் மற்றும் மே மாதத்தில் 1.72 கோடி சிறு வணிகர்களும், தினக்கூலி தொழிலாளர்களும் வேலை இழந்துள்ளனர். ஊதியம் பெறும் ஊழியர்கள் 32 லட்சம் பேர் வேலை இழந்துள்ளனர். வணிகர்களில் 57 லட்சம் பேர் வேலை இழந்துள்ளனர்.

இந்திய ஸ்டேட் வங்கியின் (SBI) பொருளாதார ஆய்வுத் துறை அதிகரித்து வரும் வீட்டு கடன்களின் அளவு குறித்து கவலை தெரிவித்துள்ளது. 2019-20ல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 32.5 விழுக்காட்டிலிருந்த வீட்டுக்கடனின் அளவு 2020-21 ஆம் ஆண்டில் 37.3 விழுக்காடாக அதிகரித்துள்ளது. 2020-21ல் வங்கி வைப்புத்தொகையில் சரிவு ஏற்பட்டுள்ளது, சுகாதார செலவினங்கள் அதிகரிப்பதால் குடும்பங்கள் கடன் நிலை மேலும் அதிகரிக்கும் என்பதால், 2021-22ல் நிலைமை மோசமடைய வாய்ப்புள்ளது என்று எச்சரித்துள்ளது.இந்தியாவின் ஊதிய வருவாய் 2019-20ல் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 34.1 விழுக்காடாக இருந்தது 2020-2021ல் 30.6 விழுக்காடாக சரிவடைந்துள்ளது.சென்ற வருடம் 11 விழுக்காடு இருந்த வங்கி வைப்புத் தொகைகளின் வளர்ச்சி இந்த வருடம் ஜூலையில் 9.8 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

இந்திய பொருளாதாரத்தின் முக்கிய இயக்கு சக்தியாக சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் செயல்படுகின்றன. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30 விழுக்காடு பங்களிப்பையும், ஏற்றுமதியில் 50 விழுக்காடு பங்களிப்பையும் அளித்து வருகின்றன. இவற்றின் மூலம் 11 கோடிக்கும் அதிகமானோர் வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.ஆனால் மத்திய அரசு அவற்றின் பங்களிப்பை அங்கீகரித்து உரிய விதத்தில் பொருளாதார ஆதரவை அளிப்பதில்லை. சிறு, குறு

நடுத்தர நிறுவனங்களில் கோவிட் -19 தொற்றுநோயின் தாக்கத்தை ஆய்வு செய்ய நாடாளுமன்றத்தில் நிலைக்குழு அமைக்கப்பட்டது. தொழில்துறைக்கான நாடாளுமன்ற நிலைக்குழு ஆய்வு மேற்கொண்டு அரசளித்த தூண்டுதல் நிதித் தொகுப்பு போதுமானதாக இல்லை என்று கூறியுள்ளது. குழுவின் கூற்றுப்படி, தூண்டுதல் நடவடிக்கைகள் நீண்ட கால அடிப்படையிலானவை, அதில் கடன் திட்டங்களே அளிக்கப்பட்டுள்ளன. அதற்கு பதிலாக பணப்புழக்கத்தை அதிகரித்து வேண்டலை மேம்படுத்துவதற்கான உடனடி துயர்தணிப்பு நடவடிக்கைகளே தேவை என்றும் தொற்றுநோய் வீழ்ச்சியிலிருந்து பொருளாதாரத்தை மீட்பதற்கு, முதலீடு, ஏற்றுமதி, வேலைவாய்ப்பை கூடுதலாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு பெரிய நிதித்தொகுப்பை உடனடியாக வழங்குமாறு அரசிற்கு பரிந்துரை செய்துள்ளது. அரசின் கொள்கைகள் நாட்டின் நடுத்தர மற்றும் பெரிய நிறுவனங்களின் நலனை இலக்காகக் கொண்டவை.கடந்த ஆண்டு அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட தூண்டுதல் தொகுப்பின் பயன் சிறு குறு நிறுவனங்களை சென்றடையவில்லை என்றும் அறிவுறுத்தியுள்ளது.

காதி மற்றும் கிராம தொழில்கள் ஆணையம் (KVIC) பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (PMEGP) கீழ் அமைக்கப்பட்ட குறு நிறுவனங்களில் தொற்றுநோய் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக சமீபத்தில் ஒரு ஆய்வை மேற்கொண்டது. பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் பயனாளிகளில் 88 விழுக்காட்டினர் எதிர்மறையாக பாதிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

மே மாதத்திற்கான மத்திய வங்கியின் தரவுகளின் படி சிறு குறு நடுத்தர நிறுவனங்களின் கடன் வளர்ச்சி 2021-22 நிதியாண்டின் இரண்டாவது முறையாக குறுக்கமடைந்துள்ளது.மேலும், இந்தியாவின் மொத்த வங்கிக் கடனில் சிறு குறு நிறுவனங்களின் பங்கு தொடர்ந்து ஐந்தாவது மாதமாக சரிவடைந்துள்ளது. 2020 டிசம்பரில் 12.11 விழுக்காடு இருந்த சிறு குறு நிறுவனங்களின் கடன் பங்கு 2021 மே மாதத்தில் 9.48 விழுக்காடாக சரிவடைந்துள்ளது.

பெரு நிறுவனங்கள் வருடாந்திர கொள்முதலில் 25 விழுக்காடு சிறு குறு நடுத்தர நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டும் என்ற பொது கொள்முதல் கொள்கை 2018ல் அறிமுகப்படுத்தப்பட்டது. பொது கொள்முதல் கொள்கை கண்காணிப்பு தளம் 2019, 2020 மற்றும் 2021ஆம் ஆண்டில் சிறுகுறு நடுத்தர நிறுவனங்களிடமிருந்து பெற்ற பொதுக்கொள்முதல்

முறையே 26 விழுக்காடு, 30 விழுக்காடு மற்றும் 28 விழுக்காடாக இருந்ததாகக் குறிப்பிடுகிறது.உண்மை என்னவென்றால் சிறு குறு நிறுவனங்களின் வாய்ப்புகளை பறிக்கும் கண் துடைப்பு நாடகமாகத் தான் இது நடைமுறையில் உள்ளது.பெருநிறுவனங்கள் பொது கொள்முதல் ஒப்பந்தங்களைப் முறைகேடாக பெறுவதற்காக தங்களுக்கு முற்றிலும் சொந்தமான துணை நிறுவனங்களை சிறுகுறு நடுத்தர நிறுவனங்களாக செயல்படுத்தி வருகின்றன. இதை பாஜக அரசும் கண்டும் காணாமல் உள்ளது.

பொது கொள்முதல் செய்யப்படும் 5-5.5 லட்சம் சிறு குறு நிறுவனங்கள் இந்திய கார்ப்பரேட் நிறுவனங்களின் சொந்த துணை நிறுவனங்கள் என்றும் ஜூன் மாதத்திலிருந்து, இத்தகைய நிறுவனங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்ததாகத் தெரிகிறது என்றும் இந்திய சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கான அவையின் நிறுவனரும், தலைவருமான சந்திரகாந்த் சலூன்கே கூறியுள்ளார்.

சிறு குறு நடுத்தர நிறுவனங்களின் வரையறையில் தற்போது சில்லறை விற்பனையாளர்களும், மொத்த வர்த்தகர்களும் சேர்க்கப்பட்டுள்ளது. மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் சில்லறை மற்றும் மொத்த விற்பனை வணிகமும் சிறு, குறு மற்றும் நடுத்தர (எம்எஸ்எம்இ) தொழில் பிரிவுக்குள் இணைக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கான சங்கங்கள் கவலை தெரிவித்துள்ளன.இந்த விரிவாக்கம் உற்பத்திச் செயல்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்களின் நலன்களை நீர்த்துப் போகச்செய்யும். இதனால் சிறு குறு நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் முன்னுரிமை துறை கடனானது சில்லறை விற்பனையாளர்களுக்கும், மொத்த வர்த்தகர்களுக்கும் இனிமேல் அளிக்கப்படும். சிறுகுறுநடுத்தர நிறுவனங்களின்பிரிவில் 2.5 கோடி சில்லறை, மொத்த வர்த்தகர்கள் கொண்ட துறையையும் சேர்த்திருப்பது சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதரவையும் பலவீனப்படுத்தும்.

அரசின் மத்திய நிதியுதவி திட்டங்கள் (CSS) மற்றும் மத்தியத் துறை திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை குறைக்கும் விதமாக நிதி அமைச்சகம் அனைத்து அரசுத் துறைகள் மற்றும் அமைச்சகங்களை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குத் தொடரும் மத்திய நிதியுதவி திட்டங்கள் (CSS) மற்றும் மத்தியத் துறை திட்டங்களை மறு மதிப்பீடு செய்து 31 ஜூலை 2021-க்குள் தங்கள் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க வேண்டும் என அறிவித்துள்ளது. இதனால் தற்போது 131 ஆக

இருக்கும் மத்திய நிதியுதவி திட்டங்கள், மத்தியத் துறை திட்டங்களுக்கான எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்கு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார்மயத்தை மேலும் துரிதப்படுத்துவதற்காகவும் பொதுத்துறை நிறுவனங்களை ஒழித்துக்கட்டுவதற்காகவும் பாஜக அரசு மத்திய பொதுத் துறை அலகுகளின் (PSU) கொள்கை உருவாக்கத்திற்கான முக்கிய அமைப்பாக செயல்படும் பொது நிறுவனங்களின் துறையை (DPE) தற்போது நிதி அமைச்சகத்துடன் இணைத்துள்ளது. பொது நிறுவனங்களின் துறை முன்னதாக, கனரக தொழில்கள் மற்றும் பொது நிறுவனங்களின் அமைச்சகத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

நிதியமைச்சர் முக்கியமான நான்கு துறைகளில் ஒரு பொதுத்துறை நிறுவனத்தை மட்டும் விட்டு வைத்து விட்டு, மற்ற அனைத்து நிறுவனங்களுமே தனியார்மயப்படுத்தப்படும் என அறிவித்திருந்தார்.இந்த நிதி ஆண்டில் பங்கு விலக்கலின் மூலம் 1.75லட்சம் கோடி வருவாய் ஈட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதுவரை பாஜக அரசு இதில் 4.4% மட்டுமே அதாவது ரூ .7,646 கோடி திரட்டியுள்ளது.

தற்போது, இந்தியாவில் தேசிய காப்பீட்டு நிறுவனம், நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நிறுவனம், ஓரியண்டல் இன்சூரன்ஸ் நிறுவனம் மற்றும் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் என நான்கு பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் உள்ளன.பொது காப்பீட்டு தொழில் வணிக (நாட்டுடைமையாக்கம்) சட்டத்தை திருத்தி பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களை தனியார்மயமாக்க வழி ஏற்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இச்சட்டத் திருத்தத்தின் மூலம் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களில் நிர்வாகக் கட்டுப்பாட்டை தனியாருக்கு மாற்றுவதற்காக அவற்றில் அரசு குறைந்தபட்சம் 51 விழுக்காட்டுப் பங்குகளை வைத்திருக்கவேண்டும் என்ற உட்பிரிவு நீக்கப்படும்.

முதலீடு செய்ய அங்கீகரிக்கப்பட்ட பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களில் 100 விழுக்காடு அன்னிய நேரடி முதலீட்டை பாஜக அரசு அனுமதித்துள்ளது. அதன் பொருட்டு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு துறைக்கான நேரடி அந்நிய முதலீட்டுக் கொள்கையில் ஒரு புதிய உட்பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. பாரத் பெட்ரோலிய எண்ணெய் நிறுவனத்தில் அரசின் 52.98 விழுக்காடு பங்குகளையும் விற்பனை செய்ய உள்ளது. தேசிய ஓய்வூதிய அமைப்பின் (NPS) கீழ் ஓய்வூதிய நிதி நிர்வாகத்தில் அன்னிய நேரடி முதலீட்டு (FDI) வரம்பை 49% லிருந்து 74% ஆக

உயர்த்தவும் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

பொதுத்துறை வங்கிகளின் மூலமே பெரும் தொழிலதிபர்களுக்கு 100கோடிக்கும் மேல் அதிகமான கடன்கள் அளிக்கப்பட்டுள்ளது. அவற்றை மீட்கமுடியாமல் தள்ளுபடி செய்யும் போக்கே பொதுத் துறை வங்கிகளில் தொடர்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் பொதுத்துறை வங்கிகள் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 1 லட்சம் கோடிக்கும் அதிகமான கடன்களை தள்ளுபடி செய்துள்ளன.பொதுத்துறை வங்கிகள் கடந்த 7 ஆண்டுகளில் ரூ.8 லட்சம் கோடி அளவிற்கு கடன்களை தள்ளுபடி செய்துள்ளன, வங்கிகளின் மூலதனத்தை உயர்த்த, மக்களிடமிருந்து பெறும் வரி பணத்திலிருந்து அரசு உட்செலுத்திய மூலதன நிதியை விட இது இரண்டு மடங்கு அதிகம். 2014-15 மற்றும் 2020-21 க்கு இடையில், அரசு பொதுத்துறை வங்கிகளில் ரூ .3.37 லட்சம் கோடி செலுத்தியது.வாராக் கடன்களால் அவற்றை நொடிக்க செய்து, பொதுத் துறை வங்கிகள் திறனற்றவையே என்று பிரகடனம் செய்யவும் அவற்றை முற்றிலுமாக தனியார்மயம் செய்வதற்கான வழிமுறையாக கள்ளக் கூட்டு முதலாளித்துவத்தின் சுரண்டல் கருவிகளாக பொதுத்துறை வங்கிகள் செயல்படுத்தப்படுகின்றன.

மார்ச் 2020 வரை 46 விழுக்காட்டிலிருந்த வங்கி நொடிப்பு நிலை சட்டத்தின் (ஐபிசி) மீட்பு விகிதம் மார்ச் 2021 லிருந்து 39.3 விழுக்காடாகக் குறைந்துள்ளது. மொத்த நிலுவைத் தொகையான ரூ .1.3 டிரில்லியனில், சுமார் ரூ .259.4 பில்லியன் அதாவது 19.7 விழுக்காடு மட்டுமே 2020-21 ல் மீட்கப்பட்டுள்ளது (டிரில்லியன் = ஓரு லட்சம் கோடி ;பில்லியன் = நூறு கோடி(

நிதியமைச்சர் நொடிப்பு நிலை சட்ட திருத்த மசோதாவை லோக்சபாவில் தாக்கல் செய்துள்ளார். தேசிய சொத்து மறுசீரமைப்பு கோ லிமிடெட் (NARCL) என்ற பெயரில் வாராக்கடன்களை மீட்பதற்கான வங்கி ‘பேட் பேங்க்’ மும்பையில் 674.6 கோடி மூலதனத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்து அதிகாரங்களையும் மையப்படுத்தி ஒற்றைமய ஆட்சியை ஏற்படுத்தும் பாஜக அரசு கூட்டுறவுத் துறையையும் விட்டுவைக்கவில்லை. மையப்படுத்துதலில் அடுத்தகட்ட நடவடிக்கையாக கூட்டுறவு அமைச்சகம் என்ற பெயரில் புதிய அமைசச்சகத்தை உருவாக்கியுள்ளது. இதற்கு முன்னர் கூட்டுறவுத்துறை விவசாய அமைச்சகத்தின் கீழ்

செயல்பட்டு வந்தது. கூட்டுறவுத்துறை அரசியலமைப்புச் சட்டத்தின் படி மாநிலங்களுக்கான அதிகாரப் பட்டியலில் உள்ள போது கூட்டுறவு கூட்டாட்சி தத்துவத்திற்கு முற்றிலும் புறம்பான முறையில் மாநிலங்களின் இறையாண்மையை பறிக்கும் விதமாக கூட்டுறவு அமைச்சகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா முழுவதும் உள்ள 1 லட்சத்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூட்டுறவு நிறுவனங்களில் 12 லட்சம் கோடி ரூபாய் வைப்புத் தொகை உள்ளது. பாஜக அரசால் இவற்றின் பாதுகாப்பும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. கூட்டாட்சிக் கூட்டுறவுக்கு குழி பறித்த ஜிஎஸ்டியை சுதந்திர இந்தியாவின் சிறந்த கூட்டாட்சி அமைப்புகளில் ஒன்றாகும் என்பதையே நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்.அனைத்திற்கும் தலைகீழாக அர்த்தம் கற்பிக்கும் பாஜக அரசு கூட்டுறவு அமைப்பையும் தலைகீழாக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளது.

எரிபொருள் விலையைக் குறைப்பதற்காக பெட்ரோல் மற்றும் டீசலை ஜிஎஸ்டியின் கீழ் கொண்டு வருமாறு வர்த்தகம், தொழில்துறைகளின் அவை (CTI) அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. மேலும் கடந்த ஆண்டு அதிகரிக்கப்பட்ட கலால் வரியை திரும்பப் பெறுமாறு மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளது. பெட்ரோல், டீசலின் மீது 28 விழுக்காடு சரக்கு சேவை வரி விதிக்குமாறும் பரிந்துரை செய்துள்ளது, இதனால் பெட்ரோல் விலை லிட்டருக்கு 20 ரூபாயும், டீசல் விலை லிட்டருக்கு 15 ரூபாயும் குறையும்.

தலைமை பொருளாதார ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியன், அரசு ஜிஎஸ்டி விகித அமைப்பை நிச்சயம் பகுப்பாய்வு செய்யும் என்கிறார். பெட்ரோல், டீசல் விலைகளில் அதிக உயர்வு இருந்த போதும், எரிபொருள் வரிகளை குறைப்பது அரசுக்கு சாத்தியமில்லை என்றும் கூறியுள்ளார். எரிபொருள், சில்லறை பணவீக்கத்தின் குறியீட்டில் குறைந்த பங்கையே கொண்டிருப்பதால் எரிபொருள் வரிகளின் குறைப்பு குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்த வாய்ப்பில்லை என்று அவர் கூறியுள்ளார். நுகர்வோர் விலைக் குறியீட்டில் (CPI) பெட்ரோல், டீசலின் எடை மூன்று விழுக்காட்டிற்கும் குறைவாகவும், உணவின் எடை 50 விழுக்காடாகவும் உள்ளது. உணவுப் பணவீக்கமே அதிகக் கவலைக்குறியதே தவிர, எரிபொருள் விலை உயர்வு அல்ல என்று அவர் வாதிட்டுள்ளார். எரிபொருளின் விலை உயர்வு நேரடியாக இல்லாவிடினும் சுற்றடியாக மற்ற அனைத்து பொருட்கள், சேவைகளின் விலையையும் அதிகரிக்கும் என்பதை கற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது தலைமை பொருளாதார ஆலோசகரின்

பொருளாதார அறிவு.

புள்ளியல் அரசியலாக்கப்பட்டுள்ளதாகவும் புள்ளியல்துறையின் மீதான பாஜக அரசின் கட்டுப்பாட்டைக் குறைப்பதன் மூலமே துல்லியமான தரவை உரிய நேரத்தில் வெளியிட முடியும் என்று இந்தியாவின் முன்னாள் தலைமைப் புள்ளியியலாளர் ப்ரொனாப் சென் குறிப்பிட்டுள்ளார்.

பணவீக்கம்:

மொத்த விலை பணவீக்கம் ஜூன் மாதத்தில் 12.07 விழுக்காடாக உயர்ந்துள்ளது, பெட்ரோல், டீசல், உற்பத்திப் பொருட்களின் விலையுயர்வினாலே பண வீக்கம் இந்தளவு அதிகரித்துள்ளது. எரிபொருள், ஆற்றலின் விலைவாசி 32.83 விழுக்காடு உயர்ந்துள்ளது. ஜூன் மாதத்தில் நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறை பணவீக்கத்தின் அளவு 6.3 விழுக்காடு அதிகரித்துள்ளது, உணவுப் பொருட்களின் விலைவாசி 5.01 விழுக்காடு அதிகரித்துள்ளது. காய்கறிகளின் விலைவாசி 0.70 விழுக்காடு குறைந்துள்ளது. பழங்களின் விலைவாசி 11.82 விழுக்காடு உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளின் விலைவாசி 10.01 விழுக்காடு அதிகரித்துள்ளது. முட்டையின் விலை. 19.35 விழுக்காடு உயர்ந்துள்ளது. எண்ணெய், கொழுப்பு ஆகியவற்றின் விலைவாசி 34.78 விழுக்காடு அதிகரித்துள்ளது. மீன்,இறைச்சியின் விலைவாசி 4.83 விழுக்காடு உயர்ந்துள்ளது.

மே மாதத்தில் தொழில்துறை வளர்ச்சி:

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி மே மாதத்தில் உற்பத்தி 29.3 விழுக்காடு உயர்ந்துள்ளது. முதன்மைத் துறைகளில் சுரங்கத் துறை, செய்பொருளாக்கத் துறை, மின்சாரத் துறை ஆகியவற்றில் உற்பத்தி முறையே 23.3, 34.5, 7.5 விழுக்காடு உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு மே மாதத்தில் பொதுமுடக்கத்தால் பெரும்பாலான உற்பத்திச் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டதாலே இந்த மாதத்தில் உற்பத்தி வளர்ச்சி இந்தளவிற்கு அதிகமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. முதன்மை பொருட்கள், மூலதனப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், கட்டுமானப் பொருட்கள், உற்பத்தி அளவுகள் முறையே 15.8, 85.3, 55.2, 46.8 விழுக்காடு உயர்ந்துள்ளன. உடனடி நுகர்வுப் பொருட்கள் நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி அளவுகள் முறையே 0.8, 98.2விழுக்காடு உயர்ந்துள்ளன.

ஜூனில் தொழில்துறை வளர்ச்சி:

இந்தியாவின் தொழில்துறை, உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட எட்டு முக்கிய தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக்குறியீடு ஜூனில் 8.9 விழுக்காடு அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு ஜூன் மாத உற்பத்தி அளவோடு ஒப்பிடும் போது நிலக்கரி உற்பத்தி 7.4 விழுக்காடு அதிகரித்துள்ளது. கச்சா எண்ணெய் உற்பத்தி 1.8 விழுக்காடு குறைந்துள்ளது, பெட்ரோலிய சுத்திகரிப்பு பொருட்களின் உற்பத்தி 2.4 விழுக்காடு அதிகரித்துள்ளது. உர உற்பத்தி 2 விழுக்காடு அதிகரித்துள்ளது. இயற்கை எரிவாயு உற்பத்தி 20.6 விழுக்காடும், எஃகு உற்பத்தி 25 விழுக்காடும், சிமெண்ட் உற்பத்தி 4.3 விழுக்காடும், மின்சார உற்பத்தி 7.2 விழுக்காடும் அதிகரித்துள்ளது.

1991 ஜூலை 23ல் இந்தியாவில் தாராளமயம்-தனியார்மயம்-உலகமயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார சீர்திருத்தம் மன்மோகன் சிங்கால் ஏற்படுத்தப்பட்டு 30 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. எந்த அடிப்படையில் இந்தியா பொருளாதார சீர்திருத்தத்தால் சமூக மேம்பாடு அடைந்துள்ளது என்பது பெரும் கேள்விக்குறியாக நீடிக்கிறது? .பொருளாதார சீர்திருத்தம் மன் மோகன் சிங்கிற்கு பெருமிதம் அளிக்கலாம். சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற சமூகத் துறைகளில் இந்தியா பின்தங்கியுள்ளதாக அவரே ஒத்துக்கொள்கிறார். பொருளாதார சீர்திருத்தத்தின் பயன்கள் ஏழை மக்களை சென்றடையவில்லை என்பதை ஆசியா, இந்தியாவின் மிகப்பெரும் செல்வந்தர் அனில் அம்பானியே ஒத்துக் கொள்கிறார்.

உலகமயமாக்கம் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை மூன்று மடங்காக உயர்த்தியது, ஆனால் இவ்வளர்ச்சியில் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் பொருளாதார சமத்துவமின்மையை சந்தை சக்திகளால் தீர்க்க முடியாது என்றும் நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் எரிக் மாஸ்கின் கூறியுள்ளார்.


திட்டமிட்ட பொருளாதார அமைப்பாக இருந்த இந்தியாவின் திட்டக் கமிசனை கலைத்தது பாஜக அரசு. சமூகத் துறைகளை வளர்ப்பதற்குத் தானே திட்டமிடல் அவசியம். நிதி ஒதுக்கீட்டை வெட்டுவதற்கு எதற்கு திட்ட கமிசன் அதற்கு நிட்டி ஆயோக் போதும் என்பதே அவர்களது தர்க்கம். நிதி ஆயோக் பொதுத் துறைகளை ஒழித்துக் கட்டுவதைத் தான் கண்ணும் கருத்துமாக செயல்படுத்தி வருகிறது. கல்வி, சுகாதாரம் அனைத்து துறைகளையும் முற்றிலுமாக தனியார்மயப்படுத்துவதற்கான பரிந்துரைகளையே நவீன தாராளமய ஊது குழலான நிதி ஆயோக்

இதுவரை பரிந்துரை செய்துள்ளது. . புதிய பொருளாதாரக் கொள்கையின் மூலம் அனைத்து துறைகளும் தனியார் துறைக்கும், நேரடி அந்நிய முதலீடுகளுக்கும் திறந்துவிடப்பட்டது. அந்நிய முதலீடுகள் பெரும்பாலும் ஊகமுதலீடுகளாகவும், சேவைத்துறைகளிலும் செய்யப்படுவதால் இந்தியாவின் உற்பத்தித் துறையின் மேம்பாட்டிற்கு அதுவே முட்டுக்கட்டையாகவும் செயல்படுகிறது.

பொருளாதார சீர்திருத்தத்தின் மூலம் ஜிடிபியை அதிகரிப்பதை மட்டுமே இலக்காகக் கொண்ட ஓட்டப்பாதையையே இந்தியா தேர்ந்தெடுத்தது. அந்த ஜிடிபியில் எவ்வளவு பங்கு தொழிலாளிகளிடமும், விவசாயிகளையும் அடைந்தது என்பது பற்றி பெயரளவிற்குக் கூட எந்த அக்கறையும் காட்டப்படவில்லை. பொருளாதார சீர்திருத்தத்தால் மூன்று லட்சத்திற்கும் மேலான விவசாயிகள் தற்கொலை செய்துள்ளனர். குறைந்த பட்ச ஆதார விலையும், அரசின் விலை நிர்ணய அமைப்பும் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் பாதுகாப்பு அளித்தது.பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் அந்த குறைந்த பட்ச பாதுகாப்பும் நீக்கப்பட்டுள்ளது. விவசாயத் துறை இன்றும் புறக்கணிக்கப்பட்ட துறையாகவே உள்ளது. வேளாண் சீர்திருத்த சட்டங்களை திரும்பப் பெருமாறு இரவு பகலாக கடுங்குளிரிலும், மழையிலும், வெயிலிலும் 11 மாதங்களாகப் போராடும் விவசாயிகளின் வேதனை சொல்லி மாளாது.பெயரளவிற்குக் கூட அவர்களின் கோரிக்கைகளை செவி மடுக்க அக்கறை காட்டாத கொடுங்கோன்மையையே இந்த பொருளாதார சீர்திருத்தம் ஏற்படுத்தியுள்ளது. சமூகத் துறைகளுக்கான அரசு செலவினங்களை தொடர்ந்து வெட்டி எங்கும் எதிலும் தனியார்மயத்தை வளர்க்கும் போக்கு நீடித்த வறுமையையும், பெரும் சமூக பொருளாதார பின்னடைவையும் ஏற்படுத்தியுள்ளது.பொருளாதார சீர்திருத்தம் அனைவருக்குமான இலவச ஆரம்பக் கல்வியை தடுத்து நிறுத்தி சமூக வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போட்டுள்ளது.சாதிய ஏற்றத்தாழ்வுகளை குறைக்காமல் அதிகரித்து சாதியக் கட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்தும் விதமாகவே பொருளாதார சிர்திருத்தங்கள் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றன. பொருளாதார சீர்திருத்தத்தால் வறுமை குறையவில்லை வருவாய், சொத்துக்களில் பொருளாதர சமத்துவமின்மையே வரலாறு காணாத அளவிற்கு அதிகரித்துள்ளது.அடிப்படைக் கல்வியையும், சுகாதாரத்தையும் கொடுக்க வக்கில்லாத நிலைக்கு இந்திய அரசைத் தள்ளிய இந்த பொருளாதார மாற்றம் உண்மையில் பொருளாதார சீர்திருத்தம் அல்ல பொருளாதார சீரழிப்பே.

# வெள்ளை அறிக்கை கூறுவது என்ன?

சமந்தா



அரசின் நிர்வாக நடவடிக்கைகள், அரசு எதிர் கொள்ளும் பிரச்சனைகள் குறித்த தகவல்களை மக்களுக்கும், நிர்வாகிகளுக்கும் வெளிப்படையாக அறியத்தரும் விதத்தில் அரசுத் தரப்பில் இருந்து வெளியிடப்படும் அதிகாரப்பூர்வ அறிக்கை தான் வெள்ளை அறிக்கை. இது குறித்து திறந்த விவாதங்களை ஏற்படுவதற்கும் சரியான தீர்வுகளுக்கான ஆலோசனைகளை பெறுவதற்கும் வெள்ளை அறிக்கை பயன்படும். தற்போது தமிழ் நாட்டின் நிதியமைச்சரால் வெளியிடப்பட்டுள்ள வெள்ளை அறிக்கையில் பொருளாதாரம், நிதி நிலை, நிர்வாக அடிப்படையில் 2006லிருந்து 2021 மார்ச் வரை தமிழ்நாடு கடந்த வந்த பாதை குறித்த விவரங்களை சுருக்கமாக அறியத் தருகிறது. அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை கொண்டுவரவேண்டும் என்ற அடிப்படையில் கொண்டுவரப்பட்ட இந்த முயற்சியை வரவேற்போம்.

தமிழ் நாட்டு மக்களுக்கு தி.மு.க அளித்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் உடனடியாக நிறைவேற்றும் நிலையில் தமிழ் நாட்டின் நிதி நிலை இல்லை என்பதைத் தெரிவிப்பதற்கான ஒரு வழிமுறையாகவும் இந்த வெள்ளை அறிக்கை உள்ளது என்ற போதும் கூட இது பாராட்டுதலுக்குறிய முன்முயற்சி. ஏனென்றால் மத்திய அரசின் வலைத் தளங்களில் இந்திய பொருளாதாரம் குறித்த அனைத்துத் தரவுகளையும் பெற முடியும் (அவை எந்த அளவுக்கு நம்பகத்தன்மை வாய்ந்தவை என்பது கேள்விக்குறியே என்ற போதும் கூட).தமிழ்நாட்டின் பொருளாதார நடப்பு நிலை குறித்தத் தரவுகளும், கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டின் பொருளாதார நிலை தமிழ்நாட்டில் எவ்வாறு உள்ளது என்று வரலாற்று அடிப்படையிலான தரவுகளும் பொதுமக்களுக்கு கிடைக்கப்பெறாத நிலையே இருந்துவருகிறது, மத்திய அரசின் ஆவணங்களிலிருந்து அவற்றை வருவிக்க முடிந்தாலும் அவைத் தமிழில் கிடைப்பதில்லை என்பது மிகப்பெரும் குறைபாடாக நீடிக்கிறது. இதனால் தமிழ் நாட்டின் நிதி நிர்வாகம் எவ்வாறு செயல்படுகிறது என்பது பொது மக்களுக்கு அறியக் கிடைக்காத மர்மமாகவே இருந்துள்ளது. இக்குறைப்பாட்டைப் போக்குவதற்கான முன்முயற்சியாகவும் இந்த வெள்ளை அறிக்கையைக் கருத முடியும்.

வெள்ளை அறிக்கை தமிழ் நாட்டின் தற்போதைய நிதி நிலைமை, அரசு எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடி, அரசின் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள், மற்றும் எடுக்கப்படவேண்டிய

நடவடிக்கைகள் ஆகியவற்றை விவரிக்கின்றது.

பதிமூன்றாவது சட்டப்பேரவை(2006-2011), பதிநான்காவது சட்டப்பேரவை(2011-2016), பதினைந்தாவது (2016-2020) தமிழ் நாடு சட்ட மன்றப்பேரவை உள்ளடக்கிய பதினான்கு ஆண்டு கால பொருளாதார சூழ்நிலையும், மாநில அளவில், இந்திய அளவில், சர்வதேச அளவில் அதில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணிகளும் விவாதிக்கப்பட்டுள்ளது.

2006ல் திமுக ஆட்சி செய்தபோது உச்சத்திலிருந்த தமிழ்நாட்டின் பொருளாதார நிலை கடந்த 10 ஆண்டு அ.தி.மு.க ஆட்சியில் மந்த நிலையை அடைந்ததாகவும் 2013-14லிருந்து தமிழ் நாட்டின் நிதி நிலைமை தொடர்ந்து மோசமடைந்து வந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே நெருக்கடியிலிருந்த தமிழ் நாட்டின் பொருளாதார நிலை கோவிட்-19 பெருந்தொற்றின் தாக்கத்தினால் 2020-21ல் மேலும் வீழ்ச்சியை சந்தித்தது. வருவாய் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை அதிகரித்து தமிழ் நாட்டின் கடன் சுமை மிகவும் அதிகரித்து நெருக்கடியான நிதி நிலைமை ஏற்பட்டுள்ளது.

2006 முதல் 2013 வரையிலான 7 ஆண்டுகளில் 5 ஆண்டுகளில் உபரி வருவாயை பெற்ற தமிழ்நாட்டில், அதற்குப் பின் 2013லிருந்து வருவாய் பற்றாக்குறை தொடர்ந்து இருந்து வருகிறது. 2020-21ல் வருவாய் பற்றாக்குறை 61,320 கோடி ரூபாயாகவும், தமிழ் நாட்டின் மொத்த பொருளாக்க மதிப்பில் 3.16 விழுக்காடாகவும் உள்ளது. 2006-07ல் 0.81 விழுக்காடு வருவாய் உபரியைப் பெற்ற தமிழ்நாடு, 2020-21ல் 3.16 விழுக்காடு வருவாய் பற்றாக்குறையைக் கொண்டுள்ளது. இந்தியாவின் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் சராசரி வருவாய் பற்றாக்குறையை விட இது மிகவும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. 2017-18 மற்றும் 2018-19 ஆகிய 2 ஆண்டுகளில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சராசரி வருவாய் பற்றாக்குறை மாநில மொத்த பொருளாக்க மதிப்பில் 0.1 விழுக்காடாக இருந்தபோது தமிழ் நாட்டின் வருவாய் பற்றாக்குறை முறையே 1.5, 1.4 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

2006-07ல் 3,956 கோடி ரூபாயாகவும், மொத்த பொருளாக்க மதிப்பில் 1.21 விழுக்காடாக இருந்த நிதிப் பற்றாக்குறை 2020-21ல் 92,305 கோடி ரூபாயாக, மொத்த பொருளாக்க மதிப்பில் 4.43

விழுக்காடாக அதிகரித்துள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டிற்குப் பதிலாக பெறப்பட்ட 6,241கோடி ரூபாய் கடன் இதில் அடங்காது. 2011-2016ல் நிதிப்பற்றாக்குறையில் 14.94 விழுக்காடாக இருந்த நிதிப்பற்றாக்குறை 2020-21ல் 52.48 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

2016-17ல் உதய் திட்டத்தின் கீழ் தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழகத்தின் கடன், அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் 3 விழுக்காட்டைக் காட்டிலும் நிதிப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.உண்மையான செலவுகள் கட்டுப்படுத்தப்படவில்லை நிதி அளிக்கும் பொறுப்புகள் ஒத்திவைக்கப்பட்டு பற்றாக்குறைகள் மறைக்கப்பட்டன.

நிதிப் பற்றாக்குறையில் 50 விழுக்காட்டிற்கும் மேல் வருவாய் பற்றாக்குறையை சரிசெய்யவே பயன்படுத்தப்படுகிறதே தவிர மூலதனச் செலவுகளுக்காகவோ வளர்ச்சிக்காகவோ பயன்படுத்தப்படவில்லை. 2013-14ல் நிதிப்பற்றாக்குறையில் 8.69 விழுக்காடாக இருந்த வருவாய் பற்றாக்குறை 2020-21ல் 66.43 விழுக்காடாக அதிகரித்துள்ளது.கோவிட் தாக்கம் இதற்கு ஒரு முக்கியக்காரணமாக இருந்த போதும் அதற்கு முன்னர் 2018-19லேயே 49.56 விழுக்காடாக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நவீன தாராளமய சீர்திருத்தத்தின் பகுதியாக வாஜ்பேய் ஆட்சியின் போது நிதி பொருப்புடைமை, மேலாண்மை சட்டம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சட்டம் அரசின் நிதிப்பற்றாக்குறை 3 விழுக்காட்டுக்கு மேல் அதிகரிக்கக்கூடாது என வரம்பிடுவதன் மூலம் அரசின் செலவினங்களை கட்டுப்படுத்துகிறது. சமூகத்திட்டங்கள், கல்வி, சுகாதாரம், பொது விநியோகம் போன்ற பொதுசேவைகள், பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான அரசு செலவினங்களை கணிசமாகக் குறைத்து கட்டற்ற தனியார்மயத்தை ஊக்குவிப்பதற்காகவே இந்தச் சட்டம் செயல்படுத்தப்பட்டது. அரசின் நிதிப்பற்றாக்குறை 3 விழுக்காட்டிற்கு மேல் அதிகமானால் சர்வதேச கடன் தரமதிப்பீட்டு நிறுவனங்கள் அதன் தரமதிப்பீட்டைக் குறைத்துவிடும் ஆதலால் அந்த அரசு மலிவுக்கடன் பெற இயலாத நிலைக்கு தள்ளப்படுவதால் அதிக வட்டிக்கே கடன் பெற இயலும் என அச்சுறுத்தப்படுகிறது. இந்தியாவில் மட்டும் அல்ல நவீன தாராளமயம் ஆட்சி செய்யும் எல்லா நாடுகளிலும் இத்தகைய சட்டம் நடைமுறையில் உள்ளது. இந்திய ஒன்றியத்தின் நிர்பந்தத்தால் தமிழ் நாட்டிலும் 2003ஆம் ஆண்டில் நிதிப்

பற்றாக்குறையை 3 விழுக்காட்டு வரம்பிற்குள் கட்டுப்படுத்தும் தமிழ்நாடு நிதிநிலை பொறுப்புடைமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

2006-7ல் 60,170 கோடி ரூபாயாகவும், மொத்தப் பொருளாக்க மதிப்பில் 18.37 விழுக்காடாகவும் இருந்த தமிழ்நாட்டின் நிலுவைக் கடன் 2020-21ல் 570189 கோடி ரூபாயாகவும் மொத்தப் பொருளாக்க மதிப்பில் 24.98 விழுக்காடாகவும் உயர்ந்துள்ளது. 14வது நிதிக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்பின் அளவு 25 விழுக்காடு.

தமிழ் நாட்டின் ஒட்டுமொத்தக் கடன் இருப்பு மாநில மொத்த பொருளாக்க மதிப்பில் 3.47 விழுக்காட்டிற்கும் மேலாக உயர்ந்துள்ளது. இந்தியாவின் உள்ள அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் வெளிச் சந்தையில் தற்போது அதிக அளவில் கடன் வாங்கும் மாநிலமாக தமிழ் நாடு உள்ளது.

2006ல் மொத்த மாநில பொருளாக்க மதிப்பில் 18.37 விழுக்காடாக இருந்த பொதுக்கடன் விகிதம் 2021ல் 26.69 விழுக்காடாக உயர்ந்துள்ளது. 2006-07ல் போக்குவரத்துத் துறையின் நிலுவைக் கடன்களில் 7.04 விழுக்காடாக இருந்த அரசு உத்தரவாதக் கடன்களின் பங்கு 2020-21ல் 39.21 விழுக்காடாக அதிகரித்துள்ளது. 2006-07ல் மின் துறையின் நிலுவைக் கடன்களில் 25.24 விழுக்காடாக இருந்த அரசு உத்தரவாதக் கடன்களின் பங்கு 2020-21ல் 51.92 விழுக்காடாக அதிகரித்துள்ளது. 2006-07ல் மொத்த மாநில பொருளாக்க மதிப்பில் 3960 கோடியாகவும் 1.21 விழுக்காடாகவும் இருந்த அரசு உத்தரவாதங்களின் பங்கு 2020-21ல் 91,818 கோடி ரூபாயாகவும் 4.72 விழுக்காடாகவும் அதிகரித்துள்ளது. அரசின் உத்தரவாதங்களில் 90 விழுக்காடு மின் துறையையும், 5 விழுக்காடு போக்குவரத்துத் துறையையும் சேரும் என்பது குறிப்பிடத்தக்கது.

வருவாய்:

2006-07ல் 40,913 கோடியாக இருந்த தமிழ் நாட்டின் மொத்த வருவாய் 2019-20ல் 1,74,526 கோடி ரூபாயாக அதிகரித்து, 2020-21ல் 1,69012 கோடி ரூபாயாக சரிவடைந்துள்ளது.

2019-20ல் 107462 கோடி ரூபாயாக இருந்த வரிவருவாய் 2020-21ல் 106171 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது. 2019-20ல் 12887 கோடி ரூபாயாக இருந்த வரியல்லாத வருவாய் 2020-21ல் 9040

கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது. 2019-20ல் 26392 கோடி ரூபாயாக இருந்த மத்திய அரசிடமிருந்து பெற்ற வரிவருவாய் பங்கு 2020-21ல் 24906 கோடி ரூபாயாகக் குறைந்துள்ளது.

மத்திய அரசிடமிருந்து பெற்ற வரி வருவாய் பங்கு 2006-07ல் மொத்த வருவாயில் 15.63 விழுக்காடாக இருந்தது 2020-21ல் 5.35 விழுக்காடாக சரிவடைந்துள்ளது. 2006-07ல் மாநிலத்தின் மொத்த வருவாயில் 67.88 விழுக்காடாக இருந்த தமிழ் நாட்டின் சொந்த வரி வருவாய் 2020-21ல் 62.82 விழுக்காடாக சரிவடைந்துள்ளது.2006-07ல் மாநிலத்தின் மொத்தப் பொருளாக்க மதிப்பில் 8.37 விழுக்காடாக இருந்த வரியல்லாத வருவாயின் பங்கு 2020-21ல் 5.35 விழுக்காடாக சரிவடைந்துள்ளது. 2006-07ல் மொத்த மாநில பொருளாக்க மதிப்பில் 12.49 விழுக்காடாக இருந்த மாநிலத்தின் மொத்த வருவாய் 2020-21ல் 8.70 விழுக்காடாக சரிவடைந்துள்ளது.

2006-07 முதல் 2010-11 வரையிலான காலகட்டத்தில் மொத்த வருவாய் வரவுகளின் கூட்டு வருடாந்தர வளர்ச்சி விகிதம் 11.40 விழுக்காடாக இருந்தது 2016-17 முதல் 2020-21வரையிலான காலகட்டத்தில் 3.80 விழுக்காடாக சரிவடைந்துள்ளது.

மாநிலத்தின் மொத்த பொருளாக்க மதிப்பில் 5.83 விழுக்காடாக இருந்த வணிக வரிகளின் பங்கு 2020-21ல் 4.19 விழுக்காடாக சரிவடைந்துள்ளது. 2006-07ல் 1.22 விழுக்காடாக இருந்த மாநில ஆயத் தீர்வையின்(excise tax) பங்கு 2020-21ல் 0.40 விழுக்காடாக சரிவடைந்துள்ளது.முத்திரைத் தாள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணங்கள் 2006-07ல் 0.94 விழுக்காடாக இருந்தது 2020-21ல் 0.60 விழுக்காடாகக் குறைந்துள்ளது.2006-07ல் 0.38 விழுக்காடாக இருந்த வாகனங்கள் மீதான வரி பங்கீடு 2020-21ல் 0.23 விழுக்காடாகக் குறைந்துள்ளது. அண்டை மாநிலங்களை விட தமிழ் நாட்டில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்த போதிலும் கடந்த பதினைந்து வருடங்களாக வரி வருவாய் திருத்தப்படாததால் மோட்டார் வாகன வரியின் மொத்த வருவாய் அதிகரிக்கவில்லை. சரக்கு சேவை வரி நடைமுறைபடுத்தப்பட்டதே தமிழ் நாட்டின் வருவாய் குறைவதற்கான முக்கியக் காரணியாக உள்ளது. வரி வருவாய் இழப்பீட்டுத் தொகையையும் முறையாக மத்திய அரசால் அளிக்கவில்லை என்றும் அறிக்கை தெரிவிக்கிறது.

வரிவருவாயின் வளர்ச்சிக்கும், மொத்த உள் நாட்டு பொருளாக்க மதிப்பின் வளர்ச்சிக்கும்

இடைப்பட்ட விகிதம் வரி மிதப்பு (tax buoyancy) என அழைக்கப்படுகிறது. பொதுவாக இதன் மதிப்பு 1க்கு மேல் இருந்தால் பொருளாதாரம் திறன்மிகு நிலையில் இருப்பதாகக் கருதப்படுகிறது. 2006-07ல் 0.93 ஆக இருந்த வரி மிதப்பு 2020-2021ல் 0.49ஆக சரிவடைந்துள்ளது.வரி வருவாயின் வீழ்ச்சிக்கு தளர்வான வரி நிர்வாகம் ஒரு காரணமாகக் குறிப்பிட்டு வரிவருவாயை மேம்படுத்துவதற்கான ஆய்வையும் கோரியுள்ளது இவ்வறிக்கை.

வரியல்லாத வருவாயின் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 2020-21ல் 29.85 விழுக்காடு சரிவடைந்துள்ளது. தமிழ்நாடு அரசுக்கான வரியல்லாத வருவாயின் முக்கிய இனங்களில் சுரங்கங்கள் மற்றும் கனிமங்களிலிருந்து கிடைக்கப்பெறும் உரிமைத் தொகை, வட்டி வரவினங்கள் மற்றும் அரசால் விதிக்கப்படும் பல்வேறு கட்டணங்களும் அடங்கும்.இவற்றின் மூலம் அதிக வருவாயை திரட்ட பல வாய்ப்புகள் உள்ளது. இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் வரியல்லாத வருவாயை அதிகரிக்க இயலும். தமிழ்நாட்டின் இயற்கை வளங்களை அரசியல்வாதிகள் லஞ்சத்திற்காக அடிமட்ட விலைக்கு விற்க அனுமதிக்கும் அவல நிலைக்கு முடிவு கட்ட வேண்டியது அவசியம்.

மத்திய அரசிடமிருந்து தமிழ் நாடு பெறும் வரி வருவாயின் பங்கு 2006-07ல் மாநிலத்தின் மொத்த பொருளாக்க மதிப்பில் 1.95 விழுக்காடாக இருந்தது 2020-21ல் 1.28 விழுக்காடாக சரிவடைந்துள்ளது. மத்திய வரிகளில் தமிழ்நாடு அரசிற்கான பங்கு வரிப்பகிர்வுத் தொகுப்பின் கிடைமட்ட பங்கு மற்றும் வரிப் பகிர்வுத் தொகுப்பின் அளவு ஆகிய இரண்டு காரணிகளால் தீர்மானிக்கப்படுகிறது.

மத்திய அரசிடமிருந்து தமிழ் நாட்டிற்கான வரிவருவாயின் பங்கின் கூட்டு வருடாந்திர வளர்ச்சி வீதம் 2006-07 முதல் 2010-11 வரை 11.29 விழுக்காடாக இருந்தது 2016-17 முதல் 2020-21 வரையிலான காலகட்டத்தில் 0.30 விழுக்காடாக சரிவடைந்துள்ளது.

பத்தாவது நிதிக்குழுவால் 6.637 விழுக்காடாக நிர்ணயிக்கப்பட்ட தமிழ் நாட்டிற்கான மத்திய அரசின் வருவாய் பங்கை பதினான்காம் நிதிக்குழு 4.023 விழுக்காடாகக் குறைத்தது. தற்போது 15வது நிதிக்குழுவின் முதன்மை அறிக்கையில் இது 4.079 விழுக்காடாக

நிர்ணயிக்கப்பட்டுள்ளது.15வது நிதிக்குழுவின் பரிந்துரைகள் மக்கள்தொகையை கட்டுப்படுத்துவதில் சிறப்பாக செயல்பட்ட மாநிலங்களை பாதித்துள்ளது. நிலப்பரப்பு அளவுகோல்களுக்கான மதிப்பீட்டை அதிகரித்ததும், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள காடுகளின் பரப்பளவு அளவுகோலும், தமிழ் நாட்டை பாதித்துள்ளது.

15வது நிதிக்குழுவால் மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு பெறும் வரி வருவாய் பங்கு 4.07 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. 2011 மக்கள் தொகைக் கணக்கீட்டின் படி இந்தியாவின் மக்கள் தொகையில் 6.124 விழுக்காடாக உள்ள தமிழ் நாட்டிற்கு வரி வருவாயில் 4.079 விழுக்காடே அளிக்கப்படுவதால் தமிழ் நாட்டின் வரி வருவாய் 33.4 விழுக்காடு குறைக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்துப் போராடுவதன் மூலவே தீர்வை நோக்கி முன்னேற முடியும். அதிகமாக வரி பங்கீடு குறைக்கப்பட்ட மாநிலங்களின் பட்டியலில் ஹரியானா, மஹாராஷ்டிராவைத் தொடர்ந்து தமிழ் நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது.

இதே போன்று, தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலங்களின் பங்களிப்பு அவற்றுடன் பகிர்ந்துகொள்ளக்கூடிய மத்திய வரித் தொகுப்பின் பங்கோடு ஒப்பிடுகையில், தமிழ்நாடு மற்றும் இதர உயர் வருவாய் கொண்ட மாநிலங்கள் குறைந்த விகிதத்திலான பங்கையே பெறுகின்றன.

14வது நிதிக்குழு மத்திய வரிகளின் ஒட்டுமொத்த பகிர்வுத் தொகுப்பிலிருந்து மாநிலங்களுக்கான பங்கீட்டை 32 விழுக்காட்டிலிருந்து 42 விழுக்காடாக உயர்த்தப் பரிந்துரைத்தது. ஆனால் இது உரிய முறையில் நடைமுறைப்படுத்தாதால் மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு அதிகரிக்கவில்லை.ஒன்றிய திட்டக் குழு கலைக்கப்பட்டதால் ஒன்றிய அரசால் மாநிலங்களுக்கு திட்டமானியமாக வழங்கப்பட்டு வந்த பொதுவான மத்திய நிதியுதவி நிறுத்தப்பட்டது. ஒன்றிய நிதியுதவி பெறும் திட்டங்களில் மாநில அரசுகளின் பங்களிப்பும் கணிசமான அளவு உயர்த்தப்பட்டது.2017-18 ஒன்றிய நிதிநிலைத் திட்டத்தில் பெரு நிறுவனங்களின் மீதான வரி குறைக்கப்பட்டதன் மூலம் ஒட்டுமொத்த வரிவருவாயில் நேர்முக வரிகளின் பங்கைக் குறைத்ததும் இதற்கு முக்கியக் காரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்வேறு வரி இனங்களின் மீது மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளாத மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்கள் விதிக்கும் நடைமுறையை ஒன்றிய அரசு அதிகமாகக் கையாண்டு வருகிறது.2011-12ல் 10.4 விழுக்காடாக இருந்த மேல் வரி மற்றும் கூடுதல் கட்டணங்களின் பங்கு 2019-20ல் 20.4 விழுக்காடாக அதிகரித்துள்ளது. 2013-14 ஆம் ஆண்டில் ஒன்றிய நிதிநிலைத் திட்டத்தில் தனி நபர் வருமான வரி மீதான கூடுதல் கட்டணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு தொடர்ந்து வந்த காலங்களில் அதை நீட்டித்ததும் நேரடி வரி விதிப்பில் மாநில அரசின் பங்கை அதிகளவிலான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெட்ரோலியப் பொருட்களின் மீதான ஒன்றிய அரசின் வரி விதிப்பு கணிசமான அளவில் உயர்ந்தது மட்டுமல்லாமல் மாநில அரசுகளுடன் ஒன்றிய அரசு பகிர்ந்து கொள்ளும் ஆயத் தீர்வை (excise tax) குறைக்கப்பட்டதும், மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்கள் கணிசமான அளவில் அதிகரிக்கப்பட்டதும் வருவாய் பங்கீட்டில் மாநில அரசுகளுக்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளன.2014ல் லிட்டர் ஒன்றிற்கு 10.39 ரூபாயாக விதிக்கப்பட்ட வரிகள் 2021ல் 32.90 ரூபாயாக 216 விழுக்காடு அதிகரித்துள்ளது.

பெட்ரோல் மற்றும் டீசல் மீது ஒன்றிய அரசு விதிக்கும் மேல்வரி மற்றும் கூடுதல் கட்டணங்கள் 2020 ஆம் ஆண்டு மே மாதத்தில் லிட்டர் ஒன்றுக்கு, முறையே 18 ரூபாய் மற்றும் 21 ரூபாய் உயர்த்தப்பட்டது. அதே சமயம் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான ஆயத்தீர்வை லிட்டர் ஒன்றுக்கு 6.50 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது.ஒட்டுமொத்தமாக ஒன்றிய அரசால் விதிக்கப்படும் வரிகள் மற்றும் கட்டணங்கள் பெட்ரோல் மீது லிட்டர் ஒன்றுக்கு 11.50 ரூபாயும் டீசல் மீது 14.50 ரூபாயும் அதிகரித்துள்ளது. 2021-22 ஒன்றிய நிதிநிலைத் திட்டத்தில் வேளாண்மை உள்கட்டமைப்பு மேம்பாட்டு மேல்வரியாக பெட்ரோல் மீது லிட்டர் ஒன்றுக்கு 2.50 ரூபாயும், டீசல் மீது லிட்டர் ஒன்றுக்கு 4 ரூபாயும் விதிக்கப்பட்டுள்ளது. இதுவும் மாநிலங்களுடன் பகிரப்படுவதில்லை. 2021-22ல் பெட்ரோல், டீசல் மீது விதிக்கப்பட்ட வரிகள் மற்றும் கட்டணங்கள் வாயிலாக ஒன்றிய அரசு 3,89,622 கோடி ரூபாயை திரட்டியுள்ளது.இது 2019-20ல் பெற்ற வருவாயான 2,39,452 கோடி ரூபாயை விட 63 விழுக்காடு அதிகம்.அதே சமயம் ஒன்றிய அரசிடமிருந்து 2019-20 ஆம் ஆண்டில் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான ஆயத் தீர்வையிலிருந்து வரிப் பகிர்வாக 1,613.13 கோடி ரூபாயை பெற்ற தமிழ்நாடு அரசு 2020-21ல் 837.75 கோடி மட்டுமே பெற்றுள்ளது.

தமிழ்நாட்டின் மொத்த வரி வருவாயில் மானியங்களின் விகிதம் 2006-07 ஆம் ஆண்டில் 8.13 விழுக்காட்டிலிருந்து 2020-21 ஆம் ஆண்டில் 17.10 விழுக்காடாக அதிகரித்துள்ளது. இவ்வாறு மத்திய அரசின் செயல்பாடுகள் கூட்டாட்சி தத்துவத்திற்கும், மாநிலங்களின் நிதி சுதந்திரத்திற்கும் முற்றிலும் புறம்பான முறையில் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்தவில்லை என 2017-18 முதல் 2020 -21 வரையிலான காலகட்டத்தில் மத்திய அரசு நிதியை விடுவிக்காததால் தமிழ் நாட்டிற்கு 2,577.29 கோடி ரூபாய் மானிய இழப்பு ஏற்பட்டுள்ளது.சரக்கு மற்றும் சேவை வரிகளின் இழப்பீட்டுத் தொகைக்காக ஒன்றிய அரசு வழங்கியத் தொகை மானியமாகவே கணக்கிடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சரக்கு, சேவை வரி அமைப்பின் மூலம் மாநிலங்களின் வரி வருவாய் 14 விழுக்காடு உயர்வதற்கான உத்தரவாதம் அளிக்கப்படும் என்றும் வருவாய் குறைந்தால் வருவாய் இழப்பீடுகள் மூலம் ஈடுசெய்யப்படும் என்று மத்திய அரசு உறுதியளித்ததை வாக்குறுதியை நம்பி மாநிலங்கள் சரக்கு சேவை வரி அமைப்பில் இணைந்து தங்கள் நிதி இறையாண்மையை முற்றிலுமாக இழந்துள்ளன. ஆனால் மாநிலங்களின் வருவாய் வளர்ச்சியும் அதிகரிக்கவில்லை இழப்பீடும் உரிய முறையில் வழங்கப்படுவதில்லை. இழப்பீட்டுத் தொகை கணக்கிடுவதற்கு ஒற்றை இலக்க வருவாய் வளர்ச்சி கொண்ட 2015-16ஆம் ஆண்டையே அடிப்படையாகக் கொண்டிருப்பதால் இழப்பீடும் குறைவாகவே கணக்கிடப்படுகிறது. மேலும் இழப்பீடு வழங்கும் பொறுப்பை தட்டிக்கழித்த மத்திய அரசு அதற்கு பதிலாக மாநிலங்களின் மீது கடனை சுமத்தியுள்ளது. இதனால் தமிழ்நாடு 6,241கோடி ரூபாய் கடன் பெற்றுள்ளது. 2021-22ல் மத்திய அரசு தமிழ்நாட்டிற்குக் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை 20033 கோடி ரூபாய் உள்ளது. 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் நாளுடன் சரக்கு மற்றும் சேவை வரிக்கு இழப்பீடு வழங்கும் முறை முடிவுக்கு வர உள்ளது. மாநிலங்களின் வரி வருவாய் 14 விழுக்காடு அதிகரிக்காத நிலையில் மத்திய அரசு இழப்பீட்டை நீட்டிக்காமல் விட்டு விடுமானால் மாநிலங்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து சரக்கு மற்றும் சேவை வரி அமைப்பை விட்டு வெளியேறுவதன் மூலமே நிதி இறையாண்மையை மீட்கமுடியும்.

2006-07ல் 15.63 விழுக்காடாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த வருவாய் வரியினங்களில் மத்திய வரிகளின் பங்கு 2020-21ல் 14.74 விழுக்காடாகக் குறைந்துள்ளது.

செலவு:

2006-07 முதல் 2010-11வரையிலான காலகட்டத்தில் 13.76 விழுக்காடாக இருந்த தமிழ் நாட்டு அரசின் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 2016-17 முதல் 2020-21 வரையிலான காலகட்டத்தில் 8.50 விழுக்காடாக சரிவடைந்துள்ளது. தமிழ் நாட்டின் கல்வி, மருத்துவம், பொது சுகாதாரம், குடி நீர் வழங்கல், வீட்டுவசதி, வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த நடவடிக்கைகள் போன்ற வளர்ச்சிக்கான செலவினங்களின் போக்கு தொடர்ந்து குறைந்துகொண்டு வருகிறது. 2011-12 ஆம் ஆண்டில் அனைத்து மாநிலங்களின் வளர்ச்சிக்கான செலவினங்களின் சராசரி 63.1 விழுக்காடாக இருக்கும் போது, தமிழ் நாட்டின் செலவினம் 62.9 விழுக்காடாக இருந்தது. இது 2018-19 ஆம் ஆண்டில் 57.5 விழுக்காடாக குறைந்தது. இது அனைத்து மாநிலங்களின் செலவின சராசரியான 62.9 விழுக்காட்டை விட மிகக் குறைவாகும்.

மின்சார மானியம் மாநில மொத்த பொருளாக்க மதிப்பில் 1.10 விழுக்காடு என்ற அளவில் அதிகமாக உள்ளது.உணவு மானியம் மாநில மொத்த பொருளாக்க மதிப்பில் 0.49 விழுக்காடாக உள்ளது. ஒட்டுமொத்தமாக, வருவாய் வரவினங்களின் வளர்ச்சியான 9.92 விழுக்காட்டை விட வருவாய் செலவின வளர்ச்சி 12.71 விழுக்காடாக அதிகரித்து வருகிறது. இதனால் தமிழ் நாட்டின் வருவாய் பற்றாக்குறை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது.

சம்பளங்கள், ஊதியங்கள், ஓய்வூதியம், ஓய்வூதிய பயன்கள் ஆகியவை செலவினத்தின் மொத்த வளர்ச்சி விகிதத்தை விட குறைவான விகிதத்தில் அதிகரித்து வருகிறது. அரசுத் துறைகளில் பெருமளவிலான பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருப்பதும் சம்பளச் செலவினத்தில் காணப்படும் குறைந்த விகிதத்திலான உயர்விற்கு ஒரு முக்கியக் காரணமாகும். பல்வேறு துறைகளில் திறன்மிகு நபர்கள் இல்லாததால் திறன் மிக்க சேவையை பெறுவதில் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் எனவும் அறிக்கை குறிப்பிடுகிறது.

மூலதன செலவினம்:

2006-07 முதல் 2010-11 வரையிலான காலகட்டத்தில் மூலதன செலவினம் மாநிலத்தின் மொத்த உள் நாட்டு உற்பத்தியில் சராசரியாக 1.97 விழுக்காடாக இருந்தது, 2011-12 முதல் 2020-21 வரையிலான காலகட்டத்தில் 1.78 விழுக்காடாக்க் சரிவடைந்து 2016-17 முதல் 2020-21 வரையிலான காலகட்டத்தில் 1.50 விழுக்காடாக குறைந்துள்ளது.

நிதிப்பற்றாக்குறையை சமாளிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் முதலாவதாக மூலதன செலவினங்கள் கட்டுப்படுத்தப்பட்டன. இது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

2006-07 முதல் 2010-11 வரை மூலதனங்களின் கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் 15.88 விழுக்காடாக இருந்தது 2011-12 முதல் 2015-16 வரையிலான காலத்தில் 3.06 விழுக்காடாகக் குறைந்து பின் 2016-17 முதல் 2020-21 வரையிலான காலத்தில் 9.41 விழுக்காடாக உள்ளது.

உள்ளாட்சி அமைப்புகள்:

2018-19ல் தமிழ்நாடு அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு மொத்த வருவாயில் 14.72 விழுக்காடு ஒதுக்கியுள்ளது, இந்திய அளவில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக நிதி வழங்கும் இரண்டாவது மாநிலமாக தமிழ் நாடு உள்ளது. ஐந்தாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின் படி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிகர மாநில சொந்த வரி வருவாயின் 10 விழுக்காடு பகிரப்படுகிறது.இத்தொகையானது மேற்கொண்டு ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 56:44 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. உள்ளாட்சி அமைப்புகளுக்கு கணிசமாக நிதி அளிக்கப்படும் போதும் அவை தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றிற்கு மின்சாரம் மற்றும் குடிநீருக்கான கட்டணங்களை செலுத்துவதில்லை.

வரி வருவாய், வரி அல்லாத வருவாய், மானியங்கள் மற்றும் கடன்கள் ஆகியவையே உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் ஆதாரமாகும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் வரி வருவாயின் முதன்மையான ஆதாரமாக சொத்து வரி உள்ளது.இது உள்ளாட்சி அமைப்புகளின்

வரி வருவாயில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக உள்ளது.

மாநகராட்சிக்கு கட்டிடங்களின் ஆண்டு வாரியான வாடகை மதிப்பில் 15.5 முதல் 35.5 விழுக்காடு வரை சொத்து வரி விதிக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. நகராட்சி பேரூராட்சிகளுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை சொத்து வரியில் திருத்தம் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.சொத்து வரி திருத்தம் கடைசியாக 2008ல் மேற்கொள்ளப்பட்டது.

ஐந்தாவது நிதிக்குழு 2021-22ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு பொருளாக்க மதிப்பில் 0.60 விழுக்காட்டிற்கு சொத்து வரி வருவாயின் பங்கை உயர்த்த நிர்ணயித்த இலக்கினை மாநில அரசு 0.25 விழுக்காடாகக் குறைத்துள்ளது. குறைக்கப்பட்ட இலக்கினை அடைவதென்பதும் சந்தேகத்திற்குறியதாக உள்ளதாகவும், உள்ளாட்சி அமைப்புகள் சுயாட்சி பெற்று 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும், அவற்றின் வரி வசூலிப்பு திறன் மேம்படாமல் உள்ளது எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்டதால் மாநில வரி விதிப்பில் கூடுதல் நிதி ஆதாரத்தை திரட்டுவதற்கான வழிவகைகள் கட்டுப்படுத்தப்பட்டது. எனவே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சொத்து வரி வசூலிப்பை அதிகரிப்பதற்கான நகர்வுகள் அடுத்த நிதி ஆண்டுகளில் மேற்கொள்ளப்படக்கூடும்.

மாநில பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் சட்டப்படியான வாரியங்களின் செயல்பாடு:

தமிழ் நாட்டில் 60 பொதுத்துறை நிறுவனங்களும் ( புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட 5 பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) 9 சட்டப்படியான வாரியங்களும் உள்ளன.இவற்றில் 26 பொதுத்துறை நிறுவனங்கள் இழப்பை சந்திப்பவையாக உள்ளன. அவற்றின் இழப்புகளை சரிசெய்வதற்கு கூடுதல் கடன் பெறுவது தவிர்க்க இயலாததாக உள்ளது. மோசமடைந்து வரும் பொதுத்துறை நிறுவனங்களின் நிதி நிலையானது, அவை அரசு உத்தரவாதமின்றி கடன் பெற இயலாத சூழ்நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது.

2006-07ல் 3466 கோடியாக இருந்த பொதுத்துறை நிறுவனங்களுக்கான அரசு உத்தரவாதங்கள் 2020-

21ல் 90344.13 கோடி ரூபாயாக 2507 விழுக்காடு அதிகரித்துள்ளது.பொதுத்துறை நிறுவனங்களுக்கு நிலுவையில் உள்ள அரசுக் கடன்கள் 2006-07ல் 1578.69 கோடியிலிருந்து 2020-21ல் 20019 கோடியாக 605 விழுக்காடு அதிகரித்துள்ளது.பொதுத்துறை நிறுவனங்களின் நிலுவையில் உள்ள கடன் மாநில மொத்த பொருளாக்க மதிப்பில் 36 விழுக்காடாக அதிகரித்துள்ளது.இது வரையறுக்கப்பட்ட 25 விழுக்காட்டை விட அதிகரித்துள்ளது.அவற்றின் மோசமான நிதி நிலை சேவைகளின் தரத்தை பாதித்துள்ளது.ஏற்கெனவே நெருக்கடியில் உள்ள மாநிலத்தின் நிதி நிலைக்கு பாதிப்பு ஏற்படக் கூடும் என்பதால் சீர்திருத்தத்தை ஒத்தி வைக்க இயலாது என அறிக்கை குறிப்பிடுகிறது.

பொதுத்துறை நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன் பொறுப்புறுதியால் ஏற்படக்கூடிய நெருக்கடியை அளவிடுவதற்கு, பொதுத்துறை நிறுவனங்களின் எளிதில் பணப்புழக்கம், கடன் தீர்வு நிலை மற்றும் நிதி நிலை போன்ற காரணிகளின் அடிப்படையில் விரிவான பகுப்பாய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளது. 31.3.2021 நிலவரப்படி, மின்சாரத்துறை மற்றும் போக்குவரத்துத் துறையின் கீழ் உள்ள பொதுத்துறை நிறுவனங்களின் ஒட்டுமொத்தக் கடன்கள் 1.99 லட்சம் கோடி ரூபாய் ஆகும். 31.03.2021 நிலவரப்படி குடிநீர் வழங்கலுக்கான இரண்டு சட்டப்படியான வாரியங்களின் ஒட்டுமொத்த இழப்புகள் 5,282 கோடி ரூபாய் ஆகும்.இந்த வாரியங்களின் ஆபத்தான நிதி நிலைக்கு, அவற்றின் இயக்க செலவினங்களை குறைவாக வசூலிப்பதே முக்கிய காரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு சட்டப்படி உருவாக்கப்பட்ட கழகங்கள், கூட்டுப் பங்கு நிறுவனங்கள், மற்றும் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் மார்ச் 2018 வரை 33,579 கோடி முதலீடு செய்திருந்தது.அரசு பெறும் கடன்களுக்கான வட்டி சராசரி 8.08 விழுக்காடாக உள்ள நிலையில், அரசு மேற்கொண்ட முதலீடுகளிலிருந்து பெறப்படும் சராசரி வருவாய் 0.45 விழுக்காடு மட்டுமே உள்ளது.

மாநில போக்குவரத்து நிறுவனங்கள் இயக்கும் வாகனங்கள் ஒரு கிலோமீட்டருக்கு ரூபாய் 59.15 இழப்பை ஏற்படுத்துகின்றன. 2011-12ல் போக்குவரத்துக் கழகங்களின் ஒட்டு மொத்த இழப்பு 8761.69 கோடி ரூபாயாக இருந்தது 2020-21ல் 42143 கோடி ரூபாயாக 381 விழுக்காடு அதிகரித்துள்ளது.டீசல் விலையை அடிக்கடி உயர்த்துவதும், செலவின மேலாண்மையில் உள்ள குறைபாடுகளும், இயந்திரங்கள், உதிரி பாகங்களை அதிக விலைக்கு கொள்முதல் செய்வதும் மாநில

போக்குவரத்துக் கழகங்களின் மோசமான நிதி நிலைக்கு காரணமாக உள்ளன.

பேருந்து சேவைகளின் தரமும், வாகனங்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப மாநில பேருந்து நிறுவனங்கள் மூலதனச் செலவு செய்ய இயலாததால் 2011-12ல் 21,197ஆக இருந்த பேருந்துகளின் எண்ணிக்கை 2020-21ல் 20,670ஆகக் குறைந்துள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு 31.03.2021 நிலவரப்படி தமிழ்நாடு அரசுக்கடன் 4,582 கோடி ரூபாய் மற்றும் உதய் கடன் 4,563 கோடி ரூபாய் உட்பட நிலுவையிலுள்ள மொத்தக் கடன் 1,34,119 கோடி ரூபாயாகும்.

மின் பகிர்மான நிறுவனங்களின், நிதிநிலையை சீர் செய்வதற்காக, உதய் திட்டத்தை ஒன்றிய அரசு செயல்படுத்தியது. இதன் படி மின் பகிர்மான நிறுவனங்களின் 75 விழுக்காடு கடன் பொறுப்பை கடன் பத்திரங்கள் வழங்குவதன் வாயிலாக மாநில அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும். மேலும், அரசுக்கு செலுத்தவேண்டிய கடனில் 25 விழுக்காட்டிற்கு மானியம் அளிக்கவேண்டும் அல்லது தள்ளுபடி செய்யவேண்டும்.மின் பகிர்மான நிறுவனங்களின் இழப்புகளையும் முடிந்த அளவிற்கு மாநில அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும்.உதய் திட்டத்தின் கீழ் ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்பை குறைப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் மின் பகிர்மான நிறுவனங்களின் இழப்புகள் குறையவில்லை.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்/ தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் அதிக செலவுகளாலும் குறைந்த வசூலாலும் பாதிக்கப்படுகின்றன. மின்சாரத்திற்கான சராசரி வழங்கல் செலவினம் அலகு ஒன்றுக்கு ரூ.9.06 என கணக்கிடப்பட்டுள்ள நிலையில் 2020-21ல் சராசரியாக அலகு ஒன்றுக்கு 2.36 ரூபாய் குறைவாக ரூ.6.70 மட்டுமே வசூலிக்கப்படுவதால் இழப்புகள் ஏற்பட்டுள்ளன.நிலக்கரிக்கான செலவுகள், வெளிப்புற மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் வாயிலாக செலவு அதிகரித்ததும் மொத்த செலவு அதிகரிப்பிற்குக் காரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மை காலங்களில், சொந்த உற்பத்தியைக் காட்டிலும் மின் கொள்முதல் விலை குறைவாக

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

உள்ளது 2020-21ல் ஒரு அலகு அனல் மின்சாரத்தின் விலை ரூ.4.87 ஆனால் வெளிக்கொள்முதலின் மூலம் பெறப்படும் ஓரலகு மின்சாரத்தின் விலை ரூ.4.42 ஆக உள்ளது.

வீட்டு உபயோக மின் கட்டணத்தில் மானியம், வசூல் தொகையையும் சேர்த்த பின்பு ஓரலகு மின்சாரத்திற்கு 5.74 ரூ இழப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கட்டணங்களை சரியாக வசூலிக்க முடியாததால் அதிகரித்து வரும் வட்டியுடன் பல பட்டியல்கள் நிலுவையில் உள்ளன. இவற்றுக்கு நீண்ட காலத்திற்கு அதிகக் கடன் ஒப்புறுதிகள் உருவாக்கப்பட்டுள்ளதன் விளைவாக முழுமையாக மறுகட்டமைப்பு செய்வதை மேலும் ஒத்தி வைக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் இழப்பு:

ஓய்வூதியத் தொகை மற்றும் அதிகளவிலான குடிநீர் வழங்கல் திட்டங்களின் பராமரிப்பு, வாரியத்தின் மூலமாகச் செய்யப்படாமல் வெளி முகமைகளின் வழியாகச் செயல்படுத்தப்படுவதால், பராமரிப்புச் செலவினம் ஆகியவை கடந்த பத்து ஆண்டுகளாக அதிகரித்து வருகின்றன.

குடிநீர் கட்டணங்களை குறைத்து வசூலிப்பதே பற்றாக்குறைக்கான முக்கியக் காரணியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிலோ லிட்டர் ஒன்றுக்கான இயக்கச் செலவு சுமார் 20.81 ரூபாயாக இருக்கும் போது, 2020-21ல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிலோ லிட்டருக்கு 10.42 ரூபாயும், கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிலோ லிட்டருக்கு 8.11 ரூபாயும் வசூலிக்கப்படுகிறது.31.3.2021ஆம் நாளின் படி உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து வரவேண்டிய குடிநீர் கட்டண நிலுவை தொகை 484 கோடி ரூபாய் ஆகும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய செயல்பாட்டு கட்டண நிலுவைகளை செலுத்துவதற்கு உள்ளாட்சி அமைப்புகளால் இயலவில்லை.இதனால் வலுவிழக்கும் உள்ளாட்சி அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்கள்/ வாரியங்களை வலுவற்ற நிலைக்குத் தள்ளுவதுடன், மாநில அரசுக்கு மேலும் பொறுப்பு சுமையை ஏற்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் மாநில மொத்த பொருளாக்க மதிப்பின் சராசரி ஆண்டு வளர்ச்சி விகிதம்: (நிலையான விலைகளில்):

தமிழ்நாட்டின் மொத்த பொருளாக்க மதிப்பின் வளர்ச்சி 2006-11 காலகட்டத்தில் 10.15 விழுக்காடாக இருந்தது 2011-16 காலகட்டத்தில் 6.70 விழுக்காடாக சரிவடைந்து 2016-20 காலகட்டத்தில் 7.22 விழுக்காடாக உள்ளது.

தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சி விகிதத்தில் மிகப்பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது.2006-07 முதல் 2010-11 வரையிலான காலத்தில் 10.30 விழுக்காடாக இருந்த தொழில்துறை வளர்ச்சிவீதம் 2011-12 முதல் 2015-16 வரையிலான காலத்தில் 5.49 விழுக்காடாக சரிவடைந்து பின்னர் 2016-17 முதல் 2019-20 வரையிலான காலத்தில் 8.17 விழுக்காடாக சற்று அதிகரித்துள்ளது.

2006-07 முதல் 2010-11 வரையிலான காலத்தில் 11.23 விழுக்காடாக இருந்த சேவைத் துறையின் வளர்ச்சி 2011-12 முதல் 2015-16 வரையிலான காலத்தில் 7.44 விழுக்காடாக சரிவடைந்து 2016-17 முதல் 2019-20 வரையிலான காலத்தில் 6.03 விழுக்காடாக பெரும் சரிவை சந்தித்துள்ளது.

2006-07 முதல் 2010-11 வரை 4.07 விழுக்காடாக இருந்த வேளாண்மை சார்ந்த துறைகளின் வளர்ச்சி, 2011-12 முதல் 2015-16 வரை 5.24 விழுக்காடாகவும், 2016-17 முதல் 2019-20 வரை 5.86 விழுக்காடாகவும் அதிகரித்துள்ளது. சேவைகள் மற்றும் தொழில்துறை வேளாண்மை துறைகளைக் காட்டிலும் அதிக வளர்ச்சி விகிதங்களை பதிவு செய்துள்ளன என்பதை துறைவாரியான வளர்ச்சி விபரங்கள் வெளிப்படுத்துகிறது. வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த துறைகளே பெருமளவிலான மக்களுக்கு வாழ்வாதாரமாக இருப்பதால் அதில் அதிக முதலீடுகளை செய்து வேளாண் உள்கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். வேளாண் துறையை மேம்படுத்தும் விதமான கொள்கைத் திருத்தங்கள் அறிமுகப்படுத்தாத வரை தமிழ் நாட்டின் வளர்ச்சி அனைத்து மக்களையும் உள்ளடக்கிய ஒட்டு

மொத்த வளர்ச்சியாக இல்லாமல் மேலும் சமமற்ற தன்மைக்கே வழிவகுப்பதாக அமையும்.

மாநில மொத்த பொருளாக்க மதிப்பில் தனிநபர் வருவாய், 2006-07 முதல் 2010-11 வரையிலான காலத்தில் 9.37 விழுக்காடாக இருந்தது, 2011-12 முதல் 2015-16 வரையிலான காலத்தில் 6.32 விழுக்காடாக சரிவடைந்து பின்னர் 2016-17 முதல் 2019-20 வரையிலான காலத்தில் 6.70 விழுக்காடாக உயர்ந்தது.

2010-11 முதல் 2012-13 வரையிலான மூன்று ஆண்டுகாலத்திற்கு மாநில பொருளாக்க மதிப்பில் தனி நபர் வருமான தரவரிசையில் பெரிய மாநிலங்களிடையே நான்காவது இடத்தை வகித்த தமிழ் நாடு, 2010-11 முதல் 2012-13 வரையிலான மூன்று ஆண்டு காலத்தில் ஐந்தாவது இடத்திற்கு பின்தங்கியுள்ளது.

2004-05 முதல் 2011-12 வரை சராசரி வளர்ச்சியில் இந்திய அளவில் மூன்றாவது இடத்தில் இருந்த தமிழ் நாடு 2012-13 முதல் 2018-19 வரை 11வது இடத்திற்குப் பின்தங்கியது.

பணமதிப்பிழப்பு (2016), அவசரமாக நடைமுறைப்படுத்தப்பட்டசரக்கு மற்றும் சேவை வரி(2017) மற்றும் கோவிட்-19 தொற்று நோயால் அமல்படுத்தப்பட்ட பொதுமுடக்கம்(மார்ச் 2020) போன்ற தேசிய இடையூறுகள் தமிழ்நாட்டின் வளர்ச்சியை பாதித்தது. மற்ற வளமான மாநிலங்களைக் காட்டிலும் நிதியொதுக்கம் இல்லாத காரணத்தினால் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் சரிந்துள்ளது. துறைவாரியான வளர்ச்சியில் நிலையற்றத் தன்மை மற்றும் போட்டித் திறன் இல்லாமை ஆகியவை விரைவான முறையில் தீர்க்கப்படவேண்டிய முக்கிய பிரச்சனைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் நிதி ஒழுங்கு மற்றும் மேலாண்மையில் ஏற்பட்ட பின்னடைவே பொருளாதார

வளர்ச்சியில் ஏற்பட்ட மந்த நிலைக்குக் காரணம் என அறிக்கை குறிப்பிடுகிறது.

பெருமளவில் ஆளுகையில் இருக்கும் கட்டமைப்புக் குறைபாடுகளை உரிய நேரத்தில் சரிசெய்யாததாலும், மாநிலத்தின் நிதிநிலை நெருக்கடிக்குத் தள்ளப்பட்டுள்ளது.ஆகவே வழக்கமான அனுகுமுறையைத் தொடர இயலாது. தொடர்ந்து அதிகரித்து வரும் கடன் மற்றும் வட்டிச் செலவுகளிலிருந்து மீள்வதற்கு அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும்.வருவாய் பற்றாக்குறையை குறைப்பதற்கு வட்டிச் செலவுகளையும், கடனையும் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும். நியாயமான முறையில் வருவாயை உயர்த்த வேண்டும். கடந்த மூன்று முதல் நான்கு ஆண்டுகளில் ஊதியங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் வட்டிச் செலவினங்கள் போன்ற விருப்புரிமையற்ற செலவினங்களுக்குக் கூட கடன்கள் பெறப்பட்டுள்ளது. அதற்கு முன்னதாக இத்தகைய செலவினங்கள் அரசின் வருவாய் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த நடைமுறை நிறுத்தப்பட வேண்டும்.

அரசின் செயல்பாட்டிலும் அரசியலமைப்பின் பல்வேறு பகுதிகள் உள்ளிட்ட எண்ணற்ற அம்சங்களிலும் ஆழ்ந்த கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டியது அவசியம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஆலோசனை பெறுவதற்காக முதலமைச்சரின் உலகப் பொருளாதார ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.இதில் பொருளாதார ஆலோசகர் ஜான் ட்ரீஸ், பிரதமரின் முன்னாள் பொருளாதார ஆலோசகர் எஸ்.நாராயன், நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் எஸ்தர் டாஃப்லோ, ஒன்றிய அரசின் முன்னாள் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்ரமணியன், இந்தியத் தலைமை வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். ஜான் ட்ரீஸை தவிர இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள மற்ற அனைத்து பொருளாதார ஆலோசகர்களும் தனியார்மயத்தின் தீவிர ஆதரவாளர்கள் எனும் போது அவர்களின் வழிகாட்டுதலின் மூலம் செய்யப்படவுள்ள பொருளாதார கட்டமைப்பு மாற்றம் எந்த அளவிற்கு சமூக நீதியின் அடிப்படையில் அமையும்

என்பது பெரும் கேள்விக்குறியாக உள்ளது.

பேருந்துத்துறை, மின் பகிர்மான நிறுவன்ங்கள், குடிநீர் வாரியம் ஆகியவற்றின் சேவைகளுக்கு வசூலிக்கப்படும் கட்டணம் அடுத்த நிதியாண்டுகளில் உயர்த்தப்படலாம். கட்டணங்களை உயர்த்துவது இருக்கட்டும் அவற்றின் செயல்பாட்டுத் திறனையும் மேம்படுத்தவேண்டும். இவ்வமைப்புகளில் காணப்படும் நிர்வாக முறைகேடுகளை களைந்து வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவர அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். உள்ளாட்சி அமைப்புகள், பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகம் என்றென்றும் வெள்ளை அறிக்கையாகவே இருக்கும் படியாக தன்னலமற்ற கண்காணிப்புக் குழுக்களை கீழிருந்து கட்டமைக்கவேண்டும்.

ஒரு நாட்டின் மனிதவளமே மிகவும் விலைமதிப்பற்ற சொத்து என்பதால் மனிதவளத்தின் சீர்கெடுக்கும் மதுபானத்தின் மூலம் வருவாய் திரட்டும் வழிமுறைகளை தமிழக அரசு கைவிட்டு மாற்று வழிமுறைகளை மேற்கொள்வது மிகவும் அவசியம்.

பொதுத்துறை நிறுவன்ங்களின் கடன் சுமை அதிகரித்துள்ளதால் அவற்றிலும் கட்டமைப்பு மாற்றம் செய்யவேண்டும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுத்துறை நிறுவனங்களின் உற்பத்தி/செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தி வலுப்படுத்துவதும் கட்டமைப்பு மாற்றம் தான். தனியார் நிறுவனங்களை பொதுத் துறை நிறுவனங்களாக மாற்றுவதும் கட்டமைப்பு மாற்றம் தான். பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயம் செய்வதும் கட்டமைப்பு மாற்றம் தான். இதில் முதலில் குறிப்பிடப்பட்ட இரண்டுமே சமூக நீதி அடிப்படையில் முற்போக்கானவை, மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்ட தனியார்மயம் சமூக நீதியின் அடிப்படையில் பிற்போக்கானது.

மெய்யான சமூக நீதியின் அடிப்படையில் ஆழ்ந்த பொருளாதார கட்டமைப்பு மாற்றத்தை தமிழ் நாடு அரசு மேற்கொள்ளவும், இழந்த நிதி இறையாண்மையை மீட்கவும் உரிய வழிகாட்டுதலையும், அழுத்தத்தையும் கொடுக்கவேண்டிய பொறுப்பு அனைத்து அரசியல் அமைப்புகள், சமூக ஆர்வலர்களின் கடமையாக உள்ளது.

# திருத்த நிதி நிலையறிக்கை அறிக்கை 2021-22:

**சமந்தா**

ஆகஸ்டு 13 அன்று தமிழ் நாட்டின் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்த 2021-22ஆம் ஆண்டின் திருத்த நிதிநிலை திட்ட மதிப்பீடுகள் இந்த நிதி ஆண்டின் கடைசி ஆறு மாதங்களுக்கானவை மட்டுமே. நிதியமைச்சர் தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசு கடமைப்பட்டுள்ளதாக உறுதியளித்துள்ளார். கோவிட் பெருந்தொற்றின் இரண்டாம் அலை சுகாதாரத்திலும், பொருளாதாரத்திலும் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தி ஏற்கெனவே கடுமையான நிதி நெருக்கடியில் இருந்த அரசை மேலும் பாதிப்பிற்கு உள்ளாக்கியுள்ளன.எனவே, அடுத்த நிதி ஆண்டின் நிதிநிலைத் திட்டத்திற்கு வலுவான அடித்தளம் அமைப்பதே இந்த நிதிநிலை திட்டத்தின் முதன்மை நோக்கமாகும் என்றும், தமிழ் நாட்டின் நிதி நிலைமையை உடனடியாக சீர்படுத்த இயலாது என்றும் இரண்டு மூன்று ஆண்டுகள் வரை முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட 4,57,645 மனுக்களில் 2,29,216 குறைகளுக்கு நல்ல முறையில் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய அரசால் விதிக்கப்பட்ட மேல்வரிகள், முழுமையாக அக்குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படவில்லை எனவும் குறிப்பிட்ட காலத்திற்கு விதிக்கப்படும் கூடுதல் வரிகள் காலவரையரையின்றி தொடர்கின்றன எனவும் இந்தியக் கணக்குத் தணிக்கைத் துறை தலைவர் குறிப்பிட்டுள்ளதாகவும், கூட்டாட்சி நிதி வடிவம் ஒன்றை உருவாக்குவதற்காக ஆலோசனைக் குழு நிறுவப்படும் என்றும் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

பயனாளர்கள் குறித்த போதிய அடிப்படைத் தரவுகள் கிடைக்கப் பெறாததால் அனைத்துத் துறைகளிலுள்ள தரவுகளை ஒன்றிணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் மாநிலத்திலுள்ள அனைத்துப் பொதுச்சேவைகளிலும் மின்னணு அளவீட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, அனைத்து துறைகளிலும் மின்னணு கொள்முதல் முறை பின்பற்றப்படும் என்றும் அனைத்து தொழில்நுட்ப துறைகளின் நடைமுறைகளும் முழுமையாக கணினிமயமாக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

தமிழ் நாட்டு அரசின் 2.05 லட்சம் ஹெக்டேருக்கும் அதிகமான நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்தது தணிக்கையில் கண்டறியப்பட்டது. பொது நிலங்கள் தவறாக பயன்படுத்துவதைத் தடுக்கும் விதத்தில் சிறப்பான மேலாண்மைக்கு மேம்படுத்தப்பட்ட அரசு நில மேலாண்மை அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார். நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை முடிக்க வழக்கு இடர் மேலாண்மை அமைப்பு ஒன்று அமைக்கப்படும் என்றும் நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

கருவூல அமைப்பின் கண்காணிப்புக்கு வெளியேயுள்ள வங்கிக் கணக்குகளுக்கு அரசு நிதிகள் அடிக்கடி மாற்றப்படுவதைக் கண்டறிய இரட்டைக் கணக்கெடுப்புமுறை தொடங்கப்பட்டது.இதை சரிசெய்து அனைத்து அரசு நிதியும் கருவூல அமைப்பின் கட்டுப்பாட்டில் வைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

அரசின் உட்தணிக்கை அமைப்பு முறையில் அடிப்படை சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, அரசில் செயல்படும் அனைத்துத் தணிக்கைத் துறைகளும் நிதித் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டு ஒன்றிணைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

சட்டமன்றத்தின் நூற்றாண்டை சிறப்பு செய்யும் வகையில் 1921லிருந்து நடைபெற்ற நிகழ்வுகள் குறித்த ஆவணங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்படும் என்றும் பேரவையின் நிதிக்குழுக்களின்(மதிப்பீடு, பொதுக்கணக்கு, பொதுத்துறை நிறுவனங்கள்) செயல்பாட்டை வலுப்படுத்துவதற்காக உரிய அலுவலர்களுடன் கணினிமயமாக்கப்பட்ட சிறப்பு செயலகம் அமைக்கப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்.

சென்னையில் உள்ள செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும் என்றும் தலைமைச் செயலகம் முதல் மாநிலத்தின் அனைத்துத் துறை அலுவலகங்கள் வரையிலும், தமிழை ஆட்சி மொழியாகப் பயன்படுத்துவது வலுப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

மூலதனச் செலவினங்களுக்காக 2021-22 இடைக்கால நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட

43,170.61 கோடி ரூபாய், 2021-22 திருத்த நிதிநிலைத் திட்ட மதிப்பீட்டில் 42,180.97 கோடி ரூபாயாக 989.64 கோடி ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது திருத்த நிதிநிலையறிக்கையின் மிகப்பெரும் குறைபாடாகும். தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான ஆலோசனைகளை வழங்க அமைக்கப்பட்ட ரங்கராஜன் குழு குறைந்தபட்சம் 10000 கோடி ரூபாய் கூடுதல் மூலதனச் செலவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

கோவிட்-19 பெருந்தொற்றினால் தமிழ் நாட்டின் சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளன.அவற்றிற்கு உதவும் பொருட்டு “ரங்கராஜன் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, கடன் வழங்கும் நிறுவனமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தை வலுப்படுத்துவதற்கும், அதன் செயல்பாடுகளை விரிவாக்குவதற்கும் கூடுதல் மூலதனமாக 1000 கோடி ரூபாயை அரசு வழங்கும்.இதற்காக, 2021-22ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது” என 2021-22ஆம் ஆண்டின் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது குறித்து 2021-22ஆம் ஆண்டின் திருத்த நிதிநிலை அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

2021-22 இடைக்கால நிதிநிலைத் திட்ட மதிப்பீடுகளில் அம்மா மினி கிளினிக்குகளுக்காக 144 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது திமுக அரசின் திருத்த நிதிநிலை அறிக்கையில் 257.16 கோடி ரூபாய் செலவில் மக்களைத் தேடி மருத்துவம் என்ற புதியத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009ல் திமுக ஆட்சியில் இருந்த போது கொண்டுவரப்பட்ட கலைஞர் காப்பீட்டுத் திட்டம் 2011ல் அதிமுக ஆட்சியில் விலக்கிக் கொள்ளப்பட்டு தமிழக முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.இத்திட்டம் குறித்து 2021-22 திருத்த நிதிநிலை அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கலைஞர் காப்பீட்டுத் திட்டத்திற்கு 1046.09 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

ஒவ்வொரு ஆட்சி மாற்றத்தின் போதும் திட்டங்களும், திட்டத்தின் பெயர்களும் அரசியல் கட்சிகளுக்கு ஆதாயம் அளிக்கும் வகையில் மாற்றப்படுவது திட்டமுறைகளில்

தொடர்ச்சியின்மையை ஏற்படுத்துவதுடன் நிதிவிரயத்தையும், காலவிரயத்தையும் ஏற்படுத்துகிறது.இத்திட்டங்களுக்கு மக்களின் வரிப்பணமே நிதியளிக்கிறதே ஒழிய கருணாநிதியோ, ஜெயலலிதாவோ அல்ல என்பதால் திட்டங்களுக்கு அரசியல் கட்சிகளின் தலைவர்களின் பெயர்களை சூட்டும் நடைமுறையை கைவிட்டு, திட்டங்களின் பயன்முறையை வெளிப்படுத்தும் விதமாக பெயர் சூட்டுவதே உண்மையான ஜனநாயகத்துக்கு வழிவகுக்கும்.

2021-22 திருத்த நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்திற்கு 116.46 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இடைக்கால நிதிநிலை திட்ட அறிக்கையில் இதற்கு 291 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

2021-22 திருத்த நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு சித்தா பல்கலைக் கழகத்தை அமைத்திட முதல் கட்ட நிதியாக 2 கோடி ரூபாய் ஒதுக்கிடப்பட்டுள்ளது.மருத்துவம் மற்றும் குடும்ப நலத்திற்காக மொத்தம் 18,933.20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

முதியோர் ஓய்வூதியத் திட்டம் முழுமையாக சீரமைக்கப்பட்டு அனைத்துத் தகுதிவாய்ந்த நபர்களும் விடுதலின்றி பயன்பெறுவது உறுதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.சமூகப்பாதுகாப்பு ஓய்வூதியங்களுக்கு 4807.56 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் தொல்லியல் ஆய்வுகளை அறிவியல் முறைப்படி மேற்கொள்ள, 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கீழடி, சிவகளை, கொடுமணல் ஆகிய பகுதிகளில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள் பாதுகாக்கப்பட்ட தொல்லியல் தளங்களாக அறிவிக்கப்படவுள்ளது. தமிழ் வளர்ச்சித் துறைக்கு 80.26 கோடி ரூபாயும், தொல்லியல் துறைக்கு 29.43 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2021-22ஆம் ஆண்டு திருத்த நிதிநிலை அறிக்கையில் காவல்துறைக்கு 8930 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இடைக்கால நிதிநிலைத் திட்ட மதிப்பீட்டில் 9576.93 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

2021-22ஆம் ஆண்டு திருத்த நிதிநிலை அறிக்கையில் விபத்துகளைத் தடுக்க ஒருங்கிணைந்த சாலை பாதுகாப்பு இயக்கம் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த பல்வேறு துறைகளுக்கு 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தீயணைப்புத் துறைக்கு 405.13 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இடைக்கால நிதிநிலைத் திட்ட மதிப்பீட்டில் இத்துறைக்கு 436.68 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

நீதித்துறைக்கு புதிய கட்டடங்கள் கட்டுமானத்திற்கு 351.87 கோடி ரூபாய் உட்பட, நீதித்துறை நிர்வாகத்திற்கென திருத்த நிதிநிலை அறிக்கையில் 1,713.30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடைக்கால நிதிநிலைத் திட்ட மதிப்பீட்டில் 1437.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

உணவு மானியத்துக்கு திருத்த நிதிநிலை அறிக்கையில் 8437.57 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடைக்கால நிதிநிலைத் திட்ட மதிப்பீட்டில் 9604.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

பிரதமரின் வேளாண் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர்நிலைப் பகுதிகளைப் புனரமைத்தல் பணிகளுக்காக 2021-22ஆம் ஆண்டில் 100 குளங்களை சீரமைக்க 111.24 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீர்வள தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பை செயல்படுத்த 30 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நீர்வள மேலாண்மை திட்டங்களுக்காக 326.37 கோடி ரூபாயும், பாசனத்திற்காக 6607.17 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பருவ நிலை மாற்ற மேலாண்மை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்காக 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காற்றின் தரத்தினை நிகழ் நேரத்தில் கண்காணிக்கவும், முன்னெச்சரிக்கை அளிக்கவும் ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம் ஒன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகளில் 100 ஈர நிலங்களை கண்டறிந்து, அவற்றின் இயற்கை சூழலை மீட்க 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீன்வளத்துறைக்கு 1,149.79 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடைக்கால நிதிநிலை அறிக்கையில் இத்துறைக்கு 580.97 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது

குடிநீர் இணைப்பு இல்லாத 83.92 லட்சம் குடும்பங்களுக்கும் 2024ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள்ளாக குடிநீர் இணைப்பு வசதிகள் வழங்க 2,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜல் ஜீவன் இயக்கம் செயல்படுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2020-21ஆம் ஆண்டின் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் 3,016 கோடி ரூபாய் செலவில் 40 இலட்சம் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படும் என்றும் இதில் 2006.08 கோடி ரூபாய் ஜல் ஜீவன் திட்டம் வாயிலாகவும் 1010.18 கோடி ரூபாய் பிற திட்டங்களில் நிதியை ஒருங்கிணைத்தும் வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

2021-22 திருத்த வரவு-செலவு அறிக்கையில் கிராமப்புற வீட்டு வசதி திட்டத்திற்கு 3548 கோடி ரூபாய் ஒதுக்கிடப்பட்டுள்ளது.தூய்மை பாரத் இயக்கத்துக்கு 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு நடப்பாண்டில் 25 கோடி மனித உழைப்பு நாட்கள் அளவிலான வேலைவாய்ப்பு அளிக்க மொத்த ஊதிய செலவிற்கு 6825 கோடி ரூபாயும், பொருட்செலவிற்கு 3,200 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி நடப்பு ஆண்டிலிருந்து 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குக்கிராம அளவில் நிலவும் அடிப்படை உட்கட்டமைப்பு இடைவெளிகளை நிறைவு செய்யும் விதத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை தொடங்க

1200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நமக்கு நாமே திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நகர்ப்புறங்களில் நமக்கு நாமே திட்டத்தை செயல்படுத்த 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டத்திற்கு 1000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டம் புதுப்பிக்கப்பட்டு 36,218 சுய உதவிக்குழுக்களுக்கு பயனளிக்கும் வகையில் 809.79 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இடைக்கால நிதிநிலை அறிக்கையில் சீர்மிகு நகரங்கள் திட்டத்திற்கு 2,350 கோடி ரூபாயும், அம்ருத் திட்டத்திற்கு 1450 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.திருத்த நிதி நிலை அறிக்கையிலும் இத்திட்டங்களுக்கு அதே அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கொசஸ்தலை ஆற்றுப் படுகையில் ஒருங்கிணைந்த வெள்ள நீர் வடிகால் அமைப்பு ஏற்படுத்த 87 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு இடைக்கால நிதி நிலை அறிக்கையில் 287 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

சிங்கார சென்னை 2.0 திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் மூன்று இடங்களில் 335 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாலங்கள் கட்ட 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்டத்தை ஏற்படுத்த 2,056 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள நீர்வழிகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்கும் திட்டத்தை செயல்படுத்த 2,371 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10 ஆண்டு காலத்திற்குள் தமிழ்நாடு முற்றிலுமாகக் குடிசைகளற்ற மாநிலமாக மாற்ற உறுதியளிக்கப்பட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காக 3,954.44 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு 5,421.41 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட செயல்பாட்டின் இரண்டாம் கட்டத்திற்கு 663 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத்துறைக்கு மொத்தம் 17,889.17 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இடைக்கால நிதி நிலை அறிக்கையில் இத்துறைக்கு 18750.96 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

பேருந்துகளில் இலவச பயணத்திற்காக 703 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.மேலும் டீசல் மானியத்திற்கு 750 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெட்ரோலின் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது, ஆனால் டீசல் விலை குறைக்கப்படவில்லை என்பது ஒரு குறைபாடாக உள்ளது.ஏனெனில் கனரக வாகனங்கள் டீசலினால் இயக்கப்படுவதால் டீசல் விலை குறையும் போது அது விலைவாசி உயர்வையும் குறைக்கும் என்பது பரவலாக அறியப்பட்ட உண்மை.

வேளாண்மைக்கான இலவச மின்சாரம், வீட்டிற்கான மின்சாரம் வழங்குவதற்கான மானியங்களுக்காகவும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இழப்புகளுக்கு நிதி வழங்கவும் 19,872.77 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டிற்கென தனித்துவமான மாநிலக் கல்விக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கு உயர்மட்டக் குழு ஒன்றை நியமிக்கப்படும் என்றும் இந்த ஆண்டு புதிதாக 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.பள்ளிக்கல்விக்கு 32,599 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்திற்கு மானியங்களை வழங்குவதற்காக 215.64 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக, தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் தொழிற்சாலைகளில் திறம்படவேலை செய்வதை உறுதி செய்வதற்காகவும், எதிர்கால வேலைவாய்ப்புக்கான திறன் பயிற்சியினை, தெரிவு செய்யப்பட்ட 15 அரசு தொழிற்பயிற்சி

நிலையங்களில் வழங்குவதற்கான செலவில் திறன் மேம்பாட்டு மையங்களை அமைக்க 60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கான மானியமாக இடைக்கால நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருந்த 200 கோடி ரூபாயே திருத்த நிதிநிலை அறிக்கையிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் 1000 கோடி ரூபாய் செலவில் அறைகலன்களுக்கான சர்வதேச பூங்கா ஒன்று அமைக்கப்படும் என்றும், கோயம்புத்தூரில் 225 கோடி ரூபாய் மதிப்பில் பாதுகாப்பு கருவிகள் உற்பத்தி பூங்கா அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள திருவண்ணாமலை, தர்மபுரி, திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, விழுப்புரம், நாமக்கல், தேனி, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் புதிய சிப்காட் தொழிற்பூங்காக்கள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.முதற்கட்டமாக, 4000 ஏக்கர் நிலங்கள் மேம்படுத்த 1,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் முதற்கட்டமாக நந்தம்பாக்கத்தில் நிதிநுட்ப நகரம் அமைக்க 165 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மருந்து பெட்ரோ வேதிப்பொருட்கள் துறையிலும், உற்பத்தி, பாதுகாப்பு, விண்வெளி மற்றும் திறன்மிகு போக்குவரத்து ஆகிய துறைகளில் ஐந்து பெரிய தொழில் தொகுப்புகளை அமைக்க 100 கோடி ரூபாய் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.செங்கல்பட்டு, கன்னியாகுமரி, திண்டுக்கல், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் செலவில் பொது வசதி மையங்கள் 55 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆறு கோடி வருடங்களுக்கு முந்தைய உள்நாட்டு புதை வடிவங்கள் கண்டறியப்பட்டுள்ள அரியலூர்-பெரம்பலூர் மாவட்டங்களில் புவியியல் புதைபடிவ பூங்கா அமைக்க பத்து கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இடைக்கால நிதி நிலை அறிக்கையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு 1,224.26 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.2021-22 திருத்த நிதிநிலை

அறிக்கையில் இத்துறைக்கு எவ்வளவு ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைக் குறிப்பிட்டவில்லை என்ற போதும் அத்துறைக்குப் பயனளிக்கும் விதமான பொங்கல் இலவச வேட்டி- சேலை திட்டத்திற்கு 490.27 கோடி ரூபாயும், பள்ளிச் சீருடைகள் விநியோகிக்கும் திட்டத்திற்கு 409.30 கோடி ரூபாயும் ஒதுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

100 திருக்கோயில்களை சீரமைக்கும் பணிக்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. போதிய நிதி வசதி இல்லாத 12,959 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை திட்டத்தை செயல்படுத்த உதவும் வகையில் ரூபாயில் நிலையான நிதி ஏற்படுத்த 130 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மசூதிகள், தேவாலயங்களை புதுப்பிப்பதற்காக தலா 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருமண நிதியுதவித் திட்டங்களுக்கு புத்துயிர் அளித்து, மகளிர் கல்வி மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்கு 762.23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்றாம் பாலினத்தவருக்கான ஓய்வூதியத் திட்டத்திற்காக 1.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அங்கன்வாடி மையங்களின் தரத்தை உயர்த்துவதற்காக 48.48 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி சார்ந்த பொருட்களை வழங்குவதற்கு 23.33 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
எம்.ஜி.ஆர் மதிய உணவுத் திட்டத்திற்காக 1,725.41 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இடைக்கால நிதிநிலையறிக்கையில் இத்திட்டத்திற்கு 1953.98 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்திற்காக 2,536.69 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடைக்கால நிதி நிலையறிக்கையில் இத்திட்டத்திற்கு 2634 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

ஆதி திராவிடர் சிறப்புக் கூறுகள் திட்டத்திற்கு 14,696 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இடைக்கால நிதி நிலையறிக்கையில் இத்திட்டத்திற்கு 13967.58 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு 1,306.02 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடைக்கால நிதி நிலையறிக்கையில் இத்திட்டத்திற்கு 1276.24 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறுபான்மையின பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான உதவித் திட்டங்களுக்கு 114.65 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இடைக்கால நிதி நிலையறிக்கையில் இத்திட்டத்திற்கு 110 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்புத் தொகையாக 404.64 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான கருவிகள் மற்றும் உபகரணங்களுக்காக 50.66 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இடைக்கால நிதி நிலையறிக்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கு 688.48 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்கான 225.62 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. . இடைக்கால நிதி நிலையறிக்கையில் இத்திட்டத்திற்கு 229.37 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்ட 2756 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்யப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது. பயிர்க் கடன் வழங்கும் திட்டத்தில் நிகழ்ந்துள்ள பல்வேறு முறைகேடுகளை தீர ஆராய்ந்த பின்பே இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

.கூட்டுறவுச் சங்கங்களின் கடன் திட்டங்களுக்காக 600 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2021-22 இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,18,991.96 கோடி ரூபாயாக இருந்த

ஒட்டு மொத்த வரி வருவாய் மதிப்பீடுகள், திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 2,02,495.89 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மாநில அரசின் சொந்த வரி வருவாய் இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,35,641.78 கோடி ரூபாயாக இருந்தது, திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 1,26,644.15 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு 2021-22ஆம் ஆண்டு ஒன்றிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிர்ணயிக்கப்பட்ட 27,148.31 கோடி ரூபாய் அளவிலேயே மதிப்பிடப்பட்டுள்ளது. 2021-22ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 14,139.01 கோடி ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ள வரி அல்லாத வருவாய் கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக 2021-22ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைக் காட்டிலும் சற்றுக் குறைவாக உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2021-22ஆம் ஆண்டில் மொத்த வருவாய் செலவினங்கள் 2,60,409.26 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.கூடுதல் நிதி ஒதுக்கீட்டால் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஒட்டுமொத்த வருவாய் செலவினங்கள் 2,61,188.57 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

2021-22 இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 41,417.30 கோடி ரூபாயாக இருக்கும் என கணிக்கப்பட்ட வருவாய் பற்றாக்குறை 2021-22 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 58,692.68 கோடி ரூபாயாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2021-22 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதிப் பற்றாக்குறை 92,529.43 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.2021-22ல் தமிழ் நாட்டின் நிதிப்பற்றாக்குறை மாநிலத்தின் மொத்தப் பொருளாக்க மதிப்பில் 4.33 விழுக்காடாக கட்டுப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# வேளாண் நிதிநிலை அறிக்கை 2021-22:

**சமந்தா**




வேளாண்மை துறைக்கு தனி நிதிநிலை அறிக்கை வெளியிட்டிருப்பது மிகுந்த பாராட்டுதலுக்கும், வரவேற்புக்கும் உரியது. வேளாண் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யும் போது பல மாவட்டங்களுக்குச் சென்று விவசாயிகளிடமும், விவசாய சங்க பிரதிநிதிகள், தொழில்நுட்ப வல்லுநர்களின் ஆலோசனைகளை பெற்ற பின்பே வேளாண் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டதாக வேளாண் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். அடுத்த பத்தாண்டுகளுக்குள் உணவுப் பாதுகாப்பையும், ஊட்டச்சத்துப் பாதுகாப்பையும் அடைந்துவிடவேண்டும் என்பதே இந்தச் சீரிய முயற்சியின் அடிப்படை நோக்கம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.டெல்லியில் மன உறுதியுடன் போராடி வருகின்ற விவசாயிகளுக்கு வேளாண் நிதி நிலை அறிக்கையை காணிக்கையுள்ளார்.
ஆனபோதும் விவசாயிகளின் உடனடிக் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமான அறிவிப்புகள் நிதிநிலை அறிக்கையில் இல்லாததால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். திமுக தனது தேர்தல் அறிக்கையில், ஒரு குவிண்டால் நெல்லுக்கு குறைந்தபட்சம் 2500 ரூபாய் விலை வழங்குவோம்' என அறிவித்திருந்து. ஆனால் தற்போது நிதிநிலை அறிக்கையில் சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 2,015 ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 2,060 ரூபாயும் வழங்கப்படும் என அறிவித்துள்ளது விவசாயிகளை மிகவும் ஏமாற்றுத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஒரு டன் கரும்புக்கு 4000 ரூபாய் அளிக்கவேண்டுமென விவசாய சங்கங்கள் தொடர்ந்து கோரிக்கை எழுப்பியுள்ளனர்.திமுக தேர்தல் அறிக்கையில் 4000 ரூபாய்க்கு கொள்முதல் செய்வதாக வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் திருத்த நிதி நிலை அறிக்கையில் ஒரு டன் கரும்புக்கு 2750 ரூபாய் மட்டுமே அளிக்கப்படுவதாக குறிப்பிருப்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். விவசாயிகள் உற்பத்தி செய்து கொடுத்த கரும்புக்கு, சர்க்கரை ஆலைகள் 1,200 கோடி ரூபாய்க்கும் மேல் நிலுவை வைத்துள்ளன. இதனை பெற்றுத் தருவது குறித்தும் இந்த நிதி நிலை அறிக்கையில் எந்த ஒரு அறிவிப்பும் வெளியாகாதது விவசாயிகளுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

வேளாண் நிதிநிலை அறிக்கையில் அரசின் மூன்று தொலை நோக்குத் திட்டங்களாகப் பின்வரும் மூன்று இலக்குகளை அமைச்சர் அறிவித்துள்ளார்

அ) தமிழ்நாட்டில் கூடுதலாக 11.75 இலட்சம் ஹெக்டேர் பயிரிடச் செய்து தற்போதுள்ள நிகர சாகுபடிப் பரப்பான 60 விழுக்காடு என்பதை 75 விழுக்காடாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ) 10 இலட்சம் ஹெக்டேர் அளவுக்கு உள்ள இருபோக சாகுபடி நிலங்கள் அடுத்த பத்தாண்டுகளுக்குள் இருமடங்காக அதாவது 20 இலட்சம் ஹெக்டேராக உயர்த்தப்படும்.

இ) உணவு தானியங்கள், தேங்காய், பருத்தி, சூரியகாந்தி, கரும்பு ஆகிய பணப்பயிர்களுக்கான வேளாண் ஆக்கத்திறனில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழகம் இடம் பிடிக்கும்.

இந்த நிதியாண்டில் செயல்படுத்தவுள்ள திட்டங்கள்:

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கு 2500 கிராமங்களில் செயல்படுத்த மாநில அரசு நிதியில் 250 கோடி ரூபாய் ஒதுக்கிடப்பட்டுள்ளது.ஒவ்வொரு கிராமத்திற்கும் 10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருதல், நீர் வளத்தை அதிகரித்தல்,வேளாண் பொருட்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துதல் எனப் பல்வேறு திட்டங்கள் இதன் மூலம் செயல்படுத்தப்படும்.

முதலமைச்சரின் மானாவாரி நிலமேம்பாட்டு இயக்கம்:

தமிழ் நாட்டில் தொகுப்பாக உள்ள மானாவாரி நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு நடப்பாண்டில் 3 இலட்சம் ஹெக்டேரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஒரு தொகுப்புக்கு 100 ஹெக்டேர் வீதம் மானாவரி நிலங்களைக் கண்டறிந்து, கோடை உழவு செய்து, பண்ணைக்குட்டைகள் வயல்வெளி

வரப்புகள், மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்குதல், தரமான விதைகளையும், உயிர் உரங்களையும் மானிய விலையில் வழங்குதல்,மரக்கன்றுகள் வளர்த்தல், பண்ணை இயந்திர வாடகை மையங்கள், மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்களையும் உருவாக்க நிதி வழங்கப்படும்.இத்திட்டம் 146 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

இயற்கை வேளாண்மை வளர்ச்சித் திட்டம்:

இயற்கை வேளாண்மைக்கான இடுபொருட்களை வேளாண் கிடங்குகளிலேயே கிடைக்க வழிவகை செய்யப்படும்.இயற்கை இடுபொருட்களுக்கான தரக் கட்டுப்பாட்டு விதிமுறைகள் தீவிரமாக செயல்படுத்தப்படும்.இயற்கை விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் வ்ழங்கப்படும். விவசாயிகளுக்கிடையே போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அங்க்க சான்றழிப்பு குறித்த பயிற்சியும் வழங்கப்படும்.33 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

நெல் ஜெயராமன் மரபுசார் நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கம்:

தமிழகத்தின் பாரம்பரிய நெல் வகைகளைத் திரட்டி பாதுகாத்து, பார்வைக்குட்படுத்தி பேணிக் காக்கிற பெரும் பொறுப்பு இத்துறைக்கு உள்ளது. அவற்றை திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், ஈரோடு, திருப்பூர், திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், மயிலாடுதுறை திருவாரூர், தேனி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள அரசு விதைப்பண்ணைகளில் 200 ஏக்கர் பரப்பளவில் விதை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இத்திட்டம் 25 இலட்சம் ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல்:

வேளாண் பட்டதாரிகளைத் தொழில்முனைவோராக்குவதற்கு தேவையான பயிற்சிகள், வேளாண் தொழில்முனைவோர் ஆவதற்குத் தேவையான பயிற்சிகள், வேளாண் வணிக நிறுவனங்களின் ஒத்துழைப்போடும், முன்னாள் மாணவர்களின் பங்களிப்போடும் செய்யப்படும்.படிப்பை முடித்து வெளிவருகிறபோதே சான்றிதழைக் கையில் பெற்று வருமாறு செய்யப்படும்.இயற்கை எரு

தயாரித்தல், மரக் கன்றுகள் வளர்ப்பு, நாற்று வளர்ப்பு,காளான் வளர்ப்பு, பசுமைக்குடில் அமைத்தல், பண்ணை இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல், உரம், பூச்சிமருந்து விநியோகம், வேளாண் ஆலோசனை மையம், நுண்ணீர்பாசன சேவை மையம், விளைபொருட்கள் ஏற்றுமதி, வேளாண் இயந்திரங்களை வாடகைக்கு விடுதல் போன்ற தொழில்களைச் செய்திடவும் வழிவகை செய்யப்படும்.2 கோடியே 68 லட்சம் ரூபாய் ஒன்றிய மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

ஊரக இளைஞர் வேளாண் திறன் மேம்பாட்டு இயக்கம்:

இத்திட்டத்தின் முதல் கட்டமாக இந்த ஆண்டு 2,500 இளைஞர்களுக்கு ஒட்டுக்கட்டுதல், பதியன்போடுதல், கவாத்து செய்தல், பசுமைக் குடில் பராமரித்தல், நுண்ணீர்ப் பாசன அமைப்பு பராமரித்தல், தோட்டக்கலை இயந்திரங்களை இயக்குதல், வேளாண் இயந்திரங்களை பழுது நீக்குதல், சூரியசக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளைப் பழுது நீக்குதல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படும்.இத்திட்டம் ரூபாய் 5 கோடி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

பனை மேம்பாட்டு இயக்கம்:

நடப்பாண்டில் 30 மாவட்டங்களில், 76 இலட்சம் பனை விதைகளையும், ஒரு இலட்சம் பனங்கன்றுகளையும் முழு மானியத்தில் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஏரிக் கரைகளிலும் சாலையோரங்களிலும் பனைமரங்களை வளர்ப்பதற்கு மீண்டும் முயற்சிகள் எடுக்கப்படும்.மழை ஈர்ப்பு மையம், நீர் நிலைகளின் காவலன் எனப்படும் என்றும் அழைக்கப்படும் பனை மரத்தினை வேரோடு வெட்டி விற்கவும், செங்கல் சூளைகளுக்குப் பயன்படுத்தும் செயலினைத் தடுக்க இவ்வரசால் உத்தரவு பிறக்கப்படும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் பனைமரங்களை வெட்ட நேரும் போது, மாவட்ட ஆட்சியர் அனுமதி பெறவேண்டியது கட்டாயமாக்கப்படும். பனை மேம்பாட்டு இயக்கம் 3 கோடி ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

நெல் உற்பத்தி சிறப்புத் திட்டம்:

19 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி மேற்கொண்டு சுமார் 75 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி

இலக்கினை அடைந்திட திட்டங்கள் செயல்படுத்தப்படும். அறுவடைக்குப் பிறகான இழப்புகளை குறைக்க விவசாயிகளுக்கு தார்ப்பாய்கள் வழங்கப்படும். இத்திட்டம் 52 கோடியே 2 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

சிறுதானிய இயக்கம்:

சிறு குறு தானிய பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், மானாவாரி நிலங்களில் சாகுபடியினை அதிகரிக்கும் விதமாக செயல்படுத்தப்படும் இத்திட்டம் 12 கோடியே 44 இலட்சம் ரூபாய் ஒன்றிய மாநில நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

பலன் தரும் பயறு உற்பத்தித் திட்டம்:

பயறு வகைகளில் அதிக மகசூல் கொடுக்கக்கூடிய ரகங்களை நெல் விவசாயிகள் வரப்புகளில் வளர்க்கவும், ஊடுபயிராக வளர்க்கவும், கலப்புப் பயிராக வளர்க்கவும் விதை மானியம் அளிக்கப்படும். துவரை, உளுந்து, பச்சைப்பயறு போன்ற பயறு வகைகளை 61,000 மெட்ரிக் டன் அளவிற்கு கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.45 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

ஏற்றம் தரும் எண்ணெய்வித்துக்கள் திட்டம்:

எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரித்திட, தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருதல், நெல் தரிசில் எள், ஆமணக்கு பயிரை தனிப்பயிராக பயிருடுவதற்கான சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படும் இத்திட்டம் 25 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

நீடித்த நிலையான பருத்தி இயக்கம்:

நடப்பாண்டில் 1.7 இலட்சம் ஹெக்டேரில் பருத்தி சாகுபடியை மேற்கொண்டு, சுமார் நான்கு இலட்சம் பொதிகள் உற்பத்தி செய்யவும், நீண்ட இழை பருத்தி சாகுபடி ஒருங்கிணைந்த உத்திகளை 25,000 ஹெக்டேரில் செயல்படுத்தவும் உள்ள இத்திட்டம் 16 கோடி ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

சீர்மிகு தென்னை சாகுபடி:

தென்னை சாகுபடிப் பரப்பினை அதிகரிப்பதற்காக 17 இலட்சம் தரமான தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு குறைந்த விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படும். தென்னந்தோப்புகளில் சொட்டு நீர்ப் பாசன முறை நடப்பாண்டில் 20,000 ஹெக்டேரில் நிறுவப்படும் இத்திட்டம் 10 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

அண்ணா பண்ணை மேம்பாடு:

குடுமியான்மலைக்கு அருகே 10000 ஏக்கர் பரப்பளவில் செயல்பட்டுவரும் அண்ணா பண்ணை அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் அண்ணா பன்முனை வேளாண் செயல்விளக்க விதைப் பண்ணையாக மேம்படுத்தப்படும்.தோட்டக்கலை நடவுப்பொருட்கள் உற்பத்தி மேற்கொள்ளப்படும் இத்திட்டம் 21 கோடியே 80 லட்சம் ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

கூட்டுப் பண்ணையத் திட்டம்:

ஒரு இலட்சத்து 10 ஆயிரம் விவசாயிகளை ஒருங்கிணைத்து 1,100 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைத்து, வேளாண் இயந்திரங்கள் கொள்முதல்செய்ய ஒரு குழுவிற்கு ரூபாய் 5 இலட்சம் வீதம் மூலதனநிதி வழங்கப்படும்.59 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

அதிக வருமானம் தரும் ஒருங்கிணைந்த பண்ணையம்:

வேளாண்மை, தோட்டக்கலை, பயிர்ச்சாகுபடியுடன், கறவை மாடுகள், ஆடுகள்,நாட்டுக் கோழிகள், தீவனப்பயிர் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, ஊட்டச்சத்து காய்கறித் தோட்டம் ஆகிய பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக நடப்பாண்டில் 13,300 விவசாயக் குடும்பங்கள் பயனடையும் வகையில் 59 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்றிய மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

மாநில அளவில் மரபுசார் வேளாண்மைக்கான அருங்காட்சியகம் அமைக்க மாநில அரசு

நிதியிலிருந்து 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாயத்திற்கான இலவச மின்சாரம் வழங்குவதற்கு 4508 கோடியே 23 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்பணிகளை எளிதாக்க அரை இலட்சம் உழவர்களுக்கு வேளாண் கருவிகள் வழங்க மாநில அரசு நிதியில் 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மையில் சிறப்பாக செயல்படும் விவசாயிகளுக்கு பரிசு வழங்க 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

கரும்பு உற்பத்திக்கான ஊக்கத்தொகை:

கரும்பு விவசாயிகள் டன் ஒன்றுக்கு 2750 ரூபாய்க்கு குறையாமல் பெறுவதை உறுதி செய்யும் இத்திட்டத்திற்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கரும்பு உற்பத்திக்கான சிறப்புத் திட்டம்:

சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்கில் உயர் மகசூல் விதைக் கரும்புகள் வழங்குதல், பரு சீவல் நாற்றுக்களின் மூலம் புதிய கரும்பு இரகங்களின் சாகுபடியை ஊக்குவித்தல், திசு வளர்ப்பு நாற்றுக்களை வழங்குதல் ஆகிய செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படும். இத்திட்டத்திற்கு மாநில நிதியிலிருந்து 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழப்பயிர் சாகுபடியினை ஊக்குவிக்க மாநில நிதியிலிருந்து 29 கோடியே 12 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித் தோட்டத்திட்டத்திற்கு மாநில ஒன்றிய அரசு நிதியில் 95 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நோய் எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்த இரண்டு லட்சம் ஊட்டச்சத்துத் தளைகள் வழங்கும் திட்டத்திற்கு 2 கோடியே 18 இலட்சம் ரூபாய் மாநில, ஒன்றிய அரசு நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்கலையில் முதன்மை மாவட்டங்களின் செயல்பாடுகளை மேம்படுத்தும் திட்டத்திற்கு ஒன்றிய மாநில அரசு நிதியில் 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறைக்கு 1ஆயிரத்து 979 கோடியே 11 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
கடலூர் மாவட்டத்தில் பலாவிற்கான சிறப்புமையம் அமைக்க ஒன்றிய மாநில அரசு நிதியில் 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிக்கன நீர்ப் பாசனத் திட்டத்தின் மூலம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நுண்ணீர் பாசனம் ஏற்படுத்த ஒன்றிய அரசு நிதியில் 982 கோடியே 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடலூரில் அரசு தோட்டக் கலை பூங்கா அமைக்க ஒரு கோடி ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் இயந்திரமாக்கல் திட்டத்திற்கு ஒன்றிய, மாநில அரசு நிதியிலிருந்து 140 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய வேளாண் இயந்திரங்கள், கருவிகள் கொள்முதல் செய்ய 23 கோடியே 29 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீர்சேகரிப்புக் கட்டமைப்புகளை பராமரிக்க 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மழை நீரை விளை நிலங்களிலேயே சேமிக்கும் பண்ணைக் குட்டைகளை அமைக்க மாநில அரசு நிதியில் 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மானியத்தில் மின்மோட்டார் பம்புசெட்டுகள் வழங்கிட ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது.

உழவர் சந்தைகளின் கழிவுகளை உரமாக்க விற்பனைக் குழு நிதியிலிருந்து 2 கோடியே 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய உழவர் சந்தைகளை அமைக்க மாநில நிதியிலிருந்து 6 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உழவர் சந்தைகளில் விலை விவரங்களைத் திரையிடும் டிஜிட்டல் பலகைகளை அமைக்க விற்பனை வாரிய நிதியில் 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வரத்து மிகுதியுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு அருகில் சேமிப்பு வசதியுடன் கூடிய விற்பனை நிலையம் அமைக்க விற்பனை வாரிய நிதியிலிருந்து 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறைக்கு 759 கோடியே 99 லட்சத்து 19ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நவீன குளிர்பதனக் கிடங்குகளை அமைக்க மாநில அரசு நிதியில் 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இல்லம் தேடி-பண்ணைக் காய்கறிகள்- மாநகராட்சிகளில் நடமாடும் காய் கனி அங்காடிகளை அமைக்க விற்பனை வாரிய நிதியிலிருந்து 60 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம் கொல்லி மலை பகுதியில் மிளகிற்கான பதப்படுத்தும் மையம் அமைக்க விற்பனை வாரிய நிதியிலிருந்து 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் எடப்பள்ளி கிராமத்தில் ‘ஒருங்கிணைந்த கிராம வேளாண் சந்தை வளாகம்

அமைக்க மாநில அரசின் நிதியில் 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் உலர்களம் அமைக்க விற்பனை வாரிய நிதியிலிருந்து மூன்றரை கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்றுமதி மூலம் ஏற்றம் காணும் திட்டத்திற்கு மாநில நிதியில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.முதன்முறையாக ஏற்றுமதியாளராகப் பதிவு செய்பவர்களை ஊக்குவிக்கும் வகையில் 50 விழுக்காடு மானியம் அளிக்க 10 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம் தளவாடியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டுமான வசதிகள் ஏற்படுத்த மாநில அரசு நிதி 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
ஏற்றம் தரும் முருங்கை ஏற்றுமதி- சிறப்பு ஏற்றுமதி மண்டலம் அமைக்க ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் கொளத்தூர் பகுதியில் விளைபொருட்களுக்கும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்குமான நவீன விற்பனை மையம் அமைக்க மாநில நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விளைபொருளுக்கு உரிய விலை பெற மின்னணு ஏலம் உள்ளிட்ட பல்வேறு சேவைகளுக்கான சிறப்பு மென்பொருள் மூலம் விவசாயிகளுக்கும் சந்தைகளுக்கும் இணைப்பை ஏற்படுத்த மாநில நிதியிலிருந்து 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
தமிழ் நாட்டிற்கே உரிய சிறப்புப் பயிர்களுக்கு புவிசார் குறியீடு பெறும் திட்டத்திற்கு மாநில நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் வேளாண் ஆராய்ச்சியையும் வேளாண் கல்வியினையும் மேம்படுத்த 573 கோடியே 24 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் வழியில் வேளாண்மை, தோட்டக்கலைக் கல்வியை அறிமுகப்படுத்துவதற்கென 25

இலட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மேலும் ஒரு தோட்டக்கலைக் கல்லூரியை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஜீனூரில் ஏற்படுத்த 10கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதிக மகசூல் அளிக்கக்கூடிய பயிர் இரகங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த 57 இலட்சம் ரூபாய் ஒன்றிய மாநில நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொலையுணர்வுத் தொழில்நுட்பம் மூலம் முக்கியப் பயிர்கள் குறித்த தகவல்களை உருவாக்கி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்கு பயன்படுத்துவதற்காக 72 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஈரோட்டில் மஞ்சள் ஆராய்ச்சி நிலையம் அமைக்க 2 கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த 2327 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்கு 1738.81 கோடி ரூபாயும், பயிர்க் கடன் தள்ளுபடிக்கு 5000 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது

கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் இயங்கிவரும் வளங்குன்றா வேளாண்மைக்கான துறையை மேம்படுத்தி நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையமாக மாற்ற மூன்று கோடி ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறைக்கு 632 கோடியே 89 லட்சத்து 24ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மானாவாரிப் பயிர்களுக்கான ஆராய்ச்சியினை வலுப்படுத்த 50 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண் விளைபொருள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் சேமிப்புக் கிடங்கு வசதிகளை ஏற்படுத்தவும், ஏலக்கூடங்களை வலுப்படுத்தவும் ரூ.4.69 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறைக்கு 6 ஆயிரத்து 247 கோடியே 63லட்சத்து 82ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சர்க்கரைத்துறைக்கு 7 கோடியே 40லட்சத்து 83ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு (நேரடி நெல் கொள்முதல் நிலையம்) 9ஆயிரத்து 471 கோடியே 98 லட்சத்து 26ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விதைச்சான்று மற்றும் அங்கக சான்றிதழ் துறைக்கு 47 கோடியே 77லட்சத்து 47ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பட்டு வளர்ச்சிக்காக மரவகை மல்பெரி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு மானியம் வழங்க 75 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கான ஊறுகாய்ப் புல் தயாரிக்கும் அலகுகள் அமைக்க ஒரு கோடியே 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். பசுந்தீவன வங்கிகளை ஏற்படுத்துதல், கால்நடை நலம், நாட்டுக்கோழி இனப்பெருக்கப் பண்ணை நிறுவுதல் ஆகியவற்றுக்கென 27 கோடியே 12 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்குத் தேவையான சிகிச்சை பணிகளை மேற்கொள்ள 14 கோடியே 28 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் பண்ணைக் குட்டைகளில் மீன் வளர்க்க 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மீன்பண்ணைகள்,மீன்விற்பனை அங்காடிகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த 7 கோடியே 7 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத்துறைக்கு மொத்தம் 9 ஆயிரத்து 169 கோடியே 54 லட்சத்து 37 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 603 கோடியே 19 லட்சத்து 10ஆயிரம் ஒதுக்கீடு செய்ய்ப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத்துறைக்கு 1 ஆயிரத்து 243 கோடியே 66லட்சத்து 34ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழகத்திற்கு 394 கோடியே 55லட்சத்து 41ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பால்வளத்துறைக்கு 44கோடியே 37 லட்சத்து 11ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இடைக்கால நிதிநிலை அறிக்கையில் கால் நடை பராமரிப்புத்துறைக்கு 634 கோடியே 87 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

மீன்வளம்-மீனவர் நலத்துறைக்கு 35கோடியே 60 லட்சத்து 27ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் 37 கோடியே 5லட்சத்து 16ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இடைக்கால நிதி நிலையறிக்கையில் மீன்வளத்திற்கான மூலதனச் செலவுகளுக்காக 580 கோடியே 97 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைக்கு 1 ஆயிரத்து 288 கோடியே 69 லட்சத்து 91ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இடைக்கால நிதிநிலையறிக்கையில் ஊரக வளர்ச்சிக்காக 22 ஆயிரத்து 218 கோடியே 58 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

பட்டு வளர்ச்சித் துறைக்கு 76 கோடியே 94 லட்சத்து 56 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு

செய்யப்பட்டுள்ளது.

வனத்துறை -வேளாண் காடுகள், மனித- விலங்கு மோதல் 632 கோடியே 39 லட்சத்து 67ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வருவாய்த்துறை- உழவர்ப் பாதுகாப்புத் திட்டம் மாநில பேரிடர் நிவாரண நிதிக்கு(பயிர் சேதம்) 1ஆயிரத்து 547 கோடியே 82 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை சார்ந்த துறைகளின் மூலதனம் சார்ந்த செலவுகளுக்காக 2 ஆயிரத்து 776 கோடியே 75 லட்சத்து 5ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2021-22ஆம் ஆண்டில் வேளாண்மைக்கும், அதை சார்ந்த துறைகளுக்கும் மானியக் கோரிக்கைகளின் கீழ் 34 ஆயிரத்து 220 கோடியே 64 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் வருவாய் செலவினம் 31 ஆயிரத்து 443 கோடியே 89லட்சத்து 94ஆயிரம் ரூபாய் ஆகும். மூலதனச் செலவினங்களுக்கு 2ஆயிரத்து 776 கோடியே 75 லட்சத்து 5ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடைக்கால நிதி நிலை அறிக்கையில் வேளாண்மைக்கும் அதைச் சர்ந்த துறைகளுக்கும் 11ஆயிரத்து 982 கோடியே 71 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

நிதிநிலை அறிக்கையில் பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு ஒன்றிய மாநில அரசின் நிதியில் செயல்படுத்தப்படும் என பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர எவ்வளவு ஒன்றிய அரசின் நிதியிலிருந்தும், மாநில அரசின் நிதியிலிருந்தும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்த தெளிவை ஏற்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த் தேசம் வெளியீட்டுக்குழு

**பெருந்தொற்றுக்காலம் விரைவில் முடிந்துவிடும் எனக்கொண்டு இயல்பான இயக்கச் செயல்பாடுகளுக்குத் திட்டமிட வேண்டியுள்ளது எனத் தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு கருதுகிறது.**

**பெருந்தொற்றுக் காலத்தை இயன்ற வரை பயனுள்ளதாக்கிக் கொண்டோம். முகில்களின் மேல் அறிவு கொளுத்திய காலமாகவே அதைக் கருதலாம். இணைய வழியில் தோழர் சமந்தாவின் சூழலியல், பொருளியல் வகுப்புகளும், தோழர் தியாகுவின் அரசியல் வகுப்புகளும், நாம் நடத்திய பல்வேறு கருத்தரங்குகளும் அவற்றில் கலந்து கொண்டவர்களின் அறிதலையும் புரிதலையும் வளர்த்துக் கொள்ள உதவின.**

**அவ்வாறே உரிமைத்தமிழ்த்தேசம் இதழையும் தொடர்ந்து இணையவழியில் வெளியிட்டுஅரசியல், பொருளியல், சூழலியல், வரலாற்றியல் கல்வி புகட்டிவந்தோம்.**

**என்றாலும் இந்தப்பணிகள் ஒரு சிறு வட்டத்துக்குள்ளேயே சுருங்கி நின்றதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். பெரும்பாலார் இன்றளவும் இணையத்துக்கும் சமூக ஊடகங்களுக்கும் புறத்தே தான் நிற்கின்றனர். இவர்களைச் சென்றடைய நம் செய்திகளை விரைவில் அச்சுவடிவாக்க வேண்டும். தோழர் சமந்தாவின் சூழலியல் கட்டுரைகளையும், தோழர் தியாகுவின் தமிழ்நாடு இனி பாடக்குறிப்புகளையும், ஈழம் மெய்ப்படும் இடுகைத் தொடரையும் விரைவில் அச்சிலேற்றி நூல் வடிவாக்க வேண்டும். அடுத்தடுத்து மற்றப் பல படைப்புகளுக்கும் நூல்வடிவம் கொடுக்கவேண்டும். நம் பழைய வெளியீடுகளையும் மீள்பதிப்புச் செய்ய வேண்டிய தேவை உள்ளது.**

**எல்லாவற்றையும் எல்லாரிடமும் கொண்டு சேர்க்கும் வகையில் எளியமக்கள்-பதிப்புகளாக வெளியிட வேண்டும். இந்தப் பொறுப்பைச் செவ்வனே செய்திட தமிழ்த்தேசம் வெளியீட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது:**

**தமிழ்த்தேசம் வெளியீட்டுக்குழுவில் நான்கு உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள். மதுரை வழக்கறிஞர் தோழர் நா. கதிர்வேல்அமைப்பாளராகவும், தோழர்கள் பால்ராஜ், அருண்மாசிலாமணி, சுந்தர் ஆகியோர் குழு உறுப்பினர்களாகவும், தோழர் தியாகு பதிப்பாசிரியராகவும் பொறுப்பு வகிப்பார்கள்.**

தமிழ்த்தேசம் வெளியீட்டுக்குழு எளியமக்கள்-பதிப்புகள் வெளியிட இயன்றவரை எளிய மக்கள் தரும் நன்கொடைகளையே நம்பியுள்ளது. பணம் அனுப்ப அல்லது வைப்பகக்கணக்கில் செலுத்த:

**நா. கதிர்வேல், வழக்கறிஞர்,**

**மகராஜன்நகர், 5/242, ஆசிரியர்குடியிருப்பு,**

**விரகனூர், மதுரை 625 009.**

**பேச: 9894913820மின்னஞ்சல்: vel.kathir325@gmail.com**

**Bank Details:**

**N. Kathirvel,**

**Tamilnadu Mercantile Bank,**

**Iravathanallur Branch,**

**Madurai. Account No. 343100050300634 I**

**FSC Code: TMBL0000343**